# வெளிச்சம்

கார்த்திகை
மார்கழி
(1991)




12-1991
நகர சபை
யாழ்ப்பாணம்

விடுதலைப்புலிகள்
கலை
பண்பாட்டுக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னிறைவுப் பாதையில் தமிழீழம்!
## உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளிப்பீர்.



குரக்கன் பிஸ்கட்,
தேன்துளி இனிப்பு வகைகள்,
சமுத்திரா தாவர கடல்உணவு,
விவசாய உபகரணங்களான,
மண்வெட்டி மருந்து தெளிகருவி,
உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சணல்கயிறு,
நூல்வகைகள்,
பனை, தெங்கு உற்பத்திப் பொருட்கள்
இன்னும் அன்றாட பாவனைக்குரிய
அனைத்துப் பொருட்களும்,

தொடர்பு கொள்ளுங்கள்:

**உதயம் பல்பொருள் அங்காடி,**

**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

☐ தமிழீழ உற்பத்திப் பொருட்களின் காட்சியகம்,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கல்லாலும்; மண்ணாலும்
கட்டிய சுவர்தான்.
என்றாலும் இரத்தம் கசிகிறது.
விடிவுக்காய் விழுந்த
வேங்கைகள் நினைவுச்
சுவரொட்டி ஒட்டிச் சிவந்த சுவர்முகம்
''வெளிச்சம்'' தேடிய வீரரை எண்ணி
கற்சுவர்கூடக் கசிந்து வடிகிறது.
இங்கே
குட்டிச் சுவரே ''நினைவுக் குறிப்பு''
எங்கள் மண்ணில் எழுந்த மதில்களே
நாளைய பள்ளிச் ''சரித்திரப் புத்தகம்''

அ 4-12-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்

கார்த்திகை - மார்கழி. 1991
இதழ் - 2

அன்பான ''வெளிச்சம்'' விரும்பிகளே!

அதிகமான கலை, இலக்கிய இதழ்கள் தமது முதலாவது, இரண்டாவது இதழ்களில் சண்டப்பிரசண்டச் சத்தியபிரமாணங்களைப் பிரகடனப் படுத்திவிட்டு, மூன்றாவது இதழுடன் மூச்சை நிறுத்திக் கொள்வது வழக்கமாகிவிட்ட எம் மண்ணில், ''வெளிச்சம்'' எந்த வித உத்தரவாத உறுதி மொழிகளையும் வழங்கமாட்டாது. ஆனால் எமது சக்திக்குப்பட்ட சகலதையும் பயன்படுத்தி 'வெளிச்சம்'' இதழை முடியும் வரை வெளிக்கொண்டுவர முயற்சிப்போம்.

முதலாவது ''வெளிச்சம்'' இதழுக்கு நீங்கள் வழங்கிய பேராதரவும், பாராட்டுக்களும் வெளிச்சத்தை வெளிச்சமாக்கித்தந்த விமர்சனங்களும் எமக்கு வலிமை சேர்த்துள்ளது.

பிரசவ வயலில்லாத காரணத்தால் படைப்பு விதை எறியவில்லை. அதனால் ஆக்கங்களை அறுவடை செய்ய முடியாதிருக்கிறது. என்ற கருத்து இங்கு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகவே பேசப்படுகின்றது.

என்றாலும் இங்கு எழுதுவதற்கு ஏதும்தடையாக இல்லை. ஏனோசில காரணங்களால் தங்களுக்குத் தாங்களே படைப்பாளிகள் தான் தடைபோட்டிருக்கின்றனர். ''வெளிச்சம்'' இதழுக்காக படைப்புக்கள் தேடி, கவிஞர்கள், எழுத்தாளர்கள் வீட்டுப் படலைகளை தட்டித்தட்டி ஏமாற்றத்துடன் அலுத்து வந்து அமரும் போது மேற்கண்ட கருத்து மீண்டும், மீண்டும் உறுதியாகின்றது.

இங்கு பேச்சுப் பல்லக்கு, தம்பிதான் கால்நடை, கூட்டத்தில் கூடிநின்று பேசிக்கலைகின்றோம். ஆனால் ஆக்கம், படைப்பு என்பவற்றைத்தேடப் போனால் அவை குறிஞ்சி மலராகி விடுகின்றது...... இது ஏன்?

இங்கு எழுதுவதற்கு எதுவுமே இல்லையா? பாடுவதற்கு கருப்பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? இங்கு தான்... ஒவ்வொரு சாவுக்குப் பின்னும் ஒரு சரித்திரம் விரிந்து கிடக்கிறதே, ஒவ்வொரு சம்பவத்திற்குப்பின்னாலும் ஒரு வரலாறு புதைந்து கிடக்கிறதே, போராட்டத் தீ எவரையும் வந்து தொடவில்லையா? சுடவில்லையா.? தீர்மானிப்பவர்கள் நீங்கள் தான்.

''வெளிச்சம்'' காத்திருக்கிறது.

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

# தலைவன் வாழி!



26 - 11 - 91
தலைவர் வே. பிரபாகரன் அவர்களின்
38வது பிறந்த நாளிற்கு எமது வாழ்த்துக்கள்
''வெளிச்சம்'

☐ புதுவை இரத்தினதுரை

பொங்குமா கடலின் ஓரம்
பிறந்ததோர் புயலின் மையம்
தங்கமண் நெடுநாள் செய்த
தவத்தினால் உதித்த பையன்
வெங்களம் ஆட என்றே
வேங்கையாய் நிமிர்ந்த தீரன்.
எங்களின் தலைவன்; "தம்பி"
இந்தநூற் றாண்டின் வீரன்.

தூங்கிய தமிழர் நெஞ்சை
துடித்திடச் செய்தோன்; ஈழம்
வாங்குவோம் எழுக! என்றே
வாலிப மனத்தை வென்றோன்.
வேங்கைகள் சாவுக் கஞ்சா
வீரர்கள் என்றே சொல்லத்
தாங்கிய தலைவன்; எங்கள்;
தளபதி! அன்புத் தம்பி!

ஆயிரம் களங்கள் கண்ட
அண்ணனை; தமிழீ ழத்தின்,
பாயிரம் ஆகப் போகும்
பரணியின் தலைவன் தன்னை
ஏவிய படைகள் வந்து
என்னடா செய்யும், எங்கள்,
காவியம் களத்தில் வெல்லும்.
காலங்கள் அவன்பேர் சொல்
- லும்.

எத்தனை புயல்கள் வந்து
எழுந்தன; தலைவன் தன்னை;
எத்தனை படைகள் ஒன்றாய்
எதிர்த்தன, துரோகக் கும்பல்
எத்தனை விதமாய் சொல்லி
இகழ்ந்தன, இடையில் விட்டு
எத்தனை பேர்கள் சென்றார்.
இறுதியில் தலைவன் வென்
- றான்.

கொட்டடா! முரசு: எங்கே
கொம்பது எடுத்து ஊது.
தட்டடா! கைகள், எங்கள்
தலைவனைப் பாடு, எம்மை
முட்டிய துயரம் யாவும்
முடிந்திடும், புலிகள் சேனை
எட்டிய வரையும் பாய்ந்து
எழுந்திடும், தலைவன் வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குண்டுமழையில் குளிப்பவர்கள்.

□ யோ. யோகி.

குண்டு மழைக்குள் குளிப்பவர்கள்
நின்று அதற்குள் சிரிப்பவர்கள்
நஞ்சை அணிந்து நடப்பவர்கள்
நல்ல தமிழ் பேசிக் களிப்பவர்கள்

குண்டு மழையை தாய் மண் தடுக்கும்
பதுங்கு குழியாய் அணைத்தே காக்கும்
பாய்ந்து தாக்கும் புலிகள் எமக்கு
தலையும் மார்பும் தானே குடைகள்.

காலும் கையும் கண்ணும் போகும்
இனிய உடலும் பிரிந்தே போகும்
உயிராய் இருக்கும் ஆயுதம் இழக்கோம்
இழந்த மண்ணை மீட்டே முடிப்போம்.

புலிக்கொடி ஏந்தி போரினில் குதிப்போம்
ஏழுதிசையிலும் எதிரியை அழிப்போம்
கோட்டையில் இன்று புலிக்கொடி
- பறக்குது
கோணமாமலையிலும்புலிக்கொடி பறக்கும்

வெளிச்சம்

கலை, இலக்கிய சமூக இதழ்.

இதழ் அமைப்பு:

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

ஓவியம்

''தயா''

உருவாக்கம்:

"ஆசிரியர் குழு"

அச்சு,

ம, மரியதாஸ்

வெளியீடு:

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக் காலங்களில் முதன்மைப்படுத்தப்படும், போராட்டக் கவிதைகள்.



□ பொன். பூலோகசிங்கம்

**''ஒவ்வொரு உண்மைக் கவிஞனது சிந்தனை வீச்சும் கூர்மையடைந்து செல்வது நியதி. இதனால் அவனது உள்ளத்து உணர்வுகள் எரிமலைக் குழம்பாகத் தோற்றம் பெறுமே தவிர பனிக்கட்டியாக வார்க்கப்படமாட்டாது.**

ஆத்மார்த்த விடயங்களை வெளிக்கொணரும் ஊடகங்கள்கலை இலக்கிய வடிவங்களாகும். சில வார்த்தைகளால் சொல்லக் கூடியவை. சில சொல்ல முடியாத உணர்வுகளாகவும் எண்ணங்களாகவும் அமைந்து விடுகின்றன. உள்ளத்து உணர்வுகளை வார்த்தைகளால் வடிவமைக்கும் ஒரு ஊடகமாகக் கவிதை அமைந்து விடுகின்றது. உள்ளத்தின் உண்மையொளியில் புடம் போடாத எவரது வார்த்தையிலும் கவித்துவம் களைகட்ட நியாயமேயில்லை. ஒருவன் கட்புல வழியாகவோ, செவிப்புல வழியாகவோ உள்வாங்கிக் கொண்டதை வெவ்வேறு நோக்கில் வெளிப்படுத்திப் பரிமாறிக் கொள்ளலாம். எதிலும் கவித்துவம் குன்றாமையே ஆதார சுருதியாகும்.

தாஜ்மகாலைப் பார்த்த ஒரு கவிஞன் காலமண்ணில் ஓர் கண்ணீர்த்துளி (*Tear drop on the sands of Time*) என்றான். இன்னொரு கவிஞனோ அதைப் பார்த்து விட்டு அது கல்லால் அமைந்த கவிதை (*Petrified Poetry*) என்றான். இன்னொரு கவிஞன் தாஜ்மகாலைப் பற்றி கேட்டுவிட்டு உறைந்து போய்க் கிடக்கும் உன்னதமான சங்கீதம் (*Frozen music*) என்றான். மூவரும் உள்வாங்கிக் கொண்டது ஒரு விடயத்தையே ஆனால் வெவ்வேறு கண்ணோட்டத்தில் அதனை வெளிப்படுத்திப் பரிமாறிக் கொண்டனர். இவர்களில் எவருமே யானையைப் பார்த்த குருடர்களாக இல்லாமையே இங்கு உயிர்த்துடிப்புள்ள உன்னத கருத்துக்கள் வரிவடிவம் பெற காரணமாயிற்று. இங்கு மேலோங்கி நிற்பது கவித்துவமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டச் சூழல் பெருமளவில் பிரசவிக்கும் இலக்கியம் கவிதையேயாகும். இதற்கு எந்தநாடும் விதிவிலக்கல்ல போராட்டம் முனைப்படைந்து கொண்டு செல்லும்போது ஒவ்வொரு உண்மைக் கவிஞனது சிந்தனை வீச்சும் கூர்மையடைந்து செல்வது நியதி. இதனால் அவனது உள்ளத்து உணர்வுகள் எரிமலைக் குழம்பாகத் தோற்றம் பெறுமே தவிர பனிக்கட்டியாக வார்க்கப்படமாட்டாது ரோமாபுரி எரியும் போது ஒரேயொரு நீரோ மன்னன் தான் பிடில் வாசித்தான். ஏனெனில் கொடுங்கோலின் முன்னே சங்கீதம் எடுபடாது ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்பது ஒரு மதவாதியின் மந்திரமல்ல. மாறாக அது ஒரு புரட்சிக் கீதம் அடக்குமுறைக்கு அடிபணிய மறுக்கும் அடிமனதின் ஆவேசக்குரல் என்பதே சரியானதாகும். வீரசுதந்திரம் வேண்டி சுதந்திரக் கனலை மூட்டிய சுப்பிரமணிய பாரதி தனக்குத் தொழில் கவிதை என்று முழக்கமிட்டு இமைப்பொழுதும் சோராது நாட்டு விடுதலைக்காக உழைத்தான். அவனது கருத்தில் மலர்ந்தவை அழகிய பூக்கள் அல்ல. அவை அக்கினி புஸ்பங்களேயாகும். கொடியோர் செயல் அறுக்க தன் பேனையை கொலைவாளாகத் தூக்கிய பாரதிதாசனும் விதிவிலக்கல்ல.

ஒரு விடுதலைப் போராட்டம் பல்வேறு பரிமாணங்களுக்கூடாக வளர்ச்சியடைந்து கொண்டு செல்லும்போது ஒடுக்கு முறையாளனின் அடக்குமுறைகளும் அதிகரித்துக் கொண்டே செல்லும் இரண்டிற்குமிடையில் எப்போதும் சமாந்தரமான வளர்ச்சியும் இருக்கும். இக்காலகட்டத்தில் அங்கு இடம் பெறும் ஒடுக்குமுறையானது மனிதநேய மற்ற நடவடிக்கைகளும் அவற்றை எதிர்த்து நிற்கும் போராளிகளது தன்னலமற்ற தியாகமும் வீரமரணமும் கவிஞர்களது உள்ளத்தில் சூடேற்றிய உணர்வுகளாகக் கொந்தளிக்கும் போது அவை மக்களின் ஆவேசக் குரலாகவும் ஆத்மநாதமாகவும் வெளிப்படுகின்றன.

உலகெங்கும் பரந்து வாழும் நீக்ரோ மக்கள் தம்மீதான அடக்கு முறைக்கு எதிராக சர்வதேச ரீதியாக கிளர்ந்தெழுந்து அதனை ஒருமுகப்படுத்தி தமது போராட்டத்தை பலமுள்ள அமைப்பாகக் கட்டி எழுப்பும் நோக்குடன் ''கறுப்பர் சக்தி'' (*Black Power*) என்ற கோட்பாட்டை உருவாக்கினர். இக்கோட்பாட்டினால் கவரப்பட்ட பல நீக்ரோக்கள் தம்மைக் கவிஞர்களாக அடையாளம் காட்டினார்கள். கறுப்பர் சக்தியை உள்வாங்கிக் கொண்ட பிரபல நீக்ரோ கவிஞர் நிக்கியோவானி தமக்கு நேர்ந்த அவலங்களைப் பின்வருமாறு கவிதையாக எடுத்துக்கூறி இறுதியில் ஒருபிரகடனத்தையும் செய்கின்றார்.

''நான் சூறையாடப்பட்டேன்
நையப் புடைக்கப்பட்டேன்
என்னுடைய ரெலிவிஷன்
இரண்டு மோதிரங்கள்
ஆபிரிக்க அச்சுப்பிரதி
இரண்டு துவக்குகள்
எல்லாவற்றையும் எடுத்தார்கள்
இந்த உயிரை எடுத்தாலும்
இந்தப் புரட்சி நிற்காது''

இவரைவிட தென்னாபிரிக்க போராட்ட கவிஞர்களாக டெரன் எல். லீ, லங்ஸ்டன் விரியூஸ் முதலான பலர் இனங் காணப்பட்டுள்ளனர்.

## சீன இலக்கியத்தில் போராட்ட கவிதைகள்

ஒரு தேச விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் தாங்கிய போராளிகளுக்கும் - மக்களுக்குமிடையிலான தொடர்பு எண்ணெய்க்கும் எரியும் திரிக்கும் இடையிலான தொடர்பை போன்றது. மக்கள் ஆதரவு பெருமளவில் இருக்கும் போது தான் ஒரு போராளி தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த முடியும். ஆயுதப்போராட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் போராளிகளுக்கும் - பொதுமக்களுக்கு மிடையிலான தொடர்பு நீர் நிரம்பி வழியும் தண்ணீர்த் தொட்டிக்கும் மீன்களுக்கு மிடையிலான தொடர்பைப் போல் இருக்க வேண்டும் என ''தீவிரவாதமும் மக்கள் தொடர்பும்'' என்ற நூலில் பிரபலஆராய்ச்சியாளரான வோல்டர் லக்கூர் (*Wallter Laqueur*) குறிப்பிடுகிறார். அவர் அதனை ஆங்கிலத்தில் கூறும்போது-

> *''The Terrorist needs Democratic Permissivenees as a Fish needs Water''*

என்கிறார். இக்கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டு பிரபல சீனக்கவிஞர் வாங் - ஷி ஷிவாங் செஞ்சேனைவீரர்களுக்கும் - பொதுமக்களுக்குமிடையிலான தொடர்பைப் பின்வருமாறு கவித்துவம் குன்றாமலும் கவிதையின் நயம் சுவைபடவும் கூறுகின்றார்.

இந்த இரவின் மோனத்தில்
இந்த வீரர் பயண சிப்பங்களோடு
மேலும் விரைகின்றார்கள்
வேகமான தாவல் - ஆனாலும
மிருதுவாக!
இவர்களைப் பாதுகாக்கும்
விவசாயிகளின் தூக்கம் கலைவதை
இந்த வீரர் விரும்பவில்லை
மறுநாட் காலை-
வைகறை மலர்ந்தது
விழித்தெழுந்த கிராமவாசிகள் செஞ் - சேனை
வீரர்கள் சென்றிருப்பதைக் கண்டு - கொண்டனர்
எல்லாத் தண்ணீர் தொட்டிகளும் - நிரம்பி வழிந்தன.
எல்லா வாசல்களும் கூட்டப்பட்டிருந்தன
வெள்ளையடிக்கப்பட்ட சுவரில் தெரிந்த
துண்டுக்காகிதம் சொன்னது—
''நன்றி போய் வருகின்றோம்''

## வியட்னாமிய கவிதைகள்

''ஒரு கவிஞன் போராட்டக் கவிதைகளைப் படைத்தால் மட்டும் போதாது போராட்டத்திற்கு தலைமை தாங்கவும் வேண்டும்'' என வியட்னாமிய தலைவர் கோச்சிமின் எழுதினார். கவிஞர் பைரனின் வரலாறு இக்கருத்திற்கு முன்னோடியாக அமைந்தது ஆங்கில நாட்டுக் கவிஞரான அவர் அங்கிருந்து பல ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து கிறீசுக்கு வந்து கிரிமியப் போரில் தானே நேரிடையாகப் பங்களிப்புச் செய்தார். உலகில் பல கவிஞர்கள் போராட்டக் கவிதைகள் எழுதியுள்ளார்கள். ஆனால் போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்கள் மிகச் சிலரேயாகும்.

வியட்னாமிய தலைவர் கோச்சிமினின் கவிதைகள் வியட்கொங் வீரர்களுக்கு ஊக்கமாத்திரைகளாக விளங்கின. தமது தேசவிடுதலைக்காக ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய ஆசை கொண்ட கோச்சிமின் ஒருமுறை சீனாவுக்குள் நுழைந்தார். அவரை உளவாளி என நினைத்த சீனப் பொலிசார் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். ஏறக்குறைய பதின்மூன்றுமாத சிறைவாசத்தின் போது கோச்சிமின் எழுதிய சிறைக்குறிப்புகள் சிறந்த கவிதைகளாக போற்றப்படுகின்றன. பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ''நாலாயிரம் ஆண்டு வியட்னாமிய வரலாற்றில் புடமபோட்டு உருவான தனிவகை உருக்கை நிகர்த்தவை அவரது கவிதைகள்'' என விமர்சகர்கள் கூறியுள்ளார்கள்.

## தெலுங்கானா போராட்டம்

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாறு பல விசித்திரமான நிகழ்ச்சிகளைக் உள்வாங்கிக் கொண்டது. ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்தியாவின் அரசியல் மேலாதிக்கத்தையும் பொருளாதார சுரண்டலையும் மேற்கொண்ட அதேவேளையில் இந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவின் பல்லின சமூக அமைப்பிலும் பல்வேறு வடிவங்களில் ஒடுக்கு முறைகளையும் கையாண்டது. பிரித்தானிய ஆட்சியாளருக்கெதிராக தேசிய இயக்கங்களை நடாத்தியவர்களும் முழு இந்திய மக்களது நலனையும் முதன்மைப் படுத்தாமல் தமது வர்க்கம் சார்ந்த நலன்களைப் பேணுவதிலேயே அக்கறையுடையவர்களாக இருந்தார்கள்.

''முதலாவது இந்திய சுதந்திரப்போர்'' என அறிஞர் கார்ல் மாக்ஸ் அவர்களால் வர்ணிக்கப்பட்டதும் ''சிப்பாய்க்கலகம்'' என வரலாற்றாசிரியர்களால் வரையப்பட்டதுமான 1857ம் ஆண்டு கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய ஜான்சிராணி தாந்தியா தோபே முதலானோர் இந்தியாவின் நிலப்பிரபுக்களதும் குறுநில மன்னர்களதும் நலன்களிலும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் கைவைக்கக்கூடாது என்ற கருத்தையே வலியுறுத்தினார்கள். இந்தியாவின் தேசிய இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய மகாத்மாகாந்தியும் தாம் காண விரும்பும் நவ பாரதம் ஒரு இராம இராச்சியமாக இருக்க வேண்டுமென்றே குறிப்பிட்டார். அந்த இராம இராச்சியம் எப்படி அமையவேண்டும் என்று அவரிடம் கேட்கப்பட்ட போது

''நான் விரும்பும் சுதந்திர இந்தியாவில் மன்னர்களும் உண்டு; குடிகளும் உண்டு. அங்கு நிலப்பிரபுக்களும் இருப்பார்கள்; விவசாயிகளும் இருப்பார்கள் அதுதான் என்னுடைய ராம ராஜ்யம்'' என்று பதிலளித்தார்.

இந்திய மக்கள் மத்தியிலான வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைந்திருப்பதை அவதானித்த பிரித்தாளும் சூழ்ச்சியில் கைதேர்ந்த பிரித்தானியர்கள் அடக்குமுறைச் சட்டங்களை அமுல்படுத்தி இந்திய விவசாயிகளின் நிலங்களைச் சூறையாடி இந்திய ஜமீன்தாரர்களிடமும் நிலப்பிரபுக்களிடமும் ஒப்படைத்தார்கள். தமது சொந்த நிலத்தைப் பறிகொடுத்த இந்திய விவசாயிகள் ஆங்காங்கே ஆயுதம் தாங்கிய பல கிளர்ச்சி

விலங்கினுள் முடங்கல்
உனது விடுதலை
தகர்த்திடு!
மீட்டெடு உனது நிலத்தை!
சேர்வினுள் நீள்தல்
இழிதென வாழ்நிலை —
விழித்திடு —
உதைத்திடு இனியுன் நிலையை!
தழுவலுள் உயர்தல்
சுதந்திர நினைவதை —
ஆர்த்தெழு —
உருட்டிடு இறுகிய பகைமையை!
போரினுள் விடிதல்
உயர்த்திடு கரங்களை —
ஓங்கிடு
வாங்கிடு இன்னொரு சூரியனை!

## இன்னொரு சூரியனை...

செ: பொ. சிவனேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நடாத்தினார்கள். ஆயுதப் போராட்டத்தையும் அதன் இலக்கான அடிப்படையான சமூக மாற்றத்தையும் அறவே விரும்பாத அறிவு ஜீவிகளான வரலாற்று ஆசிரியர்கள் இந்திய விவசாயிகளது போராட்ட முன்னெடுப்புகளை கால வெள்ளத்தில் ஆழ மூழ்கடித்து விட்டார்கள்.

இந்திய விவசாயிகளது ஆயுதம் தாங்கிய போராட்டமானது இரு முனைப்பட்டதாக விருந்தது. ஆக்கிரமித்து நின்ற வெள்ளையர்களுக்கும் தமது நிலங்களை சூறையாடிய ஜமீன்தார்களான கொள்ளையர்களுக்கும் எதிரானதாக்கமுள்ள பல கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபட்டார்கள். இந்த வகையில் 1755 ல் வெடித்துக் கிளம்பிய சந்தால் கலவரம் 1860 ல் வங்காளத்தில் இடம்பெற்ற அவுரி கிளர்ச்சி இதே காலப் பகுதியில் மகாராஸ்டிரத்தில் எழுந்த மராட்டா விவசாயிகள் கலகம் 1921 ல் கேரள முஸ்லீம் விவசாயிகள் நடாத்திய மாப்பிள்ளை கலகம் ஆந்திராவில் அல்லூரி சீதாராம ராஜு தலைமையில் நடந்த ஆயுதமேந்திய போராட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இத்தகைய ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகளில் தலைசிறந்த போராட்டம் தெலுங்கானா போராட்டமாகும். தளபதி ருத்திரையா தலைமை தாங்கிய தெலுங்கானா போராட்டம் இந்தியாவின் அரசியல்-சமூக பொருளாதார தளங்களில் ஊறிக்கிடந்த பல பிரச்சினைகளை துல்லியமாக வெளிக் கொணர்ந்தது. இப்போராட்டத்தால் பெருமளவில் ஆகர்சிக்கப்பட்ட கவிஞர் செர பண்டராஜு சிறைவைக்கப் பட்டிருந்த போது பல போராட்டக் கவிதைகளை இயற்றினார். ஆந்திரப் பிரதேசத்தின் இலக்கிய வானில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அக்கவிஞனின் ஒரு கவிதை அடக்குமுறைக்கு எதிரான ஒரு போர்ப்பிரகடனம் போல் அமைந்துள்ளது. அக்கவிதை பின்வருமாறு:

''என் புரட்சிப் பாட்லின் பல்லவியை
என் பாதச் சுவடுகளிலே
பிடித்துவிட வேண்டுமாம்
அதற்காக
என் கால் தூசியையும்
ஆராய்ச்சி செய்ய எடுத்து அனுப் -
புகிறார்கள்
என்னுடைய குரல் குற்ற முடையது
எனது சிந்தனை அராஜகமானது
ஏனெனில்
அவர்களுடைய பாடலுக்கு
நான் கைத்தாளம் போடவில்லை
அவர்களை எனது தோளில் சுமந்து
செல்லவில்லை
என்னைச் சதிகாரன் என்றழைப்பதற்கு
சட்டப்புத்தகம் அவர்களுக்கு
ஆதாரமாய் இருக்கிறது
எல்லா மதங்களும்
பொதுவான மூடத்தனத்தை
மறைத்து வைத்திருப்பது போல
அவர்கள் தங்கள் வர்க்க நலன்களை
எல்லாச் சட்டங்களின்
புனித ஒப்புதலின் கீழ்
புதைத்து விடுகிறார்கள்
ஆனால் அவர்களுடைய
மதத்திற்கோ சட்டத்திற்கோ இசைவாக
ஒரு ராகம் கூட
என்தொண்டைக் குழியிலிருந்து வராது''

## பாலஸ்தீன கவிதைகள்

1948 ம் ஆண்டு மத்திய கிழக்கில் அமெரிக்காவின் துணையோடு இஸ்ரவேல் என்ற யூதநாடு தோற்றம் பெற்றதோடு பலஸ்தீனர்கள் தமது நாட்டை இழந்து போனார்கள். தமது தாயகத்தைப் பறி கொடுத்த அவர்கள் தமது தாயகத்தை மீட்டு எடுக்க வேண்டும் என்ற உணர்வை மட்டும் பறிகொடுக்கவில்லை. இன்று உலகம் பூராவும் அகதிமுகாம்களில் சிதறி வாழும் அம்மக்களின் உரிமைக்குரலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கவிஞர்கள் தோற்றம் பெற்றுள்ளார்கள். அவர்கள் தமது ஆதங்கத்தை கவிதை யாக்கியுள்ளார்கள் அவை பலஸ்தீனர்களின் போராட்ட கவிதை இலக்கியமாகப் போற்றப்படுகின்றன.

## தமிழ் ஈழப் போரும் கவிதை இலக்கியமும்

தமிழ் ஈழப் போராட்ட வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தமிழர் போராட்டம் உரிமைகளுக்கான போராட்டமாக உருவெடுத்து நின்ற வேளையில் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் 'தமிழன் கனவு' என்ற நூலை வெளியிட்டார். இது ஒரு சிறந்த கொள்கை முன்னெடுப்பு கவிதை நூலாக விளங்குகின்றது. தமிழர்களுக்கான தமிழ் அரசு ஒன்றின் தோற்றப்பாடு இக்கவிதை நூலின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது கவிஞர் இத்தமிழ் அரசை சாத்வீக வழியிலான போராட்ட வடிவின் தளத்தில் நின்று பார்த்தாலும் ஆயுதப் போராட்டத்திற்கான கட்டியங்கள் ஆங்காங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவரது இன்னொரு கவிதையான

''வெறிகொள் தமிழர் புலிப்படை-அவர்
வெல் வார் என்பது வெளிப்படை.''

என்ற வரிகள் தீவிரவாத இளைஞர் சக்திக்கு ஊக்கமளித்தது. தமிழர் உரிமைப் போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் கவிதை யாத்தவர்களில் மகாகவி உருத்ரமூர்த்தி, கவிஞர் நீலாவணன், கவிஞர் முருகையன் ஆகியோர் சிறப்பிடம் பெற்றுள்ளார்கள். கவிஞர் முருகையன் அவர்கள் இன்றும் தமது கவிதையாற்றலை பல்வேறு பரிமாணங்களுக் கூடாக வெளிப்படுத்திவருகின்றார்.

பேரினவாதிகளின் ஒடுக்கு முறைகள் பல்வேறு நிலைகளினூடாக விஸ்தாரம் பெற்ற போது தமிழர் உரிமைப் போராட்டம் ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமாகப் பரிணாமம் பெற்றது. இதனால் தமிழர் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றம் பெற்றது.

இக் காலகட்டத்தில் பல ஈழத்துக் கவிஞர்கள் போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்டார்கள் கவிதை பற்றிய சிறந்த புலமைப் பதிவுடன் ஆயுதப் போராட்டத்திற்குள் காலடி எடுத்துவைத்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் இலக்கியத் துறைப்பங்களிப்பு பல புரட்சிப்பாடல்களாக வடிவம் பெற்றதோடு பரந்தளவில் போராட்டம் பற்றிய பிரக்ஞையை மக்கள் மயப்படுத்தலாயிற்று. ''ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை'' என்ற காசியின் கவிதை வரிகள் எப்படி தமிழர் ஆட்சியுரிமைக்கான நியாயபூர்வமான கோரிக்கையின் ஒரு கருத்தமைவாக அமைந்ததோ அதேபோல புதுவை இரத்தினதுரையின் ''இந்த மண் எங்களின் சொந்த மண்'' என்ற வரிகள் தாயக மண் மீட்புப் போருக்கான உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடாக வடிவம் பெறலாயிற்று

ஈழத்துப் போராட்டக் கவிஞர்களில் தாக்கமுள்ள பங்களிப்பை வழங்கிய இன்னொரு கவிஞர் வாஞ்சிநாதன் ஆகும். இவரது கவிதைகள் அடங்கிய தொகுப்பு ''தமிழரின் தாகம்'' என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஓவியம், கதை, கட்டுரை, என தனது பல்துறை ஆற்றலை வெளிப்படுத்திய மறைந்த போராளி கப்டன் சாளி (சாள்ஸ் ஜெகோ நேசன்-நவாலி) பல போராட்டக் கவிதைகளையும் இயற்றியுள்ளார். 1987ம் ஆண்டு இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்த இந்திய இராணுவம் ஈழத்து மண்ணில் பல இந்தியச் சிறைகளை, உருவாக்கிப் பல போராளிகளை சிறைக்குள் தள்ளியது. ஆயுதப் போராட்டத்தில் பின்னடைவை எதிர்பார்த்து இந்தியா மேற்கொண்ட மேற்படி செயல் பல போராளிகளைக் கவிஞர்களாகப் புடம் போடும் ஒருபட்டறையாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இன்று பல போராளிகள் படைப்பாளிகளாக ஒரு கையில் யுத்தக் கருவியோடும் மறு கையில் எழுது கோலுடனும் போராட்டத்தில் பங்களிப்பு செய்து வருகிறார்கள்.

ஈழத்தில் வெளிவந்த பல போராட்டக் கவிதைகளில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளைத் தாங்கிய ஒரு தொகுப்பு நூலாக 1986 ம் ஆண்டு வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்'' என்ற கவிதைத் தொகுப்பு நூல் போராட்ட உணர்வு ஊட்டங்களையும் ஏற்படுத்தியது. தமிழியல் வெளியீடான இந்தத் தொகுதியில உள்ள கவிஞர்கள் சிலர் அன்று பேசிய குருதியும் போர்க்களமும் மரணமும் தியாகமும் இன்று பாசாங்குள்ளவையாகவும் போலித்தனம் மிக்கவையாகவும் செயற்கையானவையாகவும் காலம் அடையாளம் காட்டியுள்ளது.

ஈழத்தின் இன்றைய கவிஞர்களில் புதிய சிந்தனை வீச்சை போராட்டத்தின் பால் செலுத்தி அதனூடாக கருத்துச் செறிவுள்ள கவிதைகளை சு. வில்வரட்ணம் தந்திருக்கிறார். அரசியல், சமூக, சமய, தன்னுணர்வுத் தளங்களிற காலூன்றி இவரது அனுபவங்கள் கவிதா வெளிப்பாடு கொள்கின்றன இதேபோல குறியீடு, படிமம் மற்றும் உவமான உவமேயத் தொடர்களில் எளிமையான சொற்களைக் கையாண்டு தனித்துவத்துடன் வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க கவிஞராக இயக்கச்சி கருணாகரன் வளர்ந்து வருகிறார். இவரது கவிதைகள் இன்னும் நூலுருப் பெறவில்லை.

தென் கோடி மூலையில் வாழ்ந்திருந்தாலும் தன் கவிதை ஆற்றலால் ஈழம் பூராவும் கவிதை ரசனையை பரப்பி நின்ற போது கடந்த வருடம் சிங்களப் பேரினவாதிகளால் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறைக்கூடம் ஒன்றில் சித்திரவதை செய்யப்பட்டு தன் இருப்பை இழந்த பாண்டியூரானின் போராட்டக் கவிதைகள் என்றும உயிர்ப்புடையனவாகவேயுள்ளன.

தொகுத்து நோக்குமிடத்து போராட்ட கவிதைகள் ஒரு புரட்சிகர அரசியல் மாற்றத்துடன் சமூக பொருளாதார கட்டுமானங்களிலும் பாரியமாற்றங்களை உருவாக்கக்கூடிய வகையில் உத்வேகம் பெற்று வளர்ந்து வருகின்றன □□□

## உறுதி!

இலட்சியத்தோடு என்னை வளர்த்தான். என் உள்ளத்தில் ஒளிச்சுடரை ஏற்றினான். இலட்சிய உணர்வை என் இரத்தத்தில் செறிய வைத்தான். அச்சமென்ற இருளை என்றோ அகற்றினான். துணிவே என் இயல்பு ஆயிற்று. வலிமையைப் பாய்ச்சி வீரத்தில் என்னை ஆழ்த்தினான். யான் பயமறியாத பலம் பெற்றேன். விறல் என்ற வீரத்திற்கு உரியவனானேன். நாட்டின் காவலனானேன். மக்களின் இமைபோலானேன்.

வீரமறவனானேன். போர்த்தழும்புகள் எனக்கு இன்பம் தந்தன.

மண்ணிலே மறவன் என்ற பெயர் சூட்டச்செய்தவன் என் தலைவனே என்னை ஆக்கியோன் அவனே. உயிர் ஊட்டியோன் அவனே. என்னை நம்பிய தலைவனுக்கே என் உயிர் உரியது. அவனது இலட்சியமே என் இன்னுயிர். என் இறுதி மூச்சும் அதற்கே.

மாசுபடாத வீரமரணமாய் என் வாழ்வு முடியும், என் வெற்றியைக் கேட்டு மகிழ்ந்த என் தலைவனின் நெஞ்சம் என் மரணத்தைக் கேட்டுக் கண்ணீர் கசியும் அந்த உன்னத முடிவையே யான் வேண்டுகிறேன்,

நாக. பத்மநாதன் (குறள் 780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய வீரனே!
எழுந்து வா
விடியலை நோக்கி
விரைவாய் நடப்போம்

வார்த்தை வேதங்கள்
சாத்தானுக்குப் புரிவதில்லை

பெற்றவரின் உடல்களை
பொறுக்கிப் பொறுக்கி
நீ
சிதையிலே இட்டதை
நினைத்துப் பார் .. ..

படிக்கின்ற பாடங்களில்
பாம்புகள் சீறியதை
நினைத்துப் பார்...¡

# விடியலை நோக்கி, விரைவாய் நடப்போம்.

கழுமலர்கள் போதாதென்று
விழிமலர் பிடுங்கி
விசிறியிலே குத்தி
புத்தபிரானுக்கு
புகழ் வணக்கம் சொன்ன
சாதுக்களின் சண்டித்தனத்தை
நினைவில் இருத்து...!

ஆயிரம் தமிழர்களின்
தலைகளைச் சீவினால்
சொர்க்கம்
கிடைக்குமென்று
புத்தகத்தின் பக்கங்கள்
புலம்புகின்றனவே!

வெள்ளரசு மரங்களின்
விழுந்த சருகுகள் கூட
கொள்ளையிடுவதை
கொள்கையென்று சரசரக்கின்றதே....

தாது கோபுரங்கள்
தனது உச்சிக் குடுமியிலே
உதிர நெய் பூசி
உபதேசம் செய்கின்றனவே...!

## பொன் கணேசமூர்த்தி

சாத்தான் பாடுகின்றது
சங்கீதம்!

நகரங்களுக்கு
நெருப்பு மழையினால்
தீட்சை வழங்கப்படுகிறது

உலகத்தின் காதுகள்
செவிடாகிப் போயின
போகட்டும்

உன் பார்வையில்
பட்டால் போதும்

படு
நிலை எடு
சுடு! சுடு!!

நீளத்தில் கிடக்கும்
நெருஞ்சி முள் கூட
உன்
பாதம் பட்டதும்
பரிசுத்தமடைகிறது.

வேத காலத்தின்
ஹோமோ பறவை நீ

நீ
மண்ணை நேசிப்பவன்
அதனால்
மரணம் வந்தாலும்
நீ மண்ணில் விழுவதில்லை.

வேத காலத்தின்
ஹோமோ பறவை நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் பொன்னையா நூலகம் மா நகர சபை யாழ்ப்பாணம்

# இந்திய சினிமா

## ஒரு தொடர்பியற் கண்ணோட்டம்.

சபா. ஜெயராசா

இந்தியாவின் தொடர்பியலில் மிகவும் சிக்கல் பொருந்தியதாகவும், அதே வேளை கட்டுப்பாட்டுச் சபைகளால் மட்டும் நெறிப்படுத்த முடியாதிருக்கும் சாதனமாகவும், சினிமா அமைந்து விட்டது. இந்திய மொழிகளில் வருடமொன்றிற்கு மொத்தமாக 900 — 1000 இடைப்பட்ட சினிமாப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு நாளில் சராசரியாக 122 இலட்சம் மக்கள் சினிமா பார்க்கின்றார்கள். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் முதலியவை சினிமாவோடு நேரடியாகவும் மறைமுகமாவும் இடையுறவு கொண்டுள்ளன. இவையனைத்தினதும் கொடுமுடியாக அமைவது இந்தியாவின் அரசியலில் பலம் வாய்ந்த தீர்மானிப்பு வலுக்கொண்ட தொடர்பியலாக சினிமா அமைந்திருத்தல் ஆகும்.

1912 ம் ஆண்டிலிருந்து (ராஜ ஹரிச்சந்திரா) இந்திய சினிமாத் தொடர்பியல் ஆரம்பிக்கின்றதாயினும் 1930ம் ஆண்டைத் தொடர்ந்து சினிமாத் தயாரிப்பிற்கான பல்வேறு நிறுவனங்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. 1936 ம் ஆண்டில் வி. சாந்தாறாம் தயாரித்த "அமர்ஜோதி" என்ற சினிமாப்படம், ஆரம்பகால இந்திய சினிமாவின் பண்புகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பாரம்பரிய இந்திய மரபிலே காணப்படும் சமூக நீதி, அற ஒழுக்கங்கள் என்பவற்றின் வற்புறுத்தலும், பாரம்பரிய

*"மனிதருக்கும் புற உலகத்துக்கு மிடையே தொடர்புச் சாதனங்கள் ஒரு போலிச் சூழலை உருவாக்கிவிடுகின்றன. மனிதரைச் சுற்றிச் சில கருத்துக்களை, சில உணர்வுகளை, அவை மிதக்க விடுவதால் போலிச் சூழல் உருவாக்கம் நிகழ்கின்றது"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக மரபுகளோடு இணைந்த வடிவத் தொடர்ச்சியும் இந்திய சினிமாவிலே காணப் பட்டன.

மேற்கூறிய இரண்டு பண்புகளும் இந் திய சினிமாவின் உள்ளடக்கத்தையும் அமைப்பியலையும் ஆரம்ப காலகட்டங் களிலே தாக்கிய வலுக்களாக அமைந்தன. இந்திய சுதந்திரப் போராட்டத்தை நேரடி யாக எடுத்துக்கூற முடியாத இக்கட்டான நிலையில் பழைய புராணக் கதைகள், தொல்சீர் இலக்கியக் கதைகள் என்பவை சினிமாப்படமாக்கப்பட்டவேளை "இன்ப மான பொழுதுபோக்குப் பண்பு" படிப் படி யாக உருவாக்கப்படல் ஆயிற்று. திட்ட வட்டமான ஒரு செய்தியைச் சினிமாப்படங் களினூடாகத் தெரிவிக்கவேண்டிய ஒரு தேவை தயாரிப்பாளருக்கு இருந்ததிலும் பார்க்க, அதன் வர்த்தக இலாபமீட்டற் பண்பே மேலோங்கியிருந்தது.

வடிவமைப்பைப் பொறுத்தவரை சினி மா என்பது நெறியாளரின் ஊடகம் (மீடி யம்) என்ற எண்ணக்கரு வலுப் பெறாது நடிகரும், வசனகர்த்தாவும், மேலோங்கி யிருந்த நிலை சினிமாவின் தரத்தைத் தாக் கியது. மேலும் பாரம்பரியமான இந்திய இசைத் தொடர்ச்சியிலிருந்தும் சினிமாவின் தனித்துவம் மீண்டெழ முடியாத நிலை யில் கூத்தும், பாட்டும் விரவிய ஒரு மனோ ரம்மியப் பாங்கைச் சுதந்திரத்தின் பின்னர் இந்திய சினிமா பெறலாயிற்று.

பேசாத படத்திலிருந்து பேசும் பட மாக மாறிய இந்திய சினிமாவின் தொழில் நுட்பம் 1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வண்ணப்படமாக மாறிய வேளை மேலும், மேலும் மனோரம்மியப் பாங்கையும், வர்த் தக விரிவாக்கலையும் பெறத் தொடங்கி யது. கதை, நடனம், பாடல், காட்சி என் பவற்றிலே பாலியற் கவர்ச்சியை மேலோங் கச் செய்தல், வர்த்தக மயமாக்கலிற்கு வேண் டிய நிபந்தனையாயிற்று.

இந்திய சினிமாவிலே பெண்கள் பற்றிய சித்தரிப்பு ஆழ்ந்த விமர்சனத்திற்குரியது. பெண்கள் பற்றிய சினிமா அணுகுமுறை இருவகை மாதிரிகையாக்கப்படத்தக்கது. தியாக சொரூபி, கற்புக்கனல், கணவன் தவறுகள் பொறுத்தல், குடும்ப நலன் பே ணல், ஆண்கள் மீது தங்கியிருத்தல் போன்ற பாத்திரங்களிற் பெண்களைச் சித்தரித்தல் மாதிரிகையின் ஒருவகை, பாலியற் கவர்ச் சியாளராக, விலைமகளாக, பெண்களுக்கே பெண்கள் எதிரியாகக் காட்டப்படல், இன் னொருவகை மாதிரிகை. பெரும்பாலான இந்திய சினிமாப்படங்கள் பெண்கள் பற் றிய வெகு மலினமான காட்சிகளையே தந் துள்ளன.

இவற்றுக்கு மாறுபாடான முறையில் இயற்பண்புவாதம், யதார்த்தவாதம் என்ப வற்றைத் தழுவிய கலைச் சினிமாப் படங் களும், மக்களின் வாழ்க்கையைப் பண்பு நிலையாக மேலோங்கச் செய்வதற்கான ஆவணத் திரைப்படங்களும் தயாரிக்கப் பட்டு வருகின்றன, சினிமா என்பது நெறி யாளரின் ஊடகம் என்பதைத் திட்டவட் டமாகப் புலப்படுத்துவதாக கலைத்திரைப் படங்கள் அமைகின்றன.

விவசாய உற்பத்திப் பெருக்கம், உடல் நலம் பேணல், சுற்றாடற் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு மேம்பாடு, முதியோர் கல்வி, என்ற துறைகளில் மக்களிடத்தே ஆழ்ந்து ஊடுருவிச் செல்லும் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய ஆவணத் திரைப்படங் கள் இந்திய அரசின் முயற்சியினாற் பல் வேறு மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள் ளன. இந்தவகையில் சினிமாவின் தொடர் பும் பிரயோகம் திட்டமிட்டு ஆக்கப்பட்டுள் ளது. இந்தியாவின் குடித்தொகையிற் சிறு வர்கள் கூடிய விகிதத்தினராக இருந்த பொழுதும் சிறுவர்க்கான சினிமாவின் வளர்ச்சி பெருமளவிலே பின்தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சினிமாவின் வளர்ச்சி ஒப்பீட்டளவில் நடிகருக்கும், வசனகர்த்தாவுக்கும் அளித்த முக்கியத்துவத்தோடு, அதன் அரசியற் செல்வாக்கு இணைத்து நோக்கப்பட வேண்டியுள்ளது. இந்தியாவின் எழுத்தறிவு பின்தங்கியிருந்த மாநிலங்களிற் சினிமாவின் தொடர்பியல் வலுவடைந்தும் அதேவேளை நலிவடைந்த உள்ளடக்கத் தகுதியும் காணப்பட்டது. சினிமாவினாலே தரப்படும் செய்திகளை அப்படியே நம்பி விடத் தக்கதாக உருவாக்கப்பட்ட கிராமப் புறத்து மக்களின் மனோ நிலை அரசியல் தொடர்புகளுக்கு மேலும் வாய்ப்பானதாக அமைந்தது. இந்நிலையில் சினிமாப்படங்கள் தமது கொள்ளளவுக்கும் கூடிய வார்த்தைப் பிரயோகங்களையும், வசனங்களையும், சுமக்கவேண்டியேற்பட்டது. ஒரு கதாநாயகனைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையே சினிமாவின் கலைப் பண்புகளை மீறவும், புறக்கணிக்கவும். செய்தன.

மனிதருக்கும் புற உலகத்துக்குமிடையே தொடர்புச் சாதனங்கள் ஒரு போலிச் சூழலை உருவாக்கிவிடுகின்றன மனிதரைச் சுற்றிச் சில கருத்துக்களை, சில உணர்வுகளை, அவை மிதக்க விடுவதால் போலிச் சூழல் உருவாக்கம் நிகழ்கின்றது.

உலகின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் மக்கள் தத்தமக்குரிய தருக்கங்களினூடாக நோக்காது, தொடர்புச் சாதனங்களின் வரைபுகளினூடாகவும், அணுகுமுறையின் ஊடாகவும் நோக்குதல் இவ்வாறானபோலிச் சூழலின் வெளிப்பாடாகும். இந்தச் சந்தர்ப்பங்களில் இவ்வாறுதான் நடந்து கொள்ள வேண்டும் என்பவை தொடர்பான ஆசாரங்களையும், சடங்குகளையும் தொடர்பு சாதனங்கள் வளர்த்து விட்டன என்ற குற்றச் சாட்டும் உண்டு.

உவால்ற்றர் லிப்மன்என்பார் இவ்வாறான போலிச் சூழல் உருவாக்கம் பற்றிக் குறிப்பிடும் பொழுது உண்மையான புறவுலகம் என்பது சாதாரண மனிதர் அடையப்பட முடியாததாய், சிந்திக்கப்படமுடியாத தாய் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். தொடர்புச் சாதனங்கள் உருவாக்கித் தந்த படங்களினூடாகவே நாம் சிந்திக்கின்றோம். பிரச்சினைகளை நோக்குகின்றோம்.

தொடர்பு சாதனங்கள் பல்வேறு வார்ப்பு எண்ணங்களை அவை மீள வலியுறுத்தி வருகின்றன. அதாவது மீண்டும் மீண்டும் வலுப்படுத்தி வருகின்றன. இவை மக்களின் தொழிற்பாடுகளைத் தாக்குகின்றன. வார்ப்பு எண்ணங்களால் வடிவமைக்கப்படும் மனிதனது காட்சியே வெகுசன தொடர்பு சாதனங்களின் பங்களிப்பாகவுள்ளது.

லிப்மன் கூறிய இந்தக் கருத்துக்கள் வர்த்தகப் பாங்கான வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் எதிர் மறைப் பண்புகளைக் குத்திக் காட்டுவதாக அமைகின்றது. உண்மையில் இந்தக் குற்றச் சாட்டைத் தொடர்புசாதனங்கள் மீது சுமத்த முடியாது. தொடர்பு சாதனம் எத்தகைய பண்பு நிலையில் ஆளப்படுகின்றது என்பதே இங்கு ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியுள்ளது.

ஒரு சமூக ஆக்கத்தின் பொறியாளர் என்ற பணியில் தொடர்பு சாதனங்களின் பங்கேற்றல் முன்னைய கருத்திற்கு முரண்பாடானதாக அமைகின்றது. இந்த முரண்பாடுகளை மேலும் ஆழ்ந்து நோக்கும் பொழுது, ஒருவித உளவியற் சுரண்டல் நடவடிக்கையும் மேலோங்கி நிற்றலைக் காண முடியும். உளவிறைப்பை ஏற்படுத்தும் குரூரமான நடவடிக்கைகளை வெளிப்படையாக மேற்கொள்ளாது. மிகவும் சாதுரியமாக கருத்தேற்றம் செய்யும் பணியே உளவியல் நோக்கில் அதிக தாக்கமானது.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த ஓவியர்

## அம்பலவாணர் இராசையா

(1926 — 1991)



ஈழத்தின் ஓவியக்கலைக்கு முன்னோடியாகவிருந்த எஸ். ஆர் கனகசபையினால் ஓவியத்துறைக்கு ஈர்க்கப்பட்டவரே இராசையா. வின்ஸர் ஆர்ட்கிளப்பின் ஆயுள்காலம் முழுவதும் அதனுடன் தொடர்புகொண்டியங்கிய இவர் அவ்வோவியப் பயிற்சியகத்தின் முதன் மாணாக்கரில் ஒருவர். இராசையாவின் கலைப் பெறுமானமுள்ள ஓவியப் படைப்புக்கள் வின்ஸர் ஆர்ட்கிளப் காலத்திலிருந்து, அவர் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராயிருந்த காலப்பகுதிக்குரியனவாகும். யாழ்ப்பாணத்தவர்க்கு அவர்களின் கிராமிய வாழ்வின் வளத்தை மீள் கண்டு பிடிப்பு செய்து கொடுப்பதாக இவரது ஓவியங்கள் காணப் படுகின்றன.

பிரதிமை, நிலைப்பொருள், இயற்கைக்காட்சி என ஓவியத்தின் முப்பிரிவுகளிலும் தன் கலையாளுமையை இராசையா வெளிப்படுத்தியவர், வர்ணத் தெரிவும், ஆக்க அமைவும் இவரது ஓவியங்களின் சிறப்பியல்பு. நிலக்காட்சி ஓவியங்களில் தனிச்சிறப்பான ஆளுமை பெற்ற இராசையாவின் ஓவியங்கள் கலைப்படைப்பு என்ற விழுமியத்தை மட்டுமே கொண்டிருக்கவில்லை. அவை வரலாற்றுப் பதிவுகளாகவும், ஈழத்து சைவப்பண்பாட்டின் வெளிப்பாடுகளாகவும் விளங்குகின்றன.

ஞாபகத்திலிருந்தே ஓவியம் வரைதல் வேண்டுமென்பது இவரது அபிப்பிராயம். நேரில் பார்த்து வரையும் பொழுது கலையாக்கம் குன்றிவிடுகிறது ஓவியனின் கற்பனைக்கு இடமில்லாது போய்விடுகிறது. ஓவியத்தை ஒழுங்குபடுத்திக் கீறவும், ஆக்க அமைவிற்கும் ஞாபகம் மிகவும் வசதியானதென்பது இராசையாவின் கருத்து. இலட்சிய வகை மாதிரியான இவரது ஓவியங்கள் நிரந்தரமான காட்சிக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

இராசையா அரசியற் பிரக்ஞை உடையவராகவும், சிறந்த ஓவியப்பயிற்சியுடையவராகவும் இருந்ததுடன், எல்லாவகையான கலையாக்கங்களையும் புரிந்துகொண்டு இரசிப்பதுடன் கலையை ஊடகமாகக்கொண்டு கல்வி பயிற்றுதலில் நிறைந்த அறிவுடையவராக இருந்தார்.

கலைஞர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவப்படுத்த வேண்டுமென்பதற்கிணங்க இவரது ஓவியங்களின் காட்சியொன்றினை ஏற்பாடு செய்ய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை நடவடிக்கை எடுத்திருந்தது. துரதிஸ்டவசமாக அவ்வெண்ணம் இன்று வரை நிறைவேறாது போய்விட்டது. திரு. அம்பலவாணர் இராசையா அமரராகிவிட்டார்.

''சோகி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



□ இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

காற்றை எதிர்த்துக் கொண்டு சைக்கிளை மிதிப்பது பெரும் சங்கடமாக இருந்தது. ''என்ன செய்வது எங்கடை காலம் இப்பிடி இருக்கு'' என மனம் சலித்துக் கொண்டான் கந்தசாமி.

கால்கள் இரண்டும் பயங்கரமாக வலித்தன. நெஞ்சில்கூட விபரிக்க முடியாத ஒருவகை வேதனை பரவியது. வியர்வையில் குளித்திருந்த உடம்பு படபடத்தது.

கூதல் காற்று சில்லென்று வீசியது. அடிவானத்தில் சூரியன் சரிந்து கொண்டிருக்க மெல்லிருட்டின் ஊடே பனி இறங்க ஆரம்பித்திருந்தது.

நேரம் ஆறு மணி அல்லது ஆறரையாக இருக்கலாம். மாரி காலத்து சூழல் இருளை விழுங்கிக் கொண்டு வந்துவிட்டது.

# மீட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் மலையென சைக்கிளின் பின்புறம் கனக்கும் சுமை, அவன் களைத்துப் போனதால் முன்பை விட அதிகமாகவருத்தியது.

எத்தனை நாட்களாக இந்த ஓட்டம் நடக்கிறது. பொழுது புலரும் பொழுதில் வெறும் வயிறு கர் புர் எனச் சத்தமிட புறப்பட்டுப் போவதும் பின்னர் சுமையோடு திரும்புவதும், வழக்கமாகி விட்டது.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை என்று எத்தனை இடங்களுக்கு மாறி மாறி ஓடி வீதிகள், ஒழுங்கைகள் என்று தடவித்தடவி.

விறகாக, தென்னை, பனை மட்டைகளாக பொச்சு மட்டைகளாக, தேங்காய்களாக சுமையேற்றி ஓடாத ஓட்டம் ஓடி கோப்பாய் வெளி தாண்டி மருதனாமடச் சந்தி, சுண்ணாகம் மல்லாகம் வரை வர வேண்டும்.

மத்தியான வெய்யில் உடம்பைப் பொசுக்கும் நேரத்தில், சுமைகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டால் பருத்தித்துறை துறை முகத்திற்கு உணவுக் கப்பல்கள் வருவது போல எப்போதாவதுதான் வரும் வழியில் வியாபாரம் நடக்கும். மற்றப்படி மருதனாமடம் சந்தி வரை வியாபாரம் நடக்காது.

ஒருநாள் முழுக்க சைக்கிள் அடிப்பதன்பலன் அன்றைய விற்பனையில் தான் தங்கியிருக்கும். அதன் பின்னர் ஏதாவது வயிற்றுக்கும் கிடைக்கும்.

ஒரு வடையும் கடித்து தேனீரும் குடித்து பீடியும் வாங்கி புகைத்துக்கொண்டு வீதியோரத்து மரநிழலில் ஆறி இருக்கும்போது சற்று ஆறுதலாக இருக்கும். பிறகு மீண்டும் பயணம் தொடரும். திரும்பக் கால்கள் வலிக்கும்.

□ □ □

இப்போது போலத் தான் இருக்கின்றது. என்றாலும் ஒன்றரை வருடங்கள் ஓடிவிட்டன. நெடுநாள் குடியிருந்த சொந்த இடத்தைவிட்டு வெளியேறி

மல்லாகத்தில் விரிந்து பரந்த அந்தவளவுக்குள் மொட்டையாகிப் போய் விட்ட தென்னை மரங்களின் மத்தியில் சின்னப்பிள்ளைகள் விளையாட்டுக்குக் கட்டும் சின்னஞ் சிறு குடிசைகளில் குடியிருந்தார்கள் தலையைத் தட்டும் கூரை, சிறு மழைக்கே பயப்படும் ஓலைத்தட்டிகள் கொண்ட நெருக்கமான குடிசைகள். மிக மிக அதிகமான மனிதர்கள் நெருங்கிய மனங்களும்.

அவன் குடும்பத்தைப் போல எத்தனையோ குடும்பங்கள், எல்லை வேலி சரிந்ததுக்கு வாள் வெட்டுக்கு போனவர்களின் பரம்பரையினர் எல்லாம் ஒரேவளவுக்குள் எப்போதாவது சிறு சிறு சண்டை பிடித்தாலும் குடியிருந்தார்கள்.

அந்த வளவில் முன்பு இந்திய இராணுவம் குடியிருந்தது ஒரு பெரிய வீடும் இருந்தது. ஆனால் கூரையும், சில பக்கத்து சுவர்களும் இந்திய இராணுவம் திரும்பிப் போன போது போய்விட்டன.

அவர்கள் சூறையாடிய அமைதியோடு வளவின் பசுமையும் போயிருக்க வேண்டும். எத்தனையோ பெரிய மரங்கள் அடியோடு தறிக்கப்பட்ட அடையாளங்கள் மாத்திரம் இருந்தன.

சொந்த இடத்தை விட்டு ஓடி வந்து முதலில் பள்ளிக்கூடத்தில்தான் இருந்தார்கள். பிறகுதான் இங்கே குடிசைகள் போட்டு குடியேறினார்கள்.

எல்லாக் குடும்பங்களும் இப்படியே. நிவாரணத்தையும் சைக்கிளில் மூட்டை கட்டி வியாபாரம் செய்து கிடைக்கும் வருமானத்திலும்தான் சீவியம் நடத்தினர்.

□ □ □

கந்தசாமியின் சிறுவீடு ஆலமரத்திற்கு முன்னால் இருந்தது. ஆல மரத்திற்கு பக்கத்தில் ஒரு வாசிகசாலை எந்த நேரமும் அந்த இடத்தில் ஊர் ஆட்களின் அமளி இருக்கும், மாலை நேரங்களில் இன்னும் மும்முரமாய் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைக் கூரையும், சீமெந்துக் கற் சுவருமாக சோலையான வளவுமாக அமைந்ததுமான சூழல் - பொழுது மங்கும் நேரம் வேலையை முடித்துக் கொண்டு வந்து களைப்புத் தீரக் குளித்துவிட்டுத் திண்ணையில் சரிந்திருக்கும் போது எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும்.

ஆனால் இப்போது எல்லாமே குழம்பிப் போய் விட்டன. வீடு. சோலையானவளவு, ஆலமரத்தடி, அந்தச் சந்தோஷம் எல்லாமே அந்நியமாகிப் போய் விட்டன. நாளாந்தம் பார்த்து வந்த தொழிலும் போய் போட்ட உடுப்புக்கு மாற்று உடுப்புக்கூட கனவாகி விட்டது.

□ □ □

இன்றைய கெடுகாலம் எதுவுமே நேரகாலத்துக்கு சரிவரவில்லை. கொள்வனவு முடியவே நேரமாகி விட்டது. புறப்படவே மூன்று மணியாகி – வழியில் பிரச்சனை.

இரண்டு தடவை சைக்கிள் காற்றுப் போய் விட்டது. ரயர் ஒட்டுக்கு இருபது ரூபாய் சுலபமாய்ச் செலவழிந்தது. கையில் ஒரு சதமும் இல்லாத நிலையில் புறப்பட்டு கோப்பாய் வெளி தாண்டவே இருள ஆரம்பித்து விட்டது.

இன்றைய வியாபாரம் அதோகதிதான் என்பது அப்போதே தெரியும். பொழுது படத் தொடங்கிவிட்டால் விற்பனை நடக்காது

நான்கு நாட்களுக்கு முதல் எடுத்த நிவாரணப் பொருட்கள் நேற்றைக்கே முடிந்து விட்டன. மத்தியானச் சாப்பாடு ஏதோ ஒரு விதத்தில் முடிந்திருக்கும். இரவுச் சாப்பாடுவிடயம் அவன் வீடுபோனபின்னர் தான் முடிவாகும்.

நினைத்துப் பார்க்க எரிச்சலாக இருந்தது. அன்று முழுவதற்குமாக குடித்த தேனீர் எந்த மூலைக்குக் காணும். என்ன செய்வது. கொண்டு வந்த வற்றை அநியாய விலைக்கு விற்க முடியாது. இரவுப் பொழுதை எப்படியும் சமாளிக்கத் தான் வேணும் எனவும் நினைத்தான்.

ஊர்வலம் போன மாதிரி சைக்கிள்கள் போய்க் கொண்டிருந்தன. மருதனாமடச்சந்திக்கு வந்தபோது இருள் கனத்திருந்தது,

சந்தியில் பெற்றோல் மாக்ஸ்விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது ஆட்கள் பலபேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இளைஞர்கள். வயதானவர்கள் என்று. சிலர் கிடங்கு கிண்டிக் கொண்டிருக்க, வேறுசிலர் மாட்டு வண்டில்களில் இருந்து மரங்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

பள்ளிக்கூடச் சுவரில் மாவீரர்களாகிவிட்ட சில போராளிகளின் பெரிய படங்கள் சாத்திவைக்கப் பட்டிருந்தன,

வரும் வழிகளில் எல்லாம் இவ்வாறு சந்திக்கு சந்தியும் இடை இடையேயும் சனங்கள் வேலை செய்து கொண்டிருப்பதையும், பந்தல்கள், வளைவுகள் அமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டாலும் கந்தசாமியின் மனநிலை காரணமாக அவற்றில் அதிக அக்கறை காட்டவில்லை.

□ □ □

ஓலைக் குடிசைகளால் நிரம்பி வழிந்த அந்த வளவுக்கு முன்னால் சைக்கிளை நிறுத்தினான் கந்தசாமி, அந்த இருளிலும் பொழுது போகாத சிறுவர் சிறுமியர் விளையாடிக் கொண்டிருந்தனர். பக்கத்தில் இருந்த அச்சகத்தில் இயந்திரம் இயங்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மின்சாரம் இல்லா விடினும் அங்கு சைக்கிளை மிதித்து இயந்திரம் இயங்குவது அவனுக்குத் தெரியும். மண்ணெண்ணையில் மோட்டார்சைக்கிள் இயங்குவது போலத்தான் இதுவும்.

போராட்டக் காலச் சூழல் எத்தினை புதியவழி முறைகளையெல்லாம் கண்டு பிடிக்க வைத்து விட்டது என நினைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலிக் கரையோரம் பலபேர் குந்தியிருந்து பீடி புகைத்துக் கொண்டிருக்க சற்றுத் தூரத்தில் அரச மரத்தடியில் அமளியான வேலை நடந்து கொண்டிருந்தது. மாவீரர் வளைவொன்று தயாராகிறது போலும்.

சுமையோடு சைக்கிளை உருட்ட சிரமமாக இருந்தது. என்றாலும் தன் குடிசைக்கு முன்னால் போய் சைக்கிளை நிறுத்தினான்.

அந்தச் சின்னக் குடிசையின் வாசல் ஓரமாக மினுக் மினுக் கென்று சுட்டி விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது.

எதிரே சாக்கொன்றில் மூத்தபிள்ளையும் அதற்கடுத்த பிள்ளையும் படுத்திருந்தனர்.

''இஞ்சரப்பா-'' என்று குரல் கொடுக்க இடுப்பில் கடைசிப் பிள்ளையைச் சுமந்து கொண்டு அவன் மனைவி வெளிப்பட்டாள் வெற்றுடம்புடன் காணப்பட்ட குழந்தையின் மூக்கு ஒழுகிக் கொண்டிருந்தது.

இருளிலும் அவனை அடையாளம் கண்டு ''யப்பா'' என்று மழலை மொழி பேசியபடி அவனிடம் பாய முற்பட்டது. கந்தசாமி சைக்கிளை ஸ்ராண்டில் நிறுத்தினான்.

சைக்கிளில் உள்ள சுமை, அவன் வந்த நேரம், போன்றவற்றை வைத்துக் கொண்டு அவனது நிலைமையினை உணர்ந்து கொண்ட அவன் மனைவி

''நல்லாய் களைச்சுப் போனியள் அடுப்பில சுடு தண்ணி இருக்கு தேத்தண்ணி கொண்டு வாறன். இருங்கோ-'' என்று சொல்லி பிள்ளையை அவனிடம் கொடுத்துவிட்டு உள்ளே போனாள்.

அவன் படுத்திருந்த பிள்ளைகளுக்குப் பக்கத்தில் இருந்தான். சற்று ஆறுதலாக இருந்தது. என்றாலும் மனம் ஒரு நிலையில் இல்லை.

தேனீருடன் மனைவி வந்தாள்.

''முகத்தைக் கழுவிக் கொண்டு வாங்கோ, கஞ்சி காச்சி வைச்சிருக்கு'' என்றாள் ஆதரவாக.

தன் நிலையை உணர்ந்து கொண்டு கேள்விக்கணைகள் தொடுக்காமலே செயற்படும் அவளை அன்புடன் அவன் நோக்கினான் ''உடலில் தெம்பு பிறந்திருந்தது.

அவன் கையில் சீனி வாங்கி நக்கித் தேனீர் குடிக்கும் போது.

''இஞ்சரப்பா - உங்கை ஒரு மாவீரர் வளைவு கட்டினம். எல்லா ஆம்பிளையளும் அங்கைதான் போட்டினம் வேலை செய்ய நீங்களும் போட்டு வாங்கோவன். உடம்பு அலுப்பெண்டாலும் நாங்களும் செய்யத்தானே வேணும்.'' என்றாள் அவள்.

அவன் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான்.

''உடல்களைத்தாலும் மனம்களைக்கக் கூடாது'' என்று நினைத்தபடி எழும்பினான்.

''சிவப்புசாறி ஒண்டும் கேட்டனவை என்னட்டை எங்கைகிடக்கு மலரக்காதாறதெண்டவ அதோடை மஞ்சள் சாறியையும் சேர்த்து வாங்குங்கோ'' என்றாள் அவள். □□□

---

**''போரில் இறங்குமாறு எதிரிகள் எங்களை அறைகூவி அழைத்தார்கள். ஆகவே வேறுவழியின்றி நாங்கள் போருக்குத் தயாராக வேண்டியிருந்தது; தைரியத்துடன் போர்முனை நோக்கிப் போக வேண்டியிருந்தது.**

*— எர்ணஸ்டோ சே. குவேரா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாய் நிலவு பொழிகிறது —பௌர்ணமிநாள்!
ஓராயிரம் நினைவு நெஞ்சில் அலைமோத
பாலாய் நிலவு பொழிகிறது...
முன்னாள் இதுபோல் முழுநிலவில் முற்றத்து
தென்னை முழுகுகையில் தென்றல் அதைத் தாலாட்டும்
தூரத்தே ஊதும் சுருட்டி மிதந்துவரும்!
ஈரமண்ணில் இரு கால் புதைய நெடு
நேரம் கழியும் நினைப்பே இலாது.

கடல்
ஓரம் கை கோர்த்தே உலாவருவோம்!
மேலே வான் நீல விதானம் விரிக்கும்!
விண்மீன்களோ கோலம் இடும்!
ஓலைக் குடிசையிலே,
தென் மோடி ஆட்டுவிக்கும் அண்ணாவி பாடல்,

# பாலாய் நிலவு பொழிகிறது!



ப. நம்பியாரூரன்

உடுக் கொடு
போட்டுலுப்பும் சாமப் பொழுது.

பாலாய் நிலவு பொழிகிறது பௌர்ணமிநாள்!
திங்கள் மூன்றாக சிறிதும் பிழையில்லை
எங்கள் பயிர்பச்சை எல்லாம் கருகுகையில்
வானத்தை நோக்கிக் கழுத்து மிகவலித்துப்
போனதே அன்றிப் புதினம் எதுவுமில்லை!

'நீர் வேணும் இந்த நிலம் தோண்ட வல்ல, பல ஆள் வேணும்!',
—கூவி அழைக்க,

இளைஞர் சிலர் ஆயுதங்கள் ஏந்தி வந்தார்!
"நீர் கண்டலாது, இனி நாம் ஓயுறதே இல்லை!"
ஒரு சூள் உரைத்தார்கள்!
அண்டை அயலார் அலவாங்கொடு பாரை
கொண்டு வந்தார். சோற்றுப் பொதியும் அனுப்பி வைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆகா' இவர்கள் போல் ஆர் வருவார்!'' என்றுருகி
வீதி யெல்லாம் வாழை நட்டுத் தோரணமும் தொங்கவிட்டு
வாசல் தோறும் பூரண கும்பம் வடிவாக வைத்து
வரவேற்றோம்.!

வானத் திருந்(து) அமரர் வந்தது போல் பூரித்து
மோனத் திருந்தோம் முழுசாய் ஒருமாதம்!
ஊர்திகளில் ஏற்றி ஊர்வலங்கள் செய்வித்தோம்!
பார் முழுதும் பார்க்கப் பவனிவந்தோம்!

அந்தரத்துத் தேவர் ஒரு நாள் அசுரர்களாய்
தொந்தரவு செய்யத் துணுக்குற்றோம்!
நாடொன்று கேட்ட தமிழர் குடியிருக்க
வீடொன்றும் இல்லாமல் விதைத்தார்கள் குண்டுகளை
ஆடுபலி, கோழிபலி, ஐயோ அணிகலனும்
வீடுகளும் காவு கொடுத்து விதிர்விதிர்த்தோம்!
நாடு புகுந்தவர்கள் நாளாக நாளாக
வீடு புகுந்தெங்கள் மானம் விலை கேட்டார்.
தண்ணீருக்காகத் தவமிருந்த மனிதர்களைக்
கண்ணீர் கடலாட விட்டுக் கதையளந்தார்!
நீர் காண, முன்பு முயன்ற இளைஞர்களை
ஊர் தோறும் தேடி உழக்கி வதைத்தார்கள்.

பொய்யை மெய்யாகப் புனையும் முயற்சியிலே
வையம் முழுதும் வலம் வந்து பார்த்தார்கள்!
அசுரர்களை ஏவி அநியாயம் செய்வித்தார்!
நிசியிற்களவு, கொலை, நிட்டூரம்!- அம்மம்மா!

''மூன்றாம் பிறை நம் முருங்கை மரத்தடியில்
தோன்றுது போய்க் கூடி தொழுகை நடத்துங்கள்!

நாலாம் பிறை கண்டு நாய்படாப் பாடுபட்டோம்!
ஓலமிட்டோம், கண்ணீர் உகுத்தோம்
ஒரு நாளில்,
சூறாவளியால் சுழன்று முருங்கைமரம்
பாற, நமது பகைவர் மறைந்தரர்கள்!

இன்று,
பாலாய் நிலவு பொழிகிறது—பௌர்ணமிநாள்!
மீண்டும் இளைஞர் மிடுக்காய்த் தொடங்கினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்ட.—ஒரு சிறிதும் சோம்பல் அறியாதார்!
ஆழத்தே பாறை பிளக்கும்ஒலி அவ்வப்போ(து)
ஈழம் முழுதும் எதிரொலித்துக் கொண்டிருக்க
உண்ட களையில் உறக்கம் கலையுதென
மீண்டர் சிலபேர் விசனம் அடைந்து,

ஒன்று கூடி ஒரு திட்டம் கொண்டு வந்தார்!

''நம்மை இவர் மீறி இது செய்ய விட்டால்?...

வரும் மோசம்!

தாமே பெறுவதுவோ தண்ணீர்?
நாமில்லாமல் ஆமோ ஒரு வாழ்வு?

அதனை உணர வைப்போம்!
ஆற்றை மறித்தால்? ..
அவர்கள் கிணற்றில் நீருற்றும் கிடைக்கா(து)!''
உறுதி செய்து கொண்டார்கள்!

பச்சைப்பயிரும் பயன்மரமும் தோப்புகளும்
உச்சி கருகி உயிரூசல் ஆடுவதும்

கோயில் குளம் கூட குண்டுக்(கு) இலக்காகி
தீயில் கருகுவதும் கண்டிரங்காச் சென்மங்கள்!

பொழிகின்ற குண்டுகளால் மக்கள் உடல்சிதறி
அழிகின்ற பொல்லா அவலம் இயற்றுபவர்!

கொடுமைக்கு முன்னே குனிந்து நடுங்காமல்
அடிமைத் தளையை அறுத்தெறிய வேண்டாமோ?

தென்னை பனைகள் சிதறுண்டு போனாலும்
என்ன?- அதனால் இடிந்து போய் உட்கார்ந்தெம்

ஏலாமை சொல்ல இது நேரம் அல்ல!
இன்று பாலாய் நிலவு பொழிகிறது பௌர்ணமிநாள்!

மீண்டும் எமது நிலத்தில் பனை வடலி
தோன்றி நிமிர்க, துயரம் பொடிபடுக!

மீண்டும் அண்ணாவி முழக்கும் உடுக்கின் ஒலி
நீண்ட இரவுப் பொழுதில் நிகழட்டும்!
ஊதும் குழல்பெய் சுருட்டி இனி இரண்டு
காதும் அமுதம் பொழிக!

கடலோரம்.
ஈரமணலில்

இனி நாம் நடக்கலாலம்!
பாலாய் நிலவுது பொழிகிறது
—பௌர்ணமிநாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபுலானந்த அடிகள்

கிழக்கு மாகாணத்திலே காரைதீவுப் பகுதியிலே சாமித்தம்பி என்பாருக்கும் கண்ணம்மை என்பாருக்கும் மகனாகப் பிறந்தார் விபுலானந்தர். இவர் தோன்றிய நாள் 1892 பங்குனி இருபத்தொன்பதாம் நாளாகும்.

மயில்வாகனம் என்று பெயரிட்டு அயலில் உள்ள மெதடிஸ்த பாடசாலையில் படிக்க வைத்தனர். இன்னும் குழந்தைக்கு எதிர்காலத்துக்குப் பயன்தரக்கூடிய ஆதாரக்கல்வி பயில்வதற்கு அயலில் வாழ்ந்த ஆசிரியர் குஞ்சித்தம்பி என்பாரிடம் அனுப்பினார்கள். குழந்தை தன் குருவான குஞ்சித்தம்பிக்கு குருவணக்கம் பாடிய பாடலே செந்தமிழ்ப் பாவாகக் கிடைத்துள்ளது.

மெதடிஸ்த பாடசாலையை விட்டு மத்திய பாடசாலையில் இடைநிலை வகுப்புக்களைப் படித்தபின், சென். மைக் கல்லூரியில் சேர்ந்து மேல் வகுப்புப் படித்த பிள்ளை ஆங்கிலம் பயின்று திறமையுள்ளவராய்ப் பதினான்காம் வயதில் சினியர் பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

## ஆசிரியராணமை

இளமையிலே தான் கற்ற கல்லூரியில் நல்லாசிரியராகிப் பெயர் பெற்று விளங்கினார். ஆங்கிலப் பாடசாலையில் தமிழ் ஆர்வம் வளர்த்தார். ஆசிரியரானவர், பயிற்சி பெற்றவராதல் நல்லது எனக்கண்டு அக்காலத்தில் றோயல் கல்லூரி வளாகத்திலமைந்த ஆங்கில ஆசிரியப் பயிற்சியையும் பெற்று பயிற்றப் பெற்ற ஆசிரியராயினர்.

அடுத்து விஞ்ஞானப்பாடங்களில் வல்லவரான இவர் பொறியியல் கல்லூரியிலும் அறிவியல் பயின்று விஞ்ஞானத்துறையில் டிப்ளோமா என்னும் தகுதிச் சான்றிதழும் பெற்றார்.

அதே காலத்தில் தமிழில் திறமையான இவர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடாத்திய பண்டித பரீட்சையிலும் சித்தி பெற்றுப் பண்டித மயில்வாகனனார் என அழைக்கப்பட்டார். விஞ்ஞானத்துறையில் இரசாயன பாடத்தில் வல்லவரான இவர் சிலகாலம் கொழும்பில் அரசினர் கல்லூரியில் ஆசிரியராயிருந்த பின், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியரானார். இங்கே பணிபுரிந்த காலத்தில் விஞ்ஞானத்துறைப் பட்டமான *B. Sc*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை எடுத்து லண்டன் பல்கலைக்கழக பட்டதாரியானார்.

## அதிபராயினார்

இத்தகைய ஆற்றல் வாய்ந்த இவரை மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளர் அழைத்து அதிபராக்கினார். அக்காலத்திலே தான் சதாசிவஐயர் என்னும் பிரதம கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை ஆரம்பித்தார். இவ்வரிய முயற்சியில் பண்டிதர் மயில்வாகனம் அவர்களின் பங்களிப்பும் பக்கபலமாயிற்று.

ஆனைப்பந்தியடியில் வாழ்ந்த காலத்திலேயே இவருக்குத் துறவு மனப்பான்மை உண்டாகியது. இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்து தொண்டு செய்தல் வேண்டும் என்னும் விருப்பமும் உண்டாகியது. அதற்குக் காலம் வரும் எனக் கருதியிருந்த போது யாழ்ப்பாணத்தில் படித்த இளைஞர்கள் ஒன்றுகூடி வாலிபர் மாநாடு என்னும் இயக்கத்தை ஆரம்பித்தனர். அந்த இயக்கத்தில் ஒருமுறை மயில்வாகனனார் தலைவராகத் தெரியப்பெற்றதும் உண்டு. தென்னிலங்கையிலிருந்தும், தமிழகத்திலிருந்தும், கல்விமான்கள் வருகை தந்து பேசியபோதெல்லாம் மயில்வாகனனார் தலைமை

*"சேக்ஸ்பியரின் முதல் நூல்களான நாடகங்கள் அடிகளாரின் மொழிபெயர்ப்பில் தமிழில் ஒலிக்கும் போது, சேக்ஸ்பியரே தவறவிட்ட மெய்பாடுகள் பலவற்றை அடிகளார் சேர்த்து தந்துள்ளமைக்கு ஈடாக எந்த மொழிபெயர்ப்பாளரையும் இதுவரை காணமுடியவில்லை"*

☐ க. சி. குலரத்தினம்

## துறவு மனப்பான்மை

பண்டித மயில்வாகனனார் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராயிருந்த காலத்தில் பெரிய கோயில் உபாத்தியாயர் எனப் பொதுமக்கள் மத்தியில் பெருமதிப்புப் பெற்றிருந்தார். அவர் ஆனைப்பந்தியில் வாழ்ந்த காலத்தில் அயலில் வாழ்ந்த இளைஞர் பலரை அழைத்து நாடகத்துறையில் பயிற்சி அளித்து வந்தார், அந்த நாடகப்பட்டறையின் இளைஞர்கள் விவேகானந்த சபையினர் எனப் பெயர் பெற்றிருந்தனர்.

தாங்கிச் சிறப்பித்தார். அப்போதுதான் மேற்கிலிருந்து இவான்ஸ்வென்ற்ஸ் என்னும் பெரியவர் வந்து புதுமைக்கருத்துக்களையும் முற்போக்கு வழிகளையும் பற்றிப் பேசினார்

## துறவுக் கோலத்தில் தமிழ்த்தொண்டு

தமிழ் நாட்டில் செட்டிநாட்டு வள்ளல்களும் பேராசிரியர்களும், ஈழத்தில் ஆதிக்கமுற்றிருந்த ஆங்கிலேயரும் மற்றும் சிங்களவரும் விபுலானந்த அடிகளாரை மதித்தார்கள்.

இயற்றமிழ் வளர்ச்சியிலும், இசைத்தமிழ் வளர்ச்சியிலும், நாடகத்தமிழ் வளர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியிலும் அவர் காத்திரமான பங்களிப்புச் செய்தார்.

## பன்முகத் துறையில் பரந்த அறிவு

விஞ்ஞானம், பொறியியல் முதலிய துறைகளோடு வானியலையும் விளக்கி அவர் எழுதிய கட்டுரைகள் பழைய செந்தமிழ் சஞ்சிகை இதழ்களில் வெளிவந்துள்ளன. கிரேக்க உரோம மக்களின் பண்பாட்டில் தவழ்ந்த சிறப்பியல்புகளையெல்லாம் அடிகளார் அரிதின் முயன்று ஆராய்ந்து இனிய தமிழில் தந்துள்ளார்.

கிரேக்க மகாகவி ஹோமர் செய்த பூர்வ இதிகாசங்களான இலியட், ஓடிசி என்பவற்றைத் தமிழில் மொழிபெயர்ப்பு என்று தோன்றாமல் எழுதித்தந்தவர் அடிகளார்.

ஆங்கிலவாணி என்னும் தொடரில் ஆங்கில கவிஞர்களுடைய பல்வேறு கவிதா சாரங்களை இன்தமிழ்ப் பாக்களில் வடித்துத் தந்தவர் அடிகளார்.

## மதங்க சூளாமணி

நாடகப்புலமை மிக்க சேக்ஸ்பியரின் வரலாற்று நாடகம், முடிவினிய நாடகம், துன்பியல் நாடகம் எல்லாவற்றையும் துறை போகக் கற்று மானசீகமாக தாமே நாடக பாத்திரங்களாக மாறி நின்று மொழி பெயர்த்தமையே மதங்க சூளாமணி என்னும் நாடக நூல்.

சேக்ஸ்பியரின் மூதல் நூல்களான நாடகங்கள் அடிகளாரின் மொழிபெயர்ப்பில் தமிழில் ஒலிக்கும் போது சேக்ஸ்பியரே தவறவிட்ட மெய்ப்பாடுகள் பலவற்றை அடிகளார் சேர்த்துத் தந்துள்ளமைக்கு ஈடாக எந்த மொழிபெயர்ப்பாளரையும் இதுவரை காணமுடியவில்லை.

## கலைச்சொல் ஆக்கக் குழுவுக்குத் தலைமை

அடிகளார் மொழிபெயர்ப்புத் துறையில் வித்தகர் என்பது அவர் முன்னர் சென்னையில் இராசகோபாலாசாரியர், இராமசாமிஐயர், சபேசஐயர், ராமானுஜம், சுப்பிரமணியஐயர், நடராசபிள்ளை வெ. ப சுப்பிரமணியமுதலியார் முதலிய வித்தகர்களுக்குத் தலைமை தாங்கிக் கலைச்சொற்கள் தயாரித்தமையில் புலனாகிறது. கலைச்சொற் குழுவுக்குப் பெருந்தலைவர் என்று சென்னை மாநிலக்கல்விக்குழு அடிகளாரைப் போற்றுகிறது.

தலைமை தாங்கிய அடிகளார் தம் பங்களிப்பாக 'வேதி நூல்' என்னும் இரசாயனவியல் நூல் ஒன்றை மொழிபெயர்த்துள்ளார்.

## பிறப்புரிமை மண்வாசனை

அடிகளார் முத்தமிழ் வித்தகர் என்பதை ஆயும் போது அவருக்கு முத்தமிழ் துறை இயல்பாகவே அமைந்தது. அடிகளார் தோன்றிய மட்டக்களப்பு அத்துமீறிக்குடியேறியவர்கள் அடாதன செய்த போதிலும், பழைய மூவேந்தர் தமிழை வளர்த்து வந்த மண்ணாகும். மட்டக்களப்பின் கூத்தும், பாட்டும் மண்வாசனையாய் இரண்டறக் கலந்துள்ளது.

## பெரும்புலவர்

அடிகளார் தமிழ் மரபு கண்ட பெரும் புலவர் அவர் இளமையிலேயே வரகவியாகிப் பாட்டிசைத்து மகிழ்ந்தவர். அவர் பண்டிதரான காலத்தில் மரபு வழியையும் அறிந்து மரபு திரியாமல் பழைய பாவினங்களிற் பாடிக்குவித்தார். தேவபாணி, பெருந்தேவபாணி என்னும் பாவினங்களிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தேவபாணி நீண்டகாலமாக வழக்கற்றுப் பேர்யிருந்தது அடிகளார் அதனை மீளப் பாடியமை ஒரு சாதனையுமாயிற்று

அடிகளாரின் கவிதை வானில் மலர்ந்த பாவினங்களுள் ஒரு சிலவே எண்ணிக்கைக் குட்பட்டுள்ளன. இன்னும் எத்தனையோ கவிதைகள், சஞ்சிகைகளிலும் நூல்களிலும் இதழ்மறைவாகவுள்ளன என்று உறுதியாகக் கூறலாம்.

## ஆராய்ச்சியாளர்

அடிகளார் காலம் தோறும் நாகரீக வரலாற்றுக் கட்டுரைகள் எழுதியபோது மேற்றிசைச் செல்வம், யவன புரத்துக் கலைச்செல்வம், எகிப்திய நாகரீகம் என்பன வெல்லாம் எழுதியதோடு தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டில் பரவிய வரன் முறையையும் எழுதினார்.

அடிகளார் மிக ஆழமான ஆராய்ச்சியாளர் என்பதற்கு அவர் எழுதிய உலக புராணம் முதலிய கட்டுரைகள் சான்று பகரும். அவர் பாரத நாட்டின் பழைய வேதகாலத்தையும் அதற்கு முந்திய சிந்து வெளி நாகரீகத்தையும், அதற்கு முந்திய தென்னகத்துக் குமரிக் கண்டச் சிதைவையும் ஆராய்ந்துள்ளார்.

கடல் கோள்கள், வானத்து விண்மீன்களின் சஞ்சாரம் முதலியவற்றைக் கொண்டு அடிகளார் நுணுக்கமான கலை ஆராய்ச்சிகள் செய்தவாறே தமது விஞ்ஞானப் புலமையில் ஒலி, ஒளி முதலிய பாகுபாடுகள் துணை கொண்டும் ஆராய்ச்சி செய்தவராவர்.

## யாழொலி

ஒலி உண்டாகும் வகை அது பரவும் வகை அது ஒலிக்கும் வகை என்றின்னோரன்ன தரங்களை ஆராய்ந்த போதே அவருக்குப் பழந்தமிழ்ப் பாணர்களுடைய பல்வேறு யாழ்களைப் பற்றிய ஆராய்வும் வெற்றியீட்டியதாகும். நரம்புக்கருவிகளாய யாழ்களின் பல்வேறு இனங்கள் பற்றிய ஆராய்ச்சி அவருக்கு அமைவாயிற்று. பௌதிகம் வல்லவருக்கு ஒலி ஆய்வு பழக்கமாயிற்று.

யாழ் வல்லனாய் இராவணன் அன்று இமயப் பிரதேசமெங்கும் ஒலிக்குமாறு இசைத்த யாழொலி அடிகளார் இமயஞ் சார்ந்து 1939ம் ஆண்டு முதலாகப் ''பிரபுத்த பாரத'' என்னும் மாதாந்த ஆங்கில சஞ்சிகை வெளியிட்ட காலத்தில் கேட்பதாயிற்று.

அன்று தொடக்கம் யாழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அவ்வீடுபாடு மிகுதியாய் வளரவே பத்திரிகையையும் விட்டு யாழாராய்வில் ஈடுபட்டார். பத்தாண்டுகளாக ஆராய்ந்த முடிவுகளே யாழ் நூலாக வெளியிடப்பட்டது.

தமிழ் நாட்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்: அடிகளாரின் யாழையும் யாழ் நூலையும் 1947 ஆனி பிற்பகுதியில் அரங்கேற்றினர். பெருந்தலைவர்கள் அடிகளார் தயாரித்த யாழ் வரிசைகளைத் தலைமேல்த் தாங்கிச் சென்றார்கள். யாழ் வல்ல சிவானந்தம்பிள்ளை அவர்களே அந்த யாழ் வரிசையைத் தடவி மீட்டி ஒலி எழுப்பி எல்லோரையும்பரவசப்படுத்தினார். இசைப் பேரறிஞர்கள் தாங்கள் கேட்டின்புற்ற நிலையை உரைந்து விளக்கினார்கள்.

''இசையிடை நுணுகி யாய்ந்து
இசை பெறு யாழ் நூல் யாந்து
இசைத் தமிழாசானாகி
இன் கலைக் கழகந் தன்னில்
இசை வளர் விபுலானந்தர்
இம்பரின் நீங்க வானின்
இசை பொழி அமரராகி
என்றென்றும் வாழ்கின்றானே''

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இசையருவி"

கலாபரணி

தமிழ் ஈழப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டுள்ள ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களாலும். களத்தில் நிற்கும் போராளிகளாலும் இயற்றப்பட்டுத் தேர்ச்சி பெற்ற கலைஞர்களது கைவண்ணத்தில் பொதுமக்கள் மத்தியில் போராட்டத்தை ஜனரஞ்சகப்படுத்தப் படுத்திய இசைப்பாடல்கள் (தமிழீழ எழுச்சிப் பாடல்கள்) முதல் தடவையாக வாத்தியக் கருவிகளால் ஒலிவடிவில் வார்க்கப்பட்டு ஒலிப்பதிவு நாடாவாக விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

அதாவது இதுவரை காலமும் வார்த்தை வடிவில் நம் செவிகளில் ஒலித்த கானங்களை இப்போது வாத்தியக் கருவிகளூடாக சப்தரூபமாகக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த ஒலிப்பதிவு நாடாவில் இன்னொரு புதுமை தமிழர்களின் பாரம்பரிய இசையான நாதஸ்வரமும் தவிலும் மேலைத்தேய வாத்தியங்களான ஓகன், வயலின் முதலான இசைக்கருவிகளோடு சங்கமித்து சுவைஞர்களுக்கு ஏக ராக மேள தாளமாக ஒலிப்பதாகும்.

நாதஸ்வரத்திற்கு இணைவாத்தியம் தவில் தான். இரண்டும் இராஜ வாத்தியங்கள். தமிழகத்தில் சில பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொனிகூடிய தோல் வாத்தியமான தவிலை ஏனைய மென்மையான வாத்தியங்களுக்கு இணை வாத்தியமாக வாசிக்க முடியுமா என்ற ஆராய்ச்சியில் இசையறிஞர்கள் சிலர் ஈடுபட்டார்கள். இதன் விளைவாக ரி. ஆர். மகாலிங்கத்தின் புல்லாங்குழலுக்கு வலங்கைமான் சண்முகசுந்தரம் தவில் வாசித்தார். குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் கச்சேரிக்கு வலையப்பட்டி சுப்பிரமணியம் தவில் வாசித்தார். இவ்வாறு புல்லாங்குழல் போன்ற மென்மையான காற்று வாத்தியங்களுக்கும் வயலின் போன்ற மென்மையான நரம்பு வாத்தியங்களுக்கும் பக்கவாத்தியமாகத் தவில் பயன்படுத்தப்பட்டது. இவை சாகித்தியங்களுக்கும் கீர்த்தனைகளுக்கும் பொருத்தமாக அமைந்தன ஆனால் தமிழ் இசை உலகின் வரலாற்றில் இதுதான் முதல் தடவையாக பாரம்பரிய தமிழ் இசையும் மேலைத்தேய இசையும் எழுச்சிப் பாடல்களுக்கு நாதோதேசம் செய்யப் பயன்படுத்தப்பட்டு அதில் பெரும் வெற்றியும் பெறப்பட்டுள்ளது.

இந்த வகையில் "இசையருவி" ஒலிப்பதிவு நாடாவுக்கு நாதஸ்வரம் வழங்கிய நாதஸ்வரகான வாரிதி வீ. கே. பஞ்சமூர்த்தியும் தவில் வாசித்த தவில் நாதமணி பி. கணேசனும் தமிழிசை வரலாற்றில் புதியதோர் பரிமாணத்தை உருவாக்கியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் இந்தப் பாரிய முயற்சிக்கு வயலின், ஓகன், தபேலா, மிருதங்கம் முதலான வாத்தியக் கருவிகளை இசைத்த கலைஞர்கள் பூரண ஒத்துழைப்புக் கொடுத்துள்ளனர். எல்லா இசைக்கலைஞர்களையும் நெறிப்படுத்திய இசையமைப்பாளர் கண்ணன் அவர்கள் இந்த ஒலிப்பதிவு நாடா உருவாக்கத்தில் ஒரு இசையாகத்தையே நடாத்தியுள்ளார். இவற்றையெல்லாம் தொழில் நுட்பத்தோடு பதிவு இசையாக்கியுள்ளார் ஒலிப்பதிவாளர் நித்தி அவர்கள் சுருக்கமாகச் சொன்னால் ஈழத்து இசை வளர்ச்சியில் இந்த முயற்சி ஒரு மைல்கல் எனலாம். □

---

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தின் "இசையருவி" ஒலிப்பதிவு நாடா 3-11-91 அன்று யாழ்ப்பாணத்தில் கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினத்துரை அவர்களது தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**''மாறிவரும் சமூக அமைப்பில் மணலாற்றுக் கிராமங்கள் வளர்த்த பண்பாட்டுக் கோலங்கள் மருவி மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன. மறைந்து போகவேண்டிய மறக்கப்பட வேண்டிய மரபுகள் நிலைத்திருக்க, மறையக்கூடாத மாறக் கூடாத பண்பாடுகள் மறைந்து போவது வேதனைக்குரியதாகும்.''**

ஓங்கி வளர்ந்த அடர்ந்த காடுகளும், காடுகளின் நடுவே சிறிய் சிறிய குளங்களும், குளங்களை அண்டிய வயல் வெளிகளும், வயல்களையும் குளங்களையும் சார்ந்த மேட்டு நிலங்களில் குடியிருப்புக்களையும் கொண்டது மணலாறு மாவட்டம். பனைஓலைகளாலும், தென்னைஓலையில் பின்னப்பட்ட கிடுகினாலும், வைக்கோல்களாலும் வேயப்பட்ட வீடுகளின் முன்னே நெல்லினை நீண்ட நாட்களுக்கு சேமித்து காக்கும் நெல்லுப்பட்டறைகளும், கொம்பறைகளும், கரையோரம் நெடுகிலும் கடலினையும் கடல்சார் வளத்தினையும் கொண்ட மணலாறு தமிழ் ஈழத்தின் மையமாகவும், வளம்மிகு பிரதேசமாகவும் விளங்குகின்றது.

தெய்வ நம்பிக்கைகளும், காட்டுக்கிழங்குவகைகளும், பழங்களும், மரங்களும், பறவைகளும். விலங்குகளும் மக்களின் வாழ்வோடு ஒன்றிப்போனவை. எருதுகளையும், எருமைக் கடாக்களையும், பசுக்களையும், தன் பொருளாதார மூலாதாரங்களாய்

மா நகர சபை
யாழ்ப்பாணம்

# மருவி, மறைந்து போகும் மணலாற்றின் பண்பாட்டுக் கோலங்கள்.



☐ மணலாறு விஜயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு விளங்கும் மணலாற்றுக் கிராமங் களில் மாட்டுப் பட்டிகளையும் மாட்டு வண்டில்களையும், வீட்டுக்காவலிலும் வேட் டையிலும் வல்ல நாய்களையும் காணமுடி யும்.

காலையிலும் மாலையிலும் கடற்கரை நோக்கிவிரையும்புள்ளினங்களும், அவற்றின் ஆரவார ஒலிகளும், அடர்ந்த காடுகளில் பட்டமரங்களில் பனிக்கால மேகங்களையும் மழைக்காலமேகங்களையும் வாழ்த்தி அக வும் மயில்களும் மணலாற்றின் தனித்துவங் களாகும். விவசாயத்தில் நம்பிக்கைகொண்டு இயற்கையுடன் போராடி பிறந்த மண்ணை யே நேசித்து மண்கொடுத்த விளைவில் வாழ்ந்து அந்த மண்ணிலேயே மடியும் மக் களையும், அவர்கள் தமக்கென்று பேணிய தனித்துவமான பண்பாட்டுக் கோலங்களை யும் கொண்டது மணலாறு.

காலதேவையினாலும், தொழில் தேவைகளினாலும் அரச பணிகள் நிமித்த மும் முக்கியமாக வளம்மிகு நீர்ப்பாசன பயிர்ச்செய்கைக்காக நடைபெற்ற குடியேற் றங்களாலும் ஏற்பட்ட வேற்று மக்களின் ஊடுருவல்களால் அதன் கோலங்கள் அலங் கோலமாய் அழிவுண்டு போவதுடன் பறி போகும் நிலையும் மனதை புண்படச் செய் கிறது. ஆனாலும் அது வளர்த்த பண்பாட் டுக் கோலங்களை புரட்டிப் பார்க்கும்போது பண்பாட்டின் புனிதத்தையும் கொலை, களவு,புரியாத தெரியாத மக்களையும் அவர் களின் தொழில் முறைகளையும், சட்டத் தையறியாத கடவுள் சந்நிதானத்தில் சமா தானங் கண்டு கொள்ளும் ஆழ்ந்த தெய்வ நம்பிக்கைகளையும் சிந்தித்து சிரிக்கவைக் கும் சாதியமைப்பு முறைகளையும், சம்பிர தாயச் சடங்கு முறைகளையும் கண்டு மன தில் நிறைவு கொள்ளலாம்.

**வீடு:-** மணலாற்றின் ஆரம்பகால வீடு கள் சுகாதாரமானவை. பனைஓலைகளினா லும் தென்னை ஓலைகளினால் பின்னப் பட்ட கிடுகுகளினாலும் வேயப்பட்டிருக் கும். நவீன நாகரீக முறையிலல்லாமல் மண்ணினால் சுவர் வைக்கப்பட்டிருக்கும். ஐந்து தொடக்கம் ஆறுமுழ உயரத்தினா லான சுவர்கள் கொண்ட ஓரளவு நீள்சதுர மான வீடாக இருக்கும். ஜன்னல்கள் ஏதும் கிடையாது.

இத்தகைய சில வீடுகளின் முன்னே வீட்டுடன் இணைந்ததாக திண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கும், இத்திண்ணைகளும் வீட்டின் தரையும் சாணத்தினால் மெழுகப் பட்டிருக்கும், பல வீடுகளில் சாணத்துடன் முருக்கமிலைச் சாற்றினையும் சேர்த்து மெழுகுவார்கள். தொட்டுப் பார்த்தால் வழுவழுப்பாகவும் பார்வைக்கு அழகாகவும் இருக்கும் வீட்டின் முன்னே மால் என்ற பகுதி அமைந்திருக்கும். விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதும், ஓய்வு நேரங்களில் சார்மனைக்கட்டில், சாக்குகட்டில் என்ப வற்றில் படுத்து ஆறிக்கொள்வதும் இங்கு தான்.

மாலுக்கும் பிரதான வீட்டிற்குமிடை யிலே முதிரை யாவறணை வைரம் போன்ற மரக்கப்பு (கால்) ஆறினை நட்டு பந்தல் போட்டிருப்பார்கள். வீட்டு முற்றத் தில் எலுமிச்சை, தோடை, மாதுளை போன்ற மரவகைகளை நட்டிருப்பார்கள். முழுவியளத்துக்கு இவை நல்லதென்ற கருத்து இக்கிராமமக்கள் மத்தியில் பெரி தும் நிலவுகின்றது. வீட்டினையும் வீட்டின் சூழலையும் நன்கு சுத்தமாக வைத்துக் கொள்வார்கள். தைப்பொங்கல், சித்திரை புதுவருடப்பிறப்பு போன்ற தமிழர் பண் டிகை நாட்கள் வரும்போது பண்டிகைக்கு ஒருவாரத்துக்கு முன்பே வெள்ளைப்புற்று மண் எடுத்துவந்து வீட்டின் சுவர்களை மெழுகி தீத்திக் கொள்வார்கள். (அழுத்தம் செய்தல்)

வீட்டுச்சூழலில் பலாமரங்களும், மா மரங்களும் வேலிஓரங்களில் முருங்கைமரங் களும் நட்டு வளர்த்திருப்பார்கள். காயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலம்பல் அல்லது பன்றிக்காயா தடிகளை நெருக்கமாக அடுக்கி மாவரையினால் அவற்றை அடக்கி மான்கொடியினால் நன்கு இறுகக் கட்டி அழகுடன் வைத்திருப்பர்.

பிரதான வீட்டின் உள்ளே தைலா பெட்டகம் என்ற பெயர்களுடன் வைர மரப்பலகைகள் கொண்டு வண்ண வேலைப் பாடுகளுடன் அமைக்கப்பட்ட பெட்டிகள் காணப்படும். பெறுமதிமிக்க நகைகளும், உடுபிடவைகளும் அதனுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான வீடுகளில் ஒவ்வொரு மாட்டுத்தொழுவமும், மாட்டுவண்டில் விடுவதற்கான கொட்டிலும் அமைந்திருக்கும்.

உணவு:- மணலாறு மக்களின் உணவில் பால், தயிர், மோர், நெய் என்பன முக்கிய பங்குபெறும். பச்சையரிசிக் குறுணலில் பால்கஞ்சி வைத்து பனம்பழத்தில் கறந்து காயவிடப்பட்ட பனாட்டையும் கடித்துக் குடிப்பார்கள். பழஞ்சோற்றுக் கரையலை குடித்துவிட்டு வயலுக்குச் செல்லும் கமக்காரர்கள் அதிகம் பேர் உள்ளனர். மதிய வேளைச் சாப்பாட்டில் அதுவும் வெள்ளி, திங்கட் கிழமைகளில் குத்துப்பச்சையரிசி. அல்லது குத்துப் புழுங்கலரிசி சோறு சுாய்ச்சி முசுட்டை இலை, தூதுவளை, பிரண்டைத்தண்டு முதலிய காட்டுக் கறி வகைகளை பிடுங்கி வந்து பசுநெய்யிலே வதக்கி குழம்பு வைத்து, பச்சடி போட்டு சாப்பாட்டுடன் சேர்த்துக் கொள்வர்.

வெய்யில் வேளைகளில் உறவினர்களோ விருந்தினர்களோ வந்து விட்டால் தயிரில் மோர் கடைந்து வெங்காயம் கொச்சிக் காய் நறுக்கி சிறிது உப்பும் விட்டு கொடுப்பார்கள். இரவு உணவில் குரக்கன்பிட்டு ஒடியல்பிட்டு, சாமை, அல்லது தினைப் பொங்கல் இடம்பெறும். மூன்று வேளையும் சுவையுள்ள நிறையுணவை உண்டுவாழும் மணலாற்றின் கிராமமக்கள் சிலகாலங்களில் இடையுணவாக காட்டுக்கிழங்கு வகைகள் சிலவற்றையும் உட்கொள்வர். கவலைக் கிழங்கு, அல்லைக்கிழங்கு, என்பவற்றை மார்கழிமாதக் கடைசியிலிருந்து ஒருமாதம் வரை கிண்டி அவித்து பாலும் சீனியும் போட்டு பிசைந்து கவளமாக்கி உண்பார்கள். இன்றும் கூட இத்தகைய உணவை உண்கின்ற மரபை மணலாற்றின் கிராமங்கள் சிலவற்றில் காணமுடிகின்றது.

விருந்தோம்பலும், உபசாரமும், உபகாரமும் மணலாறு கிராமமக்களிடம் காணப்படும் தனித்துவமான பண்பாகும். அதிக மாடுகளை வைத்திருக்கும் கமக்காரர் வீடுகளில் பாலினைக் காய்ச்சி தயிராக்கி ஒவ்வொரு நாட் காலையிலும் கிராமத்திலுள்ள மக்களுக்கு பகிர்ந்துகொடுப்பார்கள் இவ்வுயர்ந்த பண்பினால் வறுமையால் வாடும் கிராமியக் குடும்பங்கள் சில ஆறுதல் பெற வழியேற்படுகின்றது.

தொழில்;- கடற்கரை சார்ந்த பிரதேசத்தை மணலாற்றில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் கொண்டிருந்தாலும் நெற் செய்கையிலேயே ஆரம்பகாலந் தொட்டு அதிக அக்கறை காட்டுகிறார்கள். வயற்காடு அக்கரை வெளி, காரைவாய்க் கால் அமரிவயல், மருதமடுக்குளம, ஆமையன்குளம், வரம்புபோட்டபுலவு, பணிவயல் என வரும் ஊரின் பெயர்கள் யாவும் மணலாற்றின் வயல்வளத்தையே காட்டி நிற்கின்றன. இதனால் விவசாயத்துடன் தொடர்புபட்ட பண்பாட்டுக் கோலங்கள் இப்பிர தேசத்தில் மக்களது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

ஒவ்வொரு கிராமமக்களும் ஏதாவது தொழில் செய்யும் சந்தர்ப்பங்களில் ஒன்றுபட்டு செய்யும் உயர்ந்தபண்பு இக்கிராம மக்களிடமுண்டு. கிராமத்திலுள்ள எருமைக் கடாக்களையும், உழவு பழகிய எருதுகளையும் ஒன்று சேர்த்து ஒவ்வொருவருடைய வயலையும் உழுது விதைப்பை மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். சரீர உதவியை நம்பிய இவர்களின் தொழில் ஒற்றுமை இவர்களை வாழவைக்கிறது. நெல் அறுவடைக் காலங்களிலும் ஒன்றாகச் சேர்ந்து ''பரத்தை வெட்டு'' என்ற முறையில் வெட்டிச் சூடு வைப்பர். பரத்தை வெட்டின்போது அருவிச்சிந்து, பிள்ளையார்சிந்து, குருவிச்சிந்து போன்ற பாடல்களை ஒருவர் பாட அதன் தாளத்துக்கேற்ற முறையில் ஏனையோர் அரிவு வெட்டுவர்.

இத்தொழில் முயற்சியில் கூட்டுணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட்டு வந்தமை இக்கிராம மக்களின் உயர் பண்பை காட்டுகின்றது. பரத்தை வெட்டின்போது வயல் சொந்தக்காரன் எதிர் நோக்கி வருவாராயின் உப்பட்டியை அவர் முன்னே போட்டு குற்றவாளியாக்கி, அனைவரும் சூழ்ந்து குற்றத்துக்காக ஏதேனும் கொண்டு வரும்படி கேட்பார்கள். அதற்கு கமக்காரன் உடன் பட்டதும் தொடர்ந்து வெட்டினை மேற்கொள்வார்கள். வெட்டி சூடுவைத்து முடிந்ததும் வயல் சொந்தக்காரனுக்கு தலைப்பாகை கட்டி வீதிதோறும் ஆடிப்பாடி அழைத்துச் செல்வார்கள். வீட்டை அண்மித்ததும் நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றி வரவேற்பர் பின்னர் வந்தவர்கள் யாவரும் அங்கு விருந்துண்டு மகிழ்வர்.

அரிவு வெட்டி சூடு வைக்கும் இடத்தினை சூட்டுக்களம் என்று அழைப்பர்.



*அந்தப் பசி*
*மனதுக்குள்*
*நித்தமும் பொங்கும்!*

*அது தொடரும்!*
*இரவில், தனிமையில்*
*உறக்கத்திற்கு முன்னர்*

*ஓராயிரம்*
*கதைகள் சொல்லும்!*

*அதுதான்*
*என் கிராமத்தை*

*பார்க்க வேண்டும் என்கிற*
*பசி! ராட்சச பசி!*

*ஒரே நாளில்...*
*ஒரே நிமிஷத்தில்*
*நாங்கள்*
*நாடு கடத்தப்பட்டதை*
*உணரும் பொழுதில்*
*வேதனைகள் விஸ்வரூபமெடுக்கும்!*

*என் அழகிய கிராமமே!*
*நீ இப்போது*
*எப்படியிருக்கிறாய்?*

*அந்நியனின்*
*ஆயுதங்களுக்கு*
*அஞ்சியா இருக்கின்றாய்?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடு அடிக்கும் நாளில் பெண்கள் களத்துக்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஐயனார்க்கு மடை பரவி ஏனைய தெய்வங்களுக்கு பொங்கித் தெளித்து, கமக்காரன் வந்து கிழக்கு முகமாக நின்று கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து வேலைக்காரன் கம்பினால் நெற்கதிரை எடுத்து "பொலி பொலி பொலி தாயே பொலி பொலி" என்று கூறி களத்தின் நடுவே போடுவார். மும்முறை இவ்வாறு செய்த பின் வலது புறமாக சூட்டினை தள்ளி ஒற்றை விழும் எண்ணிக்கை கொண்ட பிணையல் மாடுகளை இறக்கி சூடுவளைப்பர்.

சூடடிப்பு முடிந்து பொலி தூற்றும் போது சிந்து பாடும் மரபு நிலவியது. பொலி தூற்றி முடிந்ததும், முதலில் குறிப்பிட்ட அளவு நெல்லை தனியாக எடுத்து வைப்பர். அது கோயில் நெல் என்று அழைக்கப்படும். சூடு அடிக்கும் பொழுதும், பல குழு உக்குறிச் சொற்களை பயன்படுத்துவர். கடகத்தை பெருவாயான் என்றும் சாக்கினை பெருவயிறன் இளையான் என்றும், கழிபடும் நெல்லை கந்து அல்லது முகப்பொழி என்றும் சுளகினை குல்லம் என்றும் நெருப்பினை வெளிச்சக்காரன் என்றும் நெல்லினைக் கூரன் என்றும் வைக்கோலை பொலிக்கொடி என்றும் வெற்றிலையை வாடல் என்றும் அழைப்பார்கள். சொந்தப் பெயரைக் குறிப்பிடின் அதனையும் குற்றமாக்கி விடுவர்.

# எனது பசி!

☐ வவுனியா திலீபன்

*நான் நடந்து திரியும்*
*அந்த மணல் பாதைகளில்*
*இனவெறியர்*
*இரவு பகலாய் அலைகிறார்களாம்*
*மெய்யா?*

*என் இருதயத்துள்*
*இளமைப் பாடம்*
*நடாத்திய*
*அந்தப் பச்சை வயல் வெளிகளில்*
*நெருஞ்சியா பூத்திருக்கிறது?*

*எனக்குத் தெரியும்*
*மனிதன் விரட்டப்படும் போது*
*மிருகம் சிரிக்குமென்று*
*எனக்குத் தெரியும்*

*ஒரே நாளில்*
*ஓடி வந்தவர்களெல்லாம்*
*உட்கார்ந்திருக்கவில்லை.*

*ஓசையெழுப்பத் தொடங்கியுள்ளனர்*
*உள்ளத்தில்*
*எழுச்சியின்*
*பாஷையை கற்றுக் கொள்கின்றனர்.*

*என் பசி இதுதான்,*
*மீண்டும்*
*என் கிராமத்தின்*
*மடியில்*
*நான் தலை வைத்து*
*உறங்க வேண்டும்!*

*திசையற்றுத் திரியும்*
*என் தோழர்களைத்*
*தொட்டுக் கொள்ள வேண்டும்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வந்த நெல்லினை நெல்லுப் பட்டடை அல்லது கொம்பறை அமைத்து நீண்ட நாட்களுக்குப் பாதுகாத்து வைப் பர். மணலாற்றுக் கிராமங்களில் பெரும் பாலான இடங்களில் பட்டடை அமைத்து நெல்லினைப் பாதுகாக்கும் முறையே வழக் கில் இருந்தது. ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு பகுதிகளில் கொம்பறை அமைக்கும் வழக் கமும் நிலவியதுண்டு. பறண் அமைத்து அவற்றில் பொலிக்கொடியினை நன்கு பரவி பொலிக்கொடியை கத்தையாக்கி நான்கு புறமும் அடுக்கி உயர்த்தி அதனுள் ளே நெல்லினைப்போட்டு பொலிக்கொடி கத்தையினாலேயே மூடிவிடுவர். நெல்லு டன்வேப்பிலைகளை கலந்து பட்டடைக்குள் கொட்டுவர்.

இவ்வாறு பாதுகாக்கப்படும் நெல் எவ்வித பாதிப்பிற்கும் உட்படமாட்டாது. பட்டடையிலிருந்து வெள்ளிக்கிழமைகளில் நெல் வெளியே எடுக்கமாட்டார்கள். இலக் குமி வீட்டை விட்டு வெளியேறுவதாக மக்கள் நம்பினர். இன்றும் இந்தப்பண்பு நிலவிவருதல்குறிப்பிடத்தக்கதாகும். பொது வாக தொழிலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் தெய்வநம் பிக்கை இக்கிராமங்களிலுண்டு. இன்று பெரும்பாலான பண்பாட்டுக்கோலங்கள் மறைந்து போய் விட்டன. அத்துடன் கமத்துடன் மீன்பிடித் தொழிலுக்குப் மண லாற்றின் கரையோரக் கிராமங்கள் முக்கி யத்துவம் கொடுக்கத் தொடங்கிவிட்டன.

**தெய்வவழிபாடு:-** அறிவு வளர்ச்சியற்று நாகரிக வளர்ச்சியற்றிருந்த ஆரம்பகாலம் மக்கள் தெய்வவழிபாட்டில் அதிக நம்பிக் கை வைத்திருந்தனர். தமக்கோ தாம் வளர்த்த பயிர்களுக்கோ, மிருகங்களுக் கோ, நோய் வந்தால் அது தெய்வத்தின் குறைபாடென்றும் தெய்வத்தால் தான் பரிகாரங் காணமுடியுமென்றும் நம்பினர். பிள்ளையார், ஐயனார், அம்மன் வழிபாட் டில் மணலாறு மக்கள் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். பிள்ளையாரை பொது வாக எல்லா வேளைகளிலும், பயிர்களுக்கு நோய் வரும்போதும், தனிவழி போகும் போதும், நீர்வழி செல்லும்போதும் ஐய னாரையும், தடிமன், தலையிடி, காய்ச்சல் சின்னமுத்து, பெரியம்மை வந்தால் அது அம்மனால் வந்ததென்றும் கூறி வழிபாடு நடத்தினர்,

இதனால் அம்மனுக்கு வணக்கம் செலுத் தும் மரபாக வருடாவருடம் காத்தவரா யன் என்ற நாட்டுக்கூத்தினை ஆடுவர். வருடமொரு முறை வரும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கலுக்கு மாட்டு வண்டில் பூட்டி சவாரி முறையில் சென்று வருவர். தமக்கும் தாம் வளர்த்த மாட்டுக் கும் நோய் வந்தால் அல்லது மாடு கண்டு காணமால் போய்விட்டால் 'நேர்த்தி' வைப்பர். ஒரு நாணயக்காசை வெள்ளைத் துணியில் முடித்து வீட்டின் வளையில் அல்லது பூட்டுத்தடியில் கட்டிவிடுதலே நேத்தி எடுத்து வைத்தலெனப்படுகிறது. தமது நம்பிக்கை பலித்தவுடன் தாம்வழி படும் தெய்வத்தை வணங்கி பொங்கல், மோதகம், வாழைப்பழம் படைத்து வழிபடு வர். வைரவர், ஐயனார் போன்றோருக்கு மடைபரவும் வழக்கமும் இருந்து வருகிறது. குலை குலையாக வாழைப்பழம் வைத்த லையே மடைபரவுதல் என்பார்கள்.

தனிவழிபோகும்போது, அல்லது பாலைப்பழத்துக்கு போகும்போது அல்லது தண்ணீருக்குள்ளாக செல்லும்போது கரடி கடிக்கவந்தால், முதலை கடிக்கவந்தால் ஐயனறிய என்னைத்தொட வேண்டாம். என்றால் அவை விலகிச் சென்றுவிடும் என்ற நம்பிக்கையுண்டு. ஆண்டாங்குளத்து ஐயன் சின்னப்பிள்ளை அக்காவுச்குத்தான் அடங்கும் என்றும் ஏதாவது நோய்நொடி வந்தால் அவரிடம் சென்று நூல் கட்டி னால் சரிவரும் எனவும் நம்பினார்கள். பேய், பில்லி, சூனியம போன்ற மூடநம் பிக்கைகளும் இக்கிராம மக்களிடம் நிறைய உண்டு. அமரிவயல் கிராமத்தில் பேய்க் கார சின்னையா என்ற பெயர்கூட ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கு இருந்தமை இந்த உண்மையினை தெளிவாக்குகின்றது.

**பண்டிகைகள்:-** சித்திரைப் புதுவருடம் தைப்பொங்கல், தைப்பொங்கலை அடுத்து வரும் பட்டிப்பொங்கல், தீபாவளித்திருநாள் தைப்புதுவருடப்பிறப்பு, நத்தார்பண்டிகை என்பன மணலாற்று மக்களின் வாழ்வில் சிறப்புமிகு பண்டிகைகள். புதுவருடம் வந்து விட்டால் ஒரிரு வாரத்துக்கு முன்னே வெள்ளைப்புற்றுமண் எடுத்துவந்து வீட்டுச் சுவர்களை அழகுடன் மெழுகுவார்கள் வீடுகளை தூசிதட்டி சாணம் எடுத்து மெழுகிவிடுவார். புதுவருடதினத்தன்று ஆலயத்துக்குச் சென்று மருத்துநீர் வாங்கிவந்து தலைக்குவைத்து முழுகி புத்தாடைஅணிந்து வீட்டுவாசலில் கோலம் போட்டு நிறைகுடம் வைத்து பொங்கிப்படைத்துண்பர். பின்னர் ஆலயவழிபாடுமுடிந்து பாட்டி, பாட்டன் வீட்டிற்கு சென்று அதன் பின்னர் உறவினர் வீடுகளுக்கு செல்வார்கள்.

நல்லநாள் பார்த்து உறவினர் வீடுகளுக்கு செல்லவேண்டுமென்றும், இல்லையேல் அந்த வருடத்தில் உறவுக்குப்பங்கம் ஏற்படும் என்றும் கருதினர். எட்டுநாட்களுக்கு புதுவருடத்தை கொண்டாடுவர். இந்த நாட்களில் கைவிசேடம் பெறுவர். வெற்றிலை, பாக்கு, பூ என்பவற்றுடன் சில்லறை நாணயங்களை வைத்து கிழக்கு முகமாக நின்று இதனைக் கொடுப்பர். வஞ்சகமற்ற நல்லமனம் படைத்தவர்களிடம் இக் கைவிசேடம் பெற்றால் வீட்டில் செல்வம் பெருகும் என நம்புகின்றனர். வீடுகள் தோறும் ஊஞ்சால் அமைத்துவிடுவர். இதனைவிட பொது இடங்களிலும் இரட்டை ஊஞ்சால் கட்டப்பட்டிருக்கும். ஊஞ்சால் கட்டியபின் சாணத்தினால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல்லுக்குத்தி அதனை முதலில்வைத்து பாடல்கள் பாடி ஆடுவர்.

பின்னர் ஊஞ்சல் ஆடி வருடம் 8 நாட்கள் வரையிலும் பிள்ளையாரை அந்த மரத்தடியினுள் வைத்திருப்பர். தைப்பொங்கல் நாளிலும் இத்தகைய கொண்டாட்டங்கள் இருக்கின்றன. இக்கிராமங்களில் இத்தகைய பண்டிகை நாட்களில் பெண்களே அதிகமாக ஊஞ்சல்ஆடி மகிழ்வர். இளைஞர்கள் தட்டுக்கோடு வார்பாய்த்தல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவர். இன்றும் இத்தகைய பண்பாட்டுக் கோலங்கள் பேணப்பட்டு வருகின்றன. இப்பண்டிகை நாட்கள் உறவுமுறைகளையும். ஒற்றுமையினையும் வளர்க்க பெரிதும் துணைபுரிகின்றன என்றால் அதில் மிகையில்லை.

**உறவுமுறைகள்:-** மணலாற்றின் கிராமங்களது உறவுமுறைகள் விநோதமானவை ஒவ்வொரு கிராமங்களும் ஒரு மூலக் குடும்பத்திலிருந்து தோன்றிய இரத்த உறவுக் குடும்பங்களையே கொண்டிருக்கின்றன. கோயில்திருவிழாக்கள், திருமணவைபவங்கள், மரணச்சடங்குகள் என வந்துவிட்டால் கிராமமே அங்கு கூடிநிற்கும். அனுபவம் வாய்ந்த மூத்தவர் வார்த்தைப்படி காரியங்கள் நிறைவேறும். திருமணஞ் செய்தலை சம்பந்தஞ் செய்தல் எனக் குறிப்பிடுவர். தாய்மாமன் மகளை அல்லது மகனைத் திருமணம் செய்கின்ற மரபே நிலவுகின்றது. வெளியூரார் இக்கிராமங்களில் வந்து மாப்பிள்ளை எடுப்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள். அதாவது ஆண்மகனைவேறொரு பிரதேசத்திற்கு அனுப்ப கிராமமக்கள் விரும்புவதில்லை.

திருமணங்கள் பெரிய அளவிலோ சமய ஆசாரப்படியோ நடைபெறுவதில்லை. வசதி வாய்ப்புக்களற்ற கிராமங்களாகையால் உறவினர்கள் சூழ தேங்காயுடைத்து கூறைவேட்டி உடுப்பித்து மஞ்சல் கயிற்றில் தாலிகட்டி மாலை மாற்றுவதுடன் திருமணம் நிறைவுபெறும் இதற்கும் வசதியற்றவர்கள் நல்லநாள்ப் பார்த்து மணமகள் வீட்டில் மாப்பிள்ளையை அழைத்து ''சோறு கொடுப்பித்தல்'' என்ற அளவில் முடிவுறும். திருமணப்பதிவினை 'கசாது' எழுதுதல் என்றே குறிப்பிடுவர். சீதனம் என ஒன்று இருந்ததில்லை. ஒவ்வொருவரும் தம் இயல்புக்கேற்ற வகையில் பசு ... எருமை, வயல், கடுக்கண், காப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழப் போராட்டத்திற்காக தன்னுயிரை காணிக்கையாக்கிய முதலாவது விடுதலைப் புலிவீரன் லெப்டினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவிலே

இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப் படையை அடக்கிவிட முடியும் என்று பாசிச சர்வாதிகாரி ஜே ஆர் ஜெயவர்த்தனா சிறீ லங்காத் தலைநகரில் பிரகடனம் செய்தபோது, நெல்லியடியில் அரசபடைகள் மீது சங்கர் நடத்திய கொரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது., ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப் சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒரு கையில் வெளியே இழுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்த்த லாவகம் சங்கருக்கே உரியது இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறிவைக்கும் அவனது சாதுரியம் அசலானது. நெல்லியடியில் அரச படையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகலவிரித்து பக்க வாட்டில் நின்று அரசபடையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

□ நன்றி. தமிழீழம் இதழ் - 17

அட்டியல், சமையல் உபகரணங்கள் என் பவற்றைக் கொடுத்து வாழ்க்கையை நடாத்த வழியமைத்துக் கொடுப்பர்.

திருமணத்தன்று தடமூதுதல் கோலாட்டமடித்தல் என்பன நிகழ்கின்றன. பெண் வயதுக்கு வந்துவிட்டால் 'சாமத்தியம்' என்ற சடங்குவைபவத்தை நடாத்துவர். அச்சடங்கிற்கு ஆண்கள் செல்வது தடுக்கப் பட்டிருக்கும். ஆண்கள் சென்றால் பெண் களெல்லோரும் கூடி மஞ்சள் நீர்கரைத்து தலையில் ஊற்றுவார்கள் அவ்வாறு செய்வ தால் ஆண்கள் தவறியும் அங்கு செல்வ தில்லை.

திருமணவைபவத்தின் பின்னர் முதல் எதிர்பார்ப்பு குழந்தைப்பேறாகும். குழந் தைப்பேறுடையவளே சமுதாயத்தில் மங் கள வைபவங்களில் முன்மை பெறமுடியும். மகப்பேறில்லையேல் மலடன் மலடி எனப் பெயர் பெறுவதுடன் சமூக நடவடிக்கை களில் புறந்தள்ளப்படுவார்கள் தனக்குப் பின் தன் சந்ததியினைவளர்க்க, செழிக்கச் செய்வது குழந்தைகளேயென்ற நம்பிக்கை மணலாறு மக்களிடம் நிறைந்து காணப் படுகின்றது. மகப்பேற்றுக் காலங்களில் மகப் பேற்றினையும் அதனுடன் கூடிய சடங்கு முறைகளையும் மருத்துவிச்சியே நடாத்தி முடிப்பாள்.

குழந்தை பிறக்கும் சமயம் மருத்து விச்சி தவிர்ந்த வேறு எவரும் அங்கு நிற்றல் கூடாது. குழந்தை பிறந்ததும் ஆண்குழந் தையா பெண்குழந்தையா என்பதைமருத் துவிச்சியின் நடவடிக்கையைக் கொண்டே அறிவர் மருத்துவிச்சி வெளியே வந்து கூரையைத்தட்டினால் ஆண்குழந்தை என் றும் அம்மியில் தட்டினால் பெண்குழந்தை யென்றும் புரிந்து கொள்ளலாம். மூத்த பிள்ளை பெண்குழந்தையாக பிறக்கவேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுமென பெரிதும் விரும்புவர். மூத்தபிள்ளை பெண்குழந்தையாக பிறந்தால் வீட்டுக்கு இலக்குமி வந்துவிட்டதாக கருதுகிறார்கள்.

மூத்த பெண் வளர்ந்து வயதுக்கு வந்ததும், தந்தையாயினும் சரி தாயாயினும் சரி அவளது சொல்லுக்கு மரியாதை கொடுப்பார்கள். இது பெண்மூத்த குடி இங்கு நிலவியதை காட்டுவதல்ல, செம்மலையில் வாழ்ந்த அரியாத்தை என்ற பணிக்கரின் மனைவி குமுழமுனையில் அடக்கமுடியாத கொம்பன்யானையினை. பிடித்துக் கட்டிய வரலாறுகூட பெண்மூத்த குடியை வெளிக்கொண்டுவரும் அம்சமல்ல. பெண்களிடம் தெய்வீக பண்பிருப்பதாக ஆரம்பகாலமக்கள் கருதியதையும், மானம், மரியாதைமிக்க மக்கள் இக்கிராமங்களில் வாழ்ந்ததையுமே இவை குறித்து நிற்கின்றன.

குலமரபு:-

குலமரபெனும் போதுவேறுபட்ட சாதியமைப்பு முறைகளும் அவர்களுக்கென விதிக்கப்பட்ட சில நடைமுறைகளையுமே இங்கு கருதலாம். மணலாற்றுக் கிராமங்களில் உயர்குடிமக்கள் என கருதப்பட்டால் அவரிடம் குறைந்தது பத்துமரக்கால் விளை நிலமும், பால்மாடுகளும் இருக்கும். இவர்கள் உடையார் பரம்பரை அல்லது முதலியார் பரம்பரை என அழைக்கப்பட்டனர். அம்பட்டர், வண்ணார், பள்ளர் ஆகியோர் இப்பரம்பரையினரின் குடிமக்களாவர். இவர்கள் குடிமகன் என அழைக்கப்படுவர். உயர்குடிமக்களின் வாழ்க்கைக்கு நிலைக்களன்கள் இவர்களேயாவர். இவர்களுக்கென நிலபுலன்கள் இருந்ததில்லை. இதனால் இவ்வுயர் குடி மக்களில் தங்கிவாழ்பவர்களாகவே குடிமகன் காணப்பட்டான். இவர்கள் ஆண்டொன்றுக்கு பிரதான சடங்குகள், பண்டிகைகள் வரும்போது சில ஊதியங்களைப் பெற்றுக்கொள்வர் வண்ணார் குடிமைத் தொழிலுக்காக ஆண்டொன்றுக்கு 3 மரக்கால் நெல்லும் பெண் 6 மரக்கால் நெல்லும் பெற்றுக்கொள்வர். பறையர் 2 மரக்கால் நெல்லையும், அம்பட்டர் 3 மரக்கால் நெல்லையும் பெற்றுக் கொள்வர். பரத்தை வெட்டுக் காலத்தில் குடிமகன் ஒருவன் ஒருவயலில் நுழைந்து நின்றால் அவ்வயல் முழுவதையும் அவனிடத்தே விட்டுவிடுகின்ற மரபும் இருந்து வந்தது. மாடுகளும், எருமைகளும் கமக்காரனுக்கும் குடிமக்களுக்குமிருந்தன. அவற்றை தமது மரபுக் குழுக்குறிகள் மூலம் புலப்படுத்தினர். குறிகள் மாட்டின்கன்னம், முன்னங்கால், பின்னங்கால், தொடை வயிறு என்பவற்றில் சுடப்பட்டன, மாராப்பும் கல்லும், நடுக்கயிற்றுக் குறி திருநீற்று மடல், தம்பட்டம், பைக்கிறக்கட்டு, தம் பட்டத்தடி, குத்துவிளக்கு, கன்னத்துப் புள்ளு, நுகம், தராசு, சலைவைக்கல், பெட்டகம் போன்றன குறிப்பிடக்கூடிய குறிமரபுகளாகும். மாறிவரும் சமூக அமைப்பு முறையிலும், நாகரிக வளர்ச்சியிலும், அறிவு வளர்ச்சியிலும் மணலாறு மக்கள் உட்பட்ட இக்காலத்திலும் கூட இக்குலமரபு குறிகள் மாறவில்லையென்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும், சாதியமைப்பிலும், குடிமை முறையிலும் மாற்றங்களும் சீர் திருத்தங்களும் ஏற்படுத்தப்பட்டாலும் மணலாற்றின் சில கிராமங்களில் இன்றும் அவை புரையோடிப் போயுள்ளன என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

மாறிவரும் சமூக அமைப்பில் மணலாற்றுக் கிராமங்கள் வளர்த்த பண்பாட்டுக் கோலங்கள் மருவி மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன. மறைந்துபோகவேண்டிய மறக்கப்படவேண்டிய மரபுகள் நிலைத்திருக்க, மறையக்கூடாத மாறக்கூடாத பண்பாடுகள் மறைந்து போவது வேதனைக்குரியதாகும் தமிழர்களுக்கென்றே அமைந்த தனித்துவமான பண்பாட்டுக் கோலங்களை அழகுபடுத்தி காத்துவளர்ப்பதில் மணலாற்று மக்கள் பின்னின்று விடக்கூடாது.

☐☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை பொது நூலகம் யாழ்ப்பாணம்

ஈழவாணன்

**"தம்பி வந்திருக்கிறான்."**

இவை இரண்டே இரண்டு சொற்கள்தாம். ஆனால் இவற்றைச் சொல்வதற்கிடையிலே செல்லம்மாவின் முகத்தில் வெளிப்பட்ட அச்சத்தையும், அதனால் உண்டான தடுமாற்றத்தையும் அவள் கணவரான ஆசிரியர் கந்தையா விளங்கிக் கொண்டு தம்முள்ளே சிரிக்கத் தவறவில்லை.

''தம்பியோ? அதார் அந்தத்தும்பி? இங்கை அவன் எந்த முகத்தோடை வந்தவன்?'' என்று சீறிச் சினந்து. கேள்விகளாகக் கேட்டுத் தன்னை அவர் துளைத்தெடுப்பார் என்று எதிர்பார்த்து, நடுங்கும் உள்ளத்தோடு காத்திருந்த செல்லம்மாவிற்கு, ஏமாற்றமே ஏற்பட்டது. ஆனால் அந்த ஏமாற்றமும் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியையே தந்தது.

''வந்திருக்கிறானோ? எப்படி இருக்கிறான்? முன்னைக்கு இப்ப ஆளிலை ஏதேன் மாற்றம் இருக்குதே எங்கை? உள்ளுக்குத்தான் இருக்கிறானே?'' என்ற அவரின் கேள்விகள் அவள் எதிர்பார்க்கா



# மனப்பூட்டு உடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவை. கேள்விகளிலும் மேலாகக் கந்தையர் முகத்திலே குதி கொண்ட ஆவலும் அன்புமே செல்லம்மாவைப் போதும் என்று சொல்லும் அளவிற்குக் கிளுகிளுக்க வைத்தன. உள்ளம் போலவே அவளின் கண்களும் உருகி வழிந்தன.

“உங்கைதான் வளவுக்கை நிண்டு விறகு கொத்திறான். கூப்பிடவே?” என்று அவள் கேட்ட பொழுது கந்தையர் என்றும் இல்லாதவாறு பெரும் வியப்படைந்தார்.

கந்தையரின் தலைமகன் நெடுமாறன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே கற்றுத் தமிழ்ப் புலவரான .அவர், தமது தனித்தமிழ்ப் பற்றின் வெளிப்பாடாக அவனுக்கு வைத்து மகிழ்ந்த பெயர் தான் அது.

நெடுமாறன் தந்தையைப் போல நெடியமாறனாகவே திகழ்ந்தான். அவனுக்கு இன்று அகவை பதினெட்டு, தன் பதினாறகவையின்போது அவன் அவரின் தோளுக்கு விஞ்சிவிட்டான். கடந்த ஈராண்டில் அவன் மேலும் வளர்ந்திருக்க வேண்டும்.

நெடுமாறன் தனது பள்ளியில் நிகழ்ந்த மெய்வல்லுநர் போட்டிகளில் எப்பொழுதும் முதல்வனாகவே விளங்கியவன். காற்பந்து, மட்டைப்பந்து விளையாட்டுக்களிலும் அவனுக்கே முதலிடம் கிடைத்து வந்தது. படிப்பிலும் திறமைக்குக் குறைவில்லை. கந்தையர் ‘இவர் என் மகன்’ என்று பெருமிதம் அடைந்த நாள்கள் அவை.

நெடுமாறன் என்ற பெயர் அவனுக்குச் சூட்டப்பட்ட போதிலும் பெற்றோருக்கும் தமக்கைமார் இருவருக்கும் அவன் எப்பொழுதும் ‘தம்பி’ தான். அவனுக்குப் பிறகு செல்லம்மாவின் மணிவயிறு திறக்கவில்லை. எனவே தங்கள் ஒரே மகன் என்பதால் பெற்றோரும், தங்கள் ஒரே தம்பி என்பதால் தமக்கைமாரும் அவனில் உயிரையே வைத்திருந்தார்கள்.

நெடுமாறன் கந்தையரின் இல்லமாகிய சிற்றரசின் முடிக்குரிய இளவரசன். வீட்டிலே குனிந்து ஒரு துரும்பைக் கூட எடுக்க அவனுக்கு எவரும் இடம் வைப்பதில்லை. அவன் முகத்தில் மீசை மயிர் அரும்பும் வரை தாய்தான் அவனுக்குக் குளிக்கவார்த்தாள்; தான் ஓய்வாய் இருக்கின்ற பொழுதுகளில் சோறூட்டினாள். தமக்கைமார் அவனுடைய துணிகளைத் தோய்த்தனர். தந்தையும் இவற்றை அவ்வப் போது மனநிறைவோடு செய்ததுண்டு.



“பிள்ளையைக் கெடுக்கிறியள். செல்லம் அளவுக்கு மிஞ்சிக் குடுக்கக் கூடாது. குடுத்தால் பின்னுக்கு அவனுக்கும் தொல்லை. உங்களுக்கும் தொல்லை” என்று கந்தையருக்கும் செல்லம்மாவுக்கும் உறவினரும் நண்பரும் அறிவுரைகள் வழங்கியதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. “எல்லாம் எங்களுக்குத் தெரியும்” என்று அவர்களிலே சினந்து விழுந்து, தலைமறைந்ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதுகளுக்கு எங்களிலை பொறாமை'' என்று அவர்கள் முணுமுணுக்கவும் தவற வில்லை.

இந்தச் செல்லப்பிள்ளையான நெடுமாறன் தான் தாய் தந்தையை, தமக்கைமாரை மறந்து அவர்களை விட்டு ஓராண்டு பிரிந்து சென்று இன்று திரும்பி வந்திருக்கிறான்.

கந்தையர் சிறிதும் எதிர்பார்க்காத கடும்தொழிலைச் செய்ய முற்பட்டிருக்கிறான்.

இது எப்படி?

அவருக்கு விளங்க வில்லை.

மலைத்து நிற்கிறார்.

''தம்பியைக் கூப்பிட வோ?'' செல்லம்மா மீண்டும் கேட்கிறாள். கந்தையர் திடுக்குறுகிறார்.

''இல்லை. நானே போய்ப் பார்க்கிறன்''

சொல்லும் சொல்லை முந்தி நடையானது உந்தித் தள்ள அவர்வளவைநோக்கி விரைகையில் ..

அவரின் ஆவலும், அன்பும் செல்லம்மாவுக்கு நன்கு புலனாகின்றன.

அவள் தன்னுடைய பெண்களை அழைக்கிறாள்.

''இங்கை வந்து பாருங் கோடி புதுமையை''

☐ ☐ ☐

ஏழு பாடங்களிலே சிறப்புத் திறமை காட்டி க. பொ. த. சா. / தவில் தேர்ந்திட்ட நெடுமாறனை உயர்வகுப்பிலே கணிதப் பிரிவிற் சேர்த்து, ஏழு ஆண்டுகளில் பொறியியலாளராக காணக் கந்தையர் திட்டம் தீட்டத் தொடங்கினார்.

நெடுமாறன் அவர் திட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிந்திடும் வகையிலே கலைப் பிரிவிற் சேர்ந்து படிப்பதில் உறுதியாய் இருந்தான்.

கந்தையர் அவன் முடிவினை மாற்றும்படி மன்றாடினார்; தாய் இரந்தாள்; தமக்கைமார் வேண்டினார்கள்; அவனைக் கற்பித்த ஆசிரியர்களும் கூடிக் கற்ற மாணவர்களும் அறிவுரை கூறினார்கள்.

நெடுமாறன் கொண்டது விடாக் கொள்கையிலே மேலும் மேலும் உறுதிகாட்டினான்.

''என்ர அப்பா தமிழாசிரியர். அவர் படிப்பிச்ச தமிழ் என்னை முற்றாய் ஆட்கொண்டிட்டுது. புறநானூற்றிலையிருந்தும் மற்றத் தமிழ் நூல்களிலையிருந்தும் அவர் படிப்பிச்ச பாடல்கள் என்னைக் கவர்ந்து போட்டுது. கதையள் என்ர உணர்ச்சியைத் தூண்[illegible]. படிச்சால் கலைப்பாடங்களைத் தான் படிப்பன் பல்கலைக்கழகத்திலை தமிழைச் சிறப்புப் பாடமாய்த் தெரிஞ்சு அதை முழுமூச்சாய்ப் படிப்பன். தடுத்தால் படிப்புக்குப் பிரியாவிடைதான்.''

தந்தையின் முன்னிலையிலே நெடுமாறன் தாய்க்கும் தமக்கைமாருக்கும் எடுத்துச் சொன்ன உறுதியான முடிவு இது. இதற்குப் பின்பும் அவனைக் கட்டாயப்படுத்தக் கந்தையருக்குத் துணிவு பிறக்க வில்லை.

தமிழாசிரியருக்கான தலையணைச்சட்டை அணிந்து அந்தப் பணியில் இறங்கிய நாளிலிருந்து அதனைத் தமக்கு ஏற்பட்ட தலையிறக்கமாகவே கருதி வந்த கந்தையருக்கு மகனின் முடிவு வியப்போடு திகைப்பையும் அளித்தது.

''ஏதோ நான் படிச்சதைப் பிள்ளையளுக்குக் கவர்ச்சியுடையதாய் ஆக்க நினைச்சு நல்ல பழந்தமிழ்ப் பாட்டுக்களைப் படிப்பிச்சது உண்மைதான். பழந்தமிழரின்ரை வீரம், மானம் கொடை பற்றியெல்லாம் கதையள் சொல்லவும் நான் தவறேல்லை. அது என்ர பிள்ளைக்கு இப்படி வினையாய் முடியும் எண்டு நான் கனவிலும் நினைச்சிருக்கேல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**''எமது விடுதலை வீரர்கள் இரத்தம் சிந்தும்போது,
எமது இதயம் வருந்துகிறது,
எனினும் நாங்கள் உறுதி தளரமாட்டோம்
ஏனெனில் இரத்தம் சிந்தாமல்,
நாம் சுதந்திரம் பெறமுடியாது.''**

**தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

தமிழ்எங்கள் உயிருக்கு நேர்

எண்டு மேடையிலை நிண்டுதமிழ்த்தலைவர்மார் முழங்கிச்சினம். மேடையாலை இறங்கின உடனையே அவை தமிழ் ஆசிரியரைத் துரும்பாய் நடத்தினதை நான் இன்னும் மறக்கேல்லை. இப்படியெல்லாம் இருக்க என்ர மகன் தமிழ் படிக்கப் போறானாம். நல்லாய் இருக்குது.

''இவனுக்கு எப்பிடிச் சொன்னாலும் விளங்குதில்லை. கணிதத்திலை இவன் மிகத் திறமை காட்டுறான். ஊண்டிப் படிச்சால் பொறியியல் படிப்பு இவனுக்கு ஒரு பொருட்டல்ல. அப்பிடிப் படிச்சுப் பொறியியலாளராய் வந்தால் எவ்வளவு மதிப்பு! எனக்கு எவ்வளவு பெருமை இதையெல்லாம் இவன் நினைக்கேல்லையே!''

சிலகாலம் கந்தையர் இவ்வாறு சிந்தித்து மனங் குழம்பினார். முடிவில்இனிக் கவலைப்பட்டு ஆவதில்லை என்று எண்ணித் தமது திட்டத்தைப் புதுவழிக்குத் திருப்பினார். இப்பொழுது அவருக்கு ஓரளவு ஆறுதல் உண்டாயிற்று.

''எப்பிடியெண்டாலும் படிச்சு முடிக்கட்டும். தம்பி தமிழிலும் திறமை உள்ளவன்தான். தமிழைச் சிறப்பாகக் கற்றுக்கலைமாணித் தேர்விலை முதல் வகுப்புப் பெறலாம். பெற்றால் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலேயே விரிவுரையாளராகலாந்தானே? படிப்படியாய் உயர்ந்து தமிழ்ப்பேராசிரியராயும் வரலாம். தமிழை ஆராய்ஞ்சு ஆயிரம் அடிக்குறிப்புப் போட்டுக் கட்டுரை எழுதினால் உலகப்புகழ்கூடக் கிடைக்கும் 'ஏன்' ஒருகாலத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும் ஆகலா...

''அதுதான் இல்லையெண்டாலும் என்ன? நாட்டாட்சித்துறையிலை சேர்ந்து அமைச்சின்ரை செயலாளர் வரை உயரலாம். அதுவும் இல்லாவிட்டால் வங்கியிலை பணிபுரிஞ்சாலும் முன்னுக்கு வரலாம்.''

கந்தையர் பாட்டுக்குத் தாளம் போடுவதைவிட்டும் தாம் போடுகிற தாளத்துக் கேற்கப் பாட்டைப் பாடுவான் மகன் என்று எதிர்பார்த்து புதிய கனவுகளில் மிதக்கத் தொடங்குகையில்

நெடுமாறன் அவற்றையும் சிதைத்து விட்டு...

பல்கலைக்கழக நுழைவையும் துறந்து விட்டு....

புதியதொரு குறிக்கோளுக்குத் தன்னை ஆட்படுத்திக்கொண்டான்.

கந்தையர் இடிந்து போனார்,

□ □ □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுமாறன் தனது குறிக்கோளை நிறைவேற்ற முனைந்த பொழுது அவன் வீடே அவனைப் பொறுத்தவரை போர்க்களமாக மாறிவிட...

தன் பெற்றோருக்கும், தமக்கைமாருக்கும் எதிராகப் போர்க்கொடி தூக்கி...

துணை வேண்டாச் செரு வென்றியாளனாக அவன் தனிநின்று போராட நேர்ந்தமை, அவனால் முற்றிலும் எதிர்பார்க்கப்பட்டதுதான்.

''தம்பி. நாங்கள் ஊர்ந்துபோற எறும்பைக் கூட நசிக்க அறியம். அப்பிடிப்பட்ட எங்களுக்குப் பிள்ளையாய்ப் பிறந்த நீ, போராடப் போறியோ? முதலிலை என்னையும் அப்பாவையும் அக்காமாரையும் நஞ்சுதந்து கொண்டு போட்டு இயக்கத்திலை போய்ச் சேர். எங்களாலை இதையெல்லாம் தாங்க முடியாது'' என்று சொல்லிச் செல்லம்மா தலைவிரி கோலமாகக் கண்ணீர் பெருக்கிக் கதறியழுதாள். தலையில் அடி அடி என்று அடித்துக் கொண்டாள்; தரையில் விழுந்து புரண்டு கதறினாள்.

''டேய், உன்னை எங்கடை வீட்டுக்குத்தான் பிள்ளையாய்ப் பெத்தம் நாட்டுக்கல்ல. உனக்கு என்ன குறை வைச்சனாங்கள்? சொல்லு பாப்பம் நீ படிச்சு ஆளாகி எங்களுக்குப் பேரையும் மதிப்பையும் தருவாய் எண்டு எத்தனை கனவு கண்டனான், தெரியுமே? எல்லாத்தையும் குழப்பிச் சிதைச்சுப் போட்டுப் போராடப் போறியோ, போராட?

''அப்பிடிப் போறதெண்டால் ஒரே அடியாய்ப்போ, உன்னை முற்றாய்த் தலைமுழுகியிடுறன் ஓ! எனக்கு ஒரு ஆம்பிளைப் பிள்ளை இருந்தானெண்டதையே நான் மறந்து போறன். போடா, போ, என்ர கண் முன்னாலை நில்லாதை போ, நான் உனக்குத் தகப்பனுமில்லை. நீ எனக்குப் பிள்ளையுமில்லை. போ நாயே''

கந்தையர் கத்தினார். அவருக்குக் குருதி அழுத்தம் ஏறிக்கொண்டே சென்றது. உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை நடுங்கியது. சொற்கள் குளறின. வாய் ஒரு பக்கமாக இழுத்துக்கோணியது. கண்கள் செந்நீரைக் கக்கின.

''தம்பி எங்களை விட்டுப் போகப் போறியோ? உன்ரை அக்காமாரிலை உனக்குப் பற்றில்லையோ? உன்னைப் பிரிஞ்சால் நாங்கள் உயிரையே விட்டிடுவம். நீ திரும்பி வரேக்கை இங்கை [illegible] பிணங்களைத்தான் பாப்பாய்.'' என்று தேன்மொழியும் அல்லியும் கதறுகதறென்று கதறினார்கள்.

சிறுகாற்றின் மெல்லிய உளர்விலேயே இதழ் உதிர்க்கும் மென்மலராக நெடுமாறன் விளங்கிய காலம் ஒன்றும் இருந்தது என்பது உண்மைதான்.

ஆனால் இன்று திண்மையான குறிக்கோள் ஒன்றை உள்ளார்ந்து காதலிக்கவும் அந்தக் காதல் முன்னே பிறவிருப்பங்கள் பற்றுக்களைத் துரும்புகளாக ஊதித் தள்ளவுகூடிய மனவலிமை அவனுக்கு வாய்த்திருந்தது. அவன் தன்னை மண்ணாங்கட்டியல்ல, வலிமிகு மலை என்று நம்பிஉறுதிகொண்டு விட்ட நிலையில், எதைத் துறப்பதும் எவருக்கு எதிராகப் போராடுவதும் கடினமல்ல என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

களத்திலே தன் மகன் புறங்காட்டி முதுகில் வேல் வாங்கி இறந்திருந்தால் இவனுக்குப் பால் அருந்திய முலையையே அறுத்தெறிவேன் என்று சூளுரை பகர்ந்ததாய்,

சிறுவன் என்று சிறுசொற் சொல்லிய சினங்கெழு மூவேந்தரையும் ஐம்பெருவேளிரையும் போரில் புறங்கண்டு அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி முரசினை அடிப் படுத்திய நெடுஞ்செழியன் முதலாகத் தன் தந்தைக் குரைத்த வீரமுன்னோர் கள் அவன் உள்ளத்திரை யிலே அப்போது உலாவந் தனர்.

''என்னை வீட்டுக்குத் தான் பிள்ளையாகப் பெற் றதாய்ச் சொல்லிறார் அப் பா, அப்பாவைப் போலை தனக்கொருநீதி பிறருக்கு ஒரு நீதிஎண்டு நான் சொல் லவும் மாட்டன்; வாழவும் மாட்டன். உங்களுக்கு நெடுமாறன் எண்டொரு மகன் இருந்ததையே மறந்து போங்கோ. இனி என்னாலை உங்களுக்கு ஒரு பயனும் இல்லை. நான் வாறன்.''

அன்று போனவன் தான்....

ஓர் ஆண்டு கழிந்து...

இன்று வந்திருக்கி றான்.

□ □ □

செல்லம்மா மகன் போன நாளிலிருந்து நடமாடும் எலும்புக் கூடாகி விட் டாள். உருக்குலைந்த உட லிலும் உடைந்து நொருங் கிய உள்ளமே அவளைப் பெரும் அவலத்திற்கு உள் ளாக்கியது.

தேன்மொழியும் அல்லி யும் தங்கள் இளமைத் துடிப்பு, மகிழ்ச்சி எல்லாம் உதிர்ந்து போகப் பூ உதிர்ந்த செடிகள் போ லப் பொலிவிழந்து தம்பி யையே நினைத்து உருகி வந்தனர்.

கந்தையரோ தமதுகல கலப்பு, இனிய பேச்சு என்ற எல்லாம் பொய் யாய்ப் போக, எந்நேரமும் கடுகடுப்பான முகமும் கடு மையான சொல்லும் உடை யவராய்க் காட்சிதந்தார். நெடுமாறனின் பேச்சு எழுந் தாலே எரிமலைப் பிழம் பாய்க் கனல்வது அவர் வழக்கமாகிவிட்டது.

''அவனைப் பற்றி என்ர காது கேட்கப் பேசக் கூடாது.என்ர மனத்தாலை அவனுக்குச் செய்யவேண் டிய இறுதிக் கடன்களை யெல்லாம் செய்து முடிச் சுப் போட்டன். இங்கை எனக்கு முன்னாலை அவ னைப் பற்றி ஏதும் சொன் னியளோ நான் பொல்லாத வனாய் மாறிடுவன்''

கந்தையர் இதற்கு மே லும் பொல்லாதவராவது எப்படி என்று தாயும், பெண்மக்களும் நினைத்தா லும் அந்த நினைப்பை வெளியிலே சொல்ல அஞ்சி மறுகியது அவர்களுக்கு மட் டுமே தெரிந்திருந்தது.

வீட்டைப் பொறுத்த வரை கந்தையர் முடிசூடா (சூடிய) மன்னர்தாம். ஆட் சிப் பொறுப்பும், ஆளும் உரிமையும் த[illegible]டங் கும் கடமையும் எதிர்பேசா ஊமமும் தமது மனைவி மக்களுக்கும் பிறவியிலேயே அமைந்து விட்டவை என் பது அவர்கருத்து.

எனவே, நெடுமாறன் தொடர்பான அனைத்தி லும் அவரின் வாய்ப்பூட் டுக் கட்டளை மிகவும் பொறுப்புடன் வீட்டில் நிறைவேறி வந்தது.

□ □ □

கந்தையர் தம்முடைய மகனுக்கு மனத்தால் இறு திக்கடன் செய்து விட்ட தாகச் சொன்னதும் அவனை மறந்துவிட்டேன் என்று உறுதி கூறியது மெல்லாம் வெறும் புறக் கூற்றுக்கள் மட்டுமே.

வீட்டாரிலும் எந்த அளவிற்கும் குறையாத வகையில் அவர் அவனை நினைத்துக் கொண்டேயி ருந்தார் என்பதுதான் உண்மை.

பள்ளிச் சீருடையிலே தம்மிடம் கற்று வந்த உயர் வகுப்பு மாணவர்களைக் காணும் போதெல்லாம் அவர் நினைவில் மாறனின் வடிவமே எழுந்து வாட்டி யது. நெடுமூச்சு எறிய வைத்தது.

தமிழிலக்கிய வரலாற் றிலே வீர வழிபற்றி முன் போல உணர்ச்சி பொங்கக் கற்பிக்க இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெப்போலியனின் எழுச்சி வீரச்செயல்கள் பற்றி அன்று நான் படித்தவை இன்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.

மகாபாரதத்தில் வீமன், கர்ணன் ஆகிய கதா பாத்திரங்களைப் படித்தபோது ஒரு மனநிறைவு ஏற்பட்டது. பாரதத்தில் வரும் கதாபாத்திரங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்ப்பார்கள். தன்னிழப்புக்கு, உயிர்த்தியாகத்துக்கு ஒவ்வொரு மணித்துளியும் தயாராக இருந்தானே கர்ணன் அவனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விவேகானந்தரின் பொன்மொழிகள் சிலவற்றைப் படித்தேன். இளைஞர் அணி ஒன்றைத் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் மெல்ல அரும்பிற்று ஆம்! அப்போது எனக்கு வயது 16 தான்."

**தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**
(1986ம் ஆண்டு "இந்து" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்)

அவருக்கு முடிவதில்லை. விழா மேடைகளில் தமிழனின் வீரத்தையும் மானத்தையும் மங்காக்க அவன் நிகழ்த்தியமறப்போரையும் எடுத்து முழங்க அவர் நாக் கூசியது.

எங்கள் வாழ்வும் எங்கள்
- வளமும்
மங்காத தமிழென்று
-சங்கே முழங்கு
என்றோர்
தமிழன் என்றொரு இன
- முண்டு
தனியாய் அதற்கொரு
- குணமுண்டு

என்றோ உணர்ச்சிக் குவியலாய் எடுத்தல் படுத்தலோடு சொல்மாரி பொழிந்திடவும் அவரால் கூட வில்லை; கூடவேயில்லை.

☐ ☐ ☐

தெருக்களிலே பேருந்துகளிலும் உந்துருளிகளிலும் மிதிவண்டிகளிலும் போர்க் கருவிகள் ஏந்திய வண்ணம் சீருடைகளிலே போராளிகளான இளைஞர்கள் சென்றார்கள்.

'சாவே என் இனிய தோழன்' என்று அதனைக் கட்டி அணைத்திடும் மாளாத வேட்கையோடு பகைவர் களத்தில் சென்று நாள் தவறாது வீரர்கள் பாய்ந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்குச் சற்றும் குறையா வீர உணர்வோடும், மண்ணிலும் மக்களிலும் மாண்பார்ந்த மொழியினிலும் மாளாத பற்றுதலோடும் வீர மறத்தியர் பலர் தம் இன்னுயிர்களைக் காணிக்கையா[illegible]கினார்கள்.

மண்ணின் விடிவிற்காய் நீரும் அருந்தாது சாவிற்குத் தன்னைத் தந்திட்ட ஈகம் மிகுந்தோனும் அவ்வண்ணமே ஈகம் வழங்கிய மூதில்பெண்டும் மறைந்தும் மறையாது மக்கள் நெஞ்சங்களிலே அணையேறி அமர்ந்தார்கள்.

இவர்கள்தம் ஈகங்கள் ... இவர்களின் ஒப்பிலாத குறிக்கோள்கள்... இவர்களது மங்காத மறையாத மான் வீரம்...துணிவு வெற்றிப் பெருமிதம் .. தோல்வியில் துளங்காமை.

"இவை ஏன் இப்பிடியெல்லாம் நடந்து கொள்ளினம்? சிறந்த எதிர்காலம் சீரான இளமைக் கனவுகள் இதை எல்லாம் இவை தூசாய்த் துறக்கினமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்?

எதுக்காக?''

மனைவிக்கும் மக்களுக்கும் வாய்ப்பூட்டுப் போட்டு உயிர் ஏந்திய கூடுகளாய் அவர்களை ஆக்கிவிட்ட கந்தையரின் மனப் பூட்டின்மீது இந்தக் காட்சிகளும் கேள்விகளும் கூடி அடிமேல் அடியாக வீழ்ந்து தொடக்கத்தில் பூட்டை அதிர வைத்தன.

சிறிது சிறிதாகப் பூட்டு நெகிந்து...

உடைந்தது; உடைந்து நெஞ்சக் கதவக்கொழுக்கியில் தூங்கியது.

ஆடியபடியே...
தூங்கியது.
ஆனால்...

இன்னமும் வீட்டில் நெடுமாறனின் நினைவுகளை முற்றாகக் களைந்து விட்டவர் போலவே கந்தையர் காட்சிதரத் தவறவில்லை.

இது வியப்புத்தான்.

□ □ □

கந்தையரின் கண்கள் அகலத் திறந்து கொண்டன. கருத்தும் அவற்றிற்கு இணையாக அகலத் தொடங்கியது.

சூழவிருந்த மாந்தரின் சிறுமைகளை, ஆழமாக நோக்கத் தொடங்கினார். நெஞ்சில் உரம் இல்லை. நேர்மைத் திறம் இல்லை. தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் வாழவைப்பதே குறியாகக் கொண்டு. அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமையையும் வித்தூன்றி, உரமிட்டு, நீருற்றி வளர்த்து வந்தவர்களை அவர் இனங்கண்டு, அவர்களிலே தாமும் ஒருவர்தாம் என்ற தாழ்வுணர்ச்சிக்கு ஆட்பட்டு, அவற்றால் உண்டான குற்ற உணர்வினாலே குறுகிப்போய், நெஞ்சிற் கவலை நாளும் வளர்ந்திட நெடுமாறனின் நேர்மையையும் தமது குறுமையையும் நீள நினைந்தார். அப்பொழுது அவருக்கு மேலும் ஓர் உண்மை புலனாயிற்று.

அவருடைய மனப் பூட்டு.........!

நான் ஒரு கந்தையா இல்லை. என்னிலைஇரண்டு கந்தையாக்கள் இருக்கினம். ஒருத்தன் தன்னலமே வடிவானவன். அவனுக்குத் தான் தன்ர மனைவி, மக்கள்தான் பெரிசு, அவையின்ர வாழ்க்கை நல்லாயிருக்க அவன் என்னவும் செய்வான். எந்தச் சிறுமையும் அவனுக்குப் பொருட்டில்லை.

மற்றவன்? இந்தக் கந்தையா மனச்சான்றாலை இயக்கப்படுகிறவன் இவன்தான் உண்மையான மனிதன். உள்ளொன்று வைச்சுப் புறமொண்டு நடக்க இவ[ன...]க் தெரியாது. தன்ர இனம் வாழத்தான் வாழலாம் எண்டு நினைக்கிறவன் இவன் அதின்ர வாழ்வுக்காய்அவன் எதையும் இழக்கத் தயங்க மாட்டான். ஓம் எதையும் இழக்கத் தயங்க மாட்டான்.

ஆனால்......

இந்த இரண்டாம் கந்தையாதானே நெடுமாறனாகி முதலாவது கந்தையாவிலையிருந்து கழண்டு போயிட்டான்?

எஞ்சியிருக்கிறவன்.....

இந்த முதலாங் கந்தையாவாலை ஆருக்கு என்ன பயன்?''

இந்த நினைவு எழுகின்ற போதெல்லாம் சந்தையர் நாணம் கொண்டு கூனிக் குறுகிப்போவார்.

நெடுமாறனை நினைக்கையில் நெஞ்சை நிமிர்த்திப் பெருமிதம் கொண்டு...

கந்தையா ஆசிரியருக்காகக் கூனிக்குறுகி... தலைதாழ்த்தி...

ஐயோ!
இந்த அவலம் ஏன்?

□ □ □

கந்தையா வளவை நோக்கிச் செல்கிறார். நெடுமாறன் அங்கே உடம்பெங்கும் வியர்வையில் குளித்தெழுந்து விறகு கொத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சூரிய உதயத்தோடே அந்த நீண்ட வழிப்பயணம் ஆரம்பமாயிற்று, நீண்ட ஒற்றையடிப் பாதைகள், அந்தப் பாதைகள் நெளிந்தும் கிடந்தன. காடு பற்றிய அறிவு உடையவர்களால் மட்டுமே அங்கு நகர்ந்து கொள்ள முடியும்.

சிறந்த வழிகாட்டியாகக் காந்தி அண்ணனும் செயற்பட்டார். சுற்றிலும் பழகிய காட்டுச் சூழல், இராணுவச் சீருடைகளோடும் இயந்திரத் துப்பாக்கிகளோடும், வரிசையாக நகர்ந்து கொண்டு இருக்கின்றனர். அதிகாலைப் பொழுதில் இருந்து நடக்கத் தொடங்கியவர்கள் இன்னும் பல மைல்கள் நடக்க வேண்டி இருந்தது.

எனது நாட்டில் ஒரு சாண் நிலம் எஞ்சி இருக்கும் வரை, எமது வீரர்கள் நடந்த பாதைச் சுவடுகள் இருக்கும் வரை, எனது தன்னுணர்வு இருக்கும் வரை விடுதலைக்கான பயங்கரப் போரை எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன்.

என்ற தொனிப்பு அந்த வரிசையின் நகர்வில் இருந்து எழுந்து கொண்டிருக்கின்றது.

எல்லோர் முகத்திலும் சந்தோசம் நிறைந்து கிடக்கின்றது. அவர்கள் உறுதியாக நடந்து கொண்டு இருக்கின்றார்கள்.

(தமிழீழ விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலை, உயிரோட்டமாக வெளிப்படுத்தும் ''விடியலுக்கு முந்திய மரணங்கள்'' என்னும் நூலில் இருந்து.)

கொண்டிருக்கிறான். அவன் கந்தையர் வந்ததைக் காணவில்லை.

கந்தையருக்கு மெய் சிலிர்க்கிறது.

நெடுமாறா...

நீ என் மகன் அல்ல,

தமிழினத்தின் இருண்டவாழ்விலே சுடர்விட்டெழும் கதிரவனின் ஓர் ஒலிக் கதிர்தான் நீ,

உனக்கு அழிவில்லை,

உன்னைச் சார்ந்தோரும் என்றும் அழியார்,

ஏனெனில்

நீங்கள் உடலால் வாழ்பவர்கள் அல்ல,

வீரத்தால், ஈகத்தால், மண்மீட்கும் வேட்கையால் அவைதந்திட்ட உரத்தால் உயிர்ப்பால் வாழ்பவர்கள்.

உங்களைப் போலவே உங்கள் குறிக்கோளும் உயர்ந்தது, நிலையானது.

அது ஒருநாள் நிறைவேறும் பொழுது...

உங்கள் நினைவுகள் வரலாறாகி வருகின்ற கால்வழி எங்கும் என்றும் நீடு நின்று நிலைத்து வாழ்ந்திடும்.

ஆகையால்...

நீ வாழ்வாய்,

உன்னை வணங்குகின்றேன்.

இந்த வாழ்த்தும் வணக்கமும்

உன்[illegible]ாக...

வீரமறச் செம்மல்களைச்

சென்றடைந்திடுக?

என்று பாடிப்பரவ வேண்டும் போலத்தோன்றுகின்றது கந்தையருக்கு,

அவர் காலம் என்ற ஊழியினுள்ளே புதைந்தவர் போலவும், ஒரே ஒரு நோக்கிலே, ஒரே ஒரு குறியிலே தம்மை முற்றாக ஆழ்த்திக் கொண்டவர் போலவும்....

நெடிது நிற்கின்றார்.


கண்கள் பனிக்கின்றன.

தமக்குப் பின்னால் செல்லம்மா, தேன்மொழி, அல்லி ஆகியோர் வந்து நின்றது கூட அவருக்குத் தெரியாது. □□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்தனையுலகின் அபூர்வ ராகங்களாக மனித விழிப்புணர்வுக்கு வெளிச்சம் காட்டிய அற்புதமான மனிதர்கள் சிலரை அறிமுகம் செய்து வைக்கிறார் அன்ரன் பாலசிங்கம். இந்த இதழில் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி அறிமுகமாகிறார். அடுத்த இதழில் கார்ள் மாக்ஸ் பற்றிய கட்டுரை வெளியாகிறது.*

# மனித வெளிச்சங்கள்.



ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

யார் இந்த கிருஷ்ணமூர்த்தி?
கடவுள் என்றும், ஞானி என்றும், புத்தனின் அவதாரம் என்றும், அனுபூதிமான் என்றும், ஆன்மயோகி என்றும், தத்துவதர்சி என்றும் நாம் பதிக்கும் சமூக முத்திரைகளுக்கும் நமக்குத் தெரிந்த சாதாரண அளவீடுகளுக்கும் அகப்படாத ஒரு அபூர்வமான மனிதர்.

அவர் யார் என்பதை வரையறுத்துக் கொள்வது கடினம். அப்படி வரித்துக் கொண்டு நாம் அவரைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

'அவர் யார்' என்ற கேள்விக்கு, அவர் யாருமற்றவர் என்பது தான் பொருத்தமான பதில். ஏனென்றால் அவர் தனது சுயத்தை, ஆளுமையை அகத்தின் முகத்தை அழித்துக் கொண்டவர்.

☐ அன்ரன் பாலசிங்கம்

*''யுகம், யுகமாய் நமக்குள், நமது மனக்குகை இருட்டினுள் நாமே வரைந்து விட்ட நிழலுருவங்களை, புனைந்து விட்ட பொய்மைகளை கண்டு கொள்வதாயின் நாமே நமக்கு ஒளியாக வேண்டும் என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.''*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிட்டு
கிருஷ்ணமூர்த்தி

அவர் ஒரு அசாதாரண மனிதர். அழகானமனிதர்.

தொண்ணூறு ஆண்டுகள் வரை நம்மோடு இப் பூமியில் வாழ்ந்தார், இதில் எழுபத்தைந்து ஆண்டு கள் வரை நம்மோடு சதா கலந்துரையாடினார். போதித்தார். எழுதினார்.

மனித மனம்பற்றி மனித உறவுகள் பற்றி மனித விழிப்புணர்வு பற்றி, மனித விடுதலை பற்றி மனித வாழ்வின் சகல சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் மிகவும் கனிவுடன், மிகவும் அக்கறையுடன், மிகவும் துல்லியமான தெளிவுடன், மிகவும் அழகான, அற்புத மான கவிதா மொழியில் பேசினார். எழுதினார்.

அவரது போதனைகள், எழுத்துக்கள், எல்லா வற்றையும் நாம் ஒன்று சேர்த்து தொகுத்துப் பார்த் தால் அவை ஒரு பெரும் தத்துவார்த்தமாகவோ, கருத்துக் களஞ்சியமாகவோ அல்லது ஒரு ஆன்மீக தரிசனமாகவோ அமையமாட்டா. அவை அனைத் துமே நம்மை நோக்கி எறியப்படும் கேள்விகள்; நம் மோடு சேர்ந்து நடத்தப்படும் தேடுதல்கள்; நமது கனவு களைக் கலைத்து, நம்பிக்கைகளை உடைத்து விழிப் புணர்வைத் தூண்டும் விசாரணைகள். கிருஷ்ணமூர்த்தி நமக்கு எவ்வித தத்துவக்கோட்பாடுகளையும் நெறித்து விடவில்லை. ஆன்மீக ஞானதரிசனத்தை அளித்து விடவில்லை. உண்மைப் பொருளை கண்டுகொள்ள ஒரு மார்க்கத்தைக் காட்டவில்லை

யுகம் யுகமாய் நமக்குள், நமது மனக்குகை இருட்டினுள், நாமே வரைந்து விட்ட நிழலுருவங் களை, புனைந்துவிட்ட பொய்மைகளை கண்டுகொள்வ தாயின், 'நாமே நமக்கு ஒளியாக வேண்டும்' என் கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுயதரிசனக் கண்ணாடி.

மனித குலம் இன்று தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் ஒரு பயங்கர அணு யுத்தத்தின் விளிம்பில் நிற்கிறது. உலகமானது பிளவுபட்டு, மனிதஉறவுகள் சிதைபட்டுக் கிடக்கின்றன. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும், மனித இனம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகிறது. இன வாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சி[illegible]த்தங்கள் வன்முறைக்கு தூபமிடுகின் றன. உலகின் பல முனை களில்யுத்தம்,போராட்டம், புரட்சிகள் வெடித்து மனி தனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கிறான். இவ் விதம் மனித வாழ்வு சீர் குலைந்து கிடப்பது ஏன்? மனித உறவுகள் சிக்குப் பட்டு குரோதமடைவது ஏன்? மனிதர்களிடையே அன்பும், அமைதியும் ஒத் திசைவான வாழ்வும செத்துப்போனது ஏன்? மனிதன் முழுமையோடு நிறைவோடு, உள்ளும் புற மும் இசைவாக அமைதி யோடு ஆனந்தமாக வாழ முடியாதா?

மனிதன் நாகரீகங் களைத் தோற்றுவித்தான். அவை அழிந்து போயின. சாம்ராஜ்யங்களைக் கட்டி எழுப்பினான். அவை இடிந்துவிழுந்தன. சமுதாய வடிவங்களை உருவாக் கினான். அவை சிதைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ''சமுதாயப் புரட்சியானது தனி மனிதனிலிருந்து தனி மனிதனின் உள்ளீடான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.''

போயின. மனிதன் மீண்டும் ஒரு உன்னதமான, புதுமையானசமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழைகிறான். சமுதாய அமைப்பை மட்டும், மீண்டும மீண்டும் மாற்றியமைத்து விடுவதால் மனிதன் சுபீட்சமடைய முடியுமா?

தனிமனிதனுக்கு புறம்பான எல்லாம் வல்ல ஒரு சக்தியாக, தனிமனிதனை ஆட்டிப் படைக்கும் சக்தியாக, தனிமனித தனித்துவத்தை நசுக்கி விடும் ஒரு சக்தியாக சமுதாய அமைப்பு இயங்கும் பொழுது அது மனித முழுமைக்கும் விடுதலைக்கும் வழிவகுக்குமா?

சமுதாயம் என்பதே சிக்கலான மனித உறவுகளைக் குறிப்பது அல்லவா? இந்த உறவு எனக்கும் உனக்கும் உள்ள உறவு. அவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள உறவுதனிமனிதஉறவுகளின் ஒட்டு மொத்தமான சிலந்திவலைப் பின்னலாக சமூக அமைப்பு உருவகம் பெறுகிறது. தனிமனிதன் தனது மனவுலக இருட்டினுள் பாதை தெரியாது தடுமாறும் பொழுது, பொய்மைகளில் புதைந்து குழம்பும்போது, எனக்கும் உனக்குமுள்ள உறவுகளில் புரிந்துணர்வு இல்லாதபோது, அவனுக்கும் மற்றவனுக்குமுள்ள உறவுகளில் முரண்பாடு தலை தூக்கும் பொழுது சமுதாயத்தை மாற்றியமைக்க விழைவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அக உலகத்தை அறவே உதாசீனம்செய்து புற உலகத்தை, பொருளுலகத்தை மட்டும் சீரமைப்பதால் மனித வாழ்க்கை சிறப்புற முடியுமா?

இவ்விதம் கேள்விகளை எழுப்பும் கிருஷ்ணமூர்த்தி, முதலில் தனிமனிதன் தனக்குள், தனது மனவுலகில் ஒரு புரட்சியை செய்யவேண்டும் என்கிறார்.

''சமுதாயப் புரட்சியானது தனிமனிதனிலிருந்து. தனிமனிதனின் உள்ளீடான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். தனிமனிதனின் உள்ளீடான புரட்சி நிகழாமல், மனவமைப்பு மாற்றப்படாமல், தனிமனிதனுக்குப் புறம்பாக, வெளியே நிகழும் எவ்வித புதுமையான சமூகப் புரட்சியும் உள்ளடக்கத்தில் உயிரற்றதாகவே இருக்கும். உயிர்த்துடிப்புள்ளதும் சிதைந்துபோகாததுமான ஒரு புதிய சமூக வடிவத்தைக்கட்டி எழுப்புவதாயின் தனி மனிதனின் மனவரங்கில் ஒரு புரட்சி நிகழ்வது அவசியம்'' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

இந்த மனப்புரட்சியானது பிரக்ஞையின் விழிப்புணர்வாக. பிரக்ஞையின் அடித்தளத்திலிருந்து வெடித்தெழ வேண்டும்.

நானே என்னைப் புரிந்துகொள்ளாதவரை, வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளாதவரை, பொய்மைகளின் இருண்ட சுவர்களுக்குள் நான் சிறைபட்டுக் கிடக்கும்வரை நான் மற்றவனைப் புரிந்துகொள்வது எங்ஙனம்? இந்த சமூகத்தையும் உலகத்தையும் அறிந்து கொள்வது எங்ஙனம்?

இந்த சமூகமோ, உலகமோ என்னிடமிருந்து மாறுபட்ட. ஒரு பூடகமான பொருளல்ல. நானே இந்த சமூகத்தையும் உலகத்தையும் சிருஷ்டித்துள்ளேன். இ[illegible] சமூகமும் உலகமும் எனது சுயத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிங்கமான வெளிப்பாடாக பொருளுருவம் பெற்றிருக்கிறது. எனது ஆசைகள், எனது கனவுகள், எனது விருப்பு வெறுப்புகள், எனது மனப்புற்றிலிருந்து பாம்புகளாகச் சீறும் துவேஷங்கள், வெறிகள் எல்லாமே இந்த சமூக உலகத்தை, சமூக உறவுகளைப் படைத்திருக்கிறது. எனவே, நானே இந்த சமூகம்: நானே இந்த உலகம்.

நான் சிஷ்ருடித்த இந்த சமூக உலகத்தை, நானாகவுள்ள இந்த சமுதாயத்தை, நானே மாற்றியமைப்பதானால் அந்தப் புரட்சி எனக்குள் தொடங்கப்பட வேண்டும். எனது மனவுலகக் களத்தில் அந்தப் போராட்டம் ஆரம்பமாக வேண்டும்.

இந்த உள்ளீடான மானசீக யுத்தத்தில் எனது விடுதலைக்கான ஆயுதம் எனது விழிப்புணர்வுதான். இந்த விழிப்புணர்வு வெளிச்சத்தில் எனது மனதில் வேஷங்களை, கோலங்களை நான் கண்டுகொள்ள வேண்டும். பொய்மைகளைப் கண்டுகொள்ளும் பொழுதுதான் உண்மை புலனாகிறது.

ஆன்மீக யாத்திரை என்றும் அகவுலகப் பயணம் என்றும், தியானம் என்றும் யோகம் என்றும், நமக்குள் ஒளிந்திருக்கும் ஆன்மத்தின் சூட்சமத்தை அறிந்து கொள்வதென்றும், நாம் உலகத்தைத் துறந்து, வாழ்க்கையைத் துறந்து, உறவுகளை அறுத்து, யுகம் யுகமாய் நடத்திய தேடுதலால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் கடவுள் என்று தேடி அலைந்ததெல்லாம் நமது ஆசையின் நிழல்களன்றி வேறொன்றுமல்ல. கால விசாலத்தின் எல்லைகளைக் கடந்து சாவின் நியதியை வென்று, துன்பத்தின் அழுத்தங்கள் அகன்ற ஒரு நித்தியமான, சிரஞ்சீவியான பேரானந்தமான ஜீவிதத்தை கனவு கண்ட நமது விபரீதமான ஆசை கடவுளாகப் பிறந்தது. இந்தப் பூமியில் ஆயிரமாயிரம் கோவில்களைக்கட்டி அதைக் குடியமர்த்தினோம். அர்த்தமிழந்த, அசட்டுத்தனமான நமது வாழ்க்கைக்கு ஒரு பிரமாதமான அர்த்தமாக, ஒரு அலாதியான நம்பிக்கையாக, கடவுள் என்ற கருத்துருவத்தை நாம் தழுவிக் கொண்டோம். நமது மனமோ கனவுலகில், கற்பனையுலகில், நிதர்சனத்திற்குப் புறம்பான புராண உலகில் தூங்குகிறது இந்தப் புராதன மனதால், புளித்துப்போன பழைமையில் புதைந்திருக்கும் மனதால், காலம் காலமாகப் [illegible]களால்

## ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

வனையப்பட்ட மனதால், மூடநம்பிக்கைகளில் திளைத்துப்போன மனதால் சித்தாந்தங்கள், வேதாந்தங்களில் சிக்குப்பட்ட மனதால், கருத்துலகக் கோட்பாடுகளில் கட்டுண்ட மனதால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் ஒரு குருவை வரித்துக் கொண்டோ, ஒரு ஆன்மீக வழிகாட்டியைப் பின் தொடர்ந்தோ, ஆசிரமத்தில் தவமிருந்தோ, மந்திரங்கள் ஓதி, பிரார்த்தனைகள் செய்து அழுதுபுரண்டு ஆண்டவனை வேண்டியோ உண்மைப் பொருளை கண்டு கொள்ள முடியாது,

அறிவுப் பசியில் அலையும் நமது மனமோ கருத்துகளை விழுங்குகிறது. அனுபவத்தைத் தேடித் திரட்டுகிறது. ஞாபகப் பளுவை பெருக்குகிறது. நடமாடும் நூல்களாக, மற்றவர்களது செத்துப் போன கருத்துக்களை சதா

''எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுணர்ந்து கொள்வது தான் சுயதரிசனத்தின், அகப் புரட்சியின் ஆரம்பம்.''

அசை போடும் இயந்திரமாக, எண்ணத்தின் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடக்கும் அறிவார்ந்த மனமும் உண்மையைக் கண்டுகொள்ளாது

எண்ணத்தால். சிந்தனையால், அறிவால், அனுபவத்தால், மனிதன் காலம் காலமாய் வரைந்து கொண்ட கருத்துருவச் சித்திரங்கள் எல்லாம் பழைய மனதை, பயிற்றப்பட்ட மனதை சார்ந்தவை. இந்த பழைய மூளையத்தின் படிமங்களால் மெய்மையின் கதவுகளைத் திறக்கமுடியாது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

''மனித வாழ்வில் எண்ணம் ஏன் இத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்று விசாரித்துப் பார்த்தீர்களா? மனதின் அனுபவக் சடலிலிருந்து ஓயாது அலைமோதும் கருத்துருவங்களாக, படிமங்களாக சதா மனதை உலைத்துக்கொண்டிருக்கும் இந்த எண்ணத்திற்கு நாம் ஏன் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்? மிகவும் தந்திரமாக, மிகவும் நுட்பமாக, மிகவும் சாதுரியமாக இயங்கும் எண்ணமானது தன்னிச்சையில், தனக்கேற்றவாறு சகலத்தையும் திரிபுசெய்து கொள்கிறது நமது உறவுகளிலெல்லாம் பிளவையும் முரண்பாட்டையும் தோற்றுவிக்கிறது. இன்பம் துன்பம் என்று வாழ்வனுபவத்தைக் கூறுபோட்டு, எண்ணற்ற அனுபவக் கூறுகளை மனதின் நினைவறையில் குவித்துக்கொள்ளும் எண்ணமானது அந்த அனுபவக்கிடங்கிலிருந்தே மீண்டும் புனர்ஜென்மம் பெறுகிறது. வாழ்க்கைக்கு இந்த எண்ணத்தால் அளிக்கப்படும் விளக்கங்களும் வியாக்கியானங்களும் தேற்றைய, இறந்த கால அனுபவத்திலிருந்து பெறப்படுபவைதான். ஆகவே எண்ணமானது இறந்த காலத்தை சார்ந்தது பழமையானது'' என்று குறிப்பிடும் கிருஷ்ணமூர்த்தி, எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுணர்ந்து கொள்வதுதான் சுயதரிசனத்தின், அகப் புரட்சியின் ஆரம்பம் என்கிறார்.

எண்ண அசைவின் மையமாக எனது சுயம் இயங்குகிறது. இந்த சுயம் என்றால் என்ன? நான் என்று எனக்குள்ளிருந்து எண்ணிக்கொண்டிருப்பவன் யார்? அவதானிப்பவனாக, அனுபவிப்பவனாக, ஆசைப்படுபவனாக, எனக்குள் என் அகமாக, அந்தரங்க ஆத்மாவாக, என் ஆளுமையாக, என் அகந்தையாக, ஆணவமாக இயங்கிவரும் எனது சுயம் எப்படித் தோற்றம் கொண்டது? இந்த உலகத்தில் எனக்கு எல்லாமே அதுவாக, அதற்காக வாழ்ந்து. அதற்காக அனுபவித்து அதற்காக துயரப்பட்டு, அதை நான் நிரந்தரமான நானாக நம்பி, அலாதியான பிரியத்தோடு நான் வழிபட்டுப் போஷிக்கும் அந்த நான் எனது சுயம், எனக்குச் சொந்தமானது எப்படி?

நான் பிறந்த கணத்திலிருந்து எனக்கொரு பெயர், எனக்கொரு சாதி, எனக்கொரு மதம் என்று எனது சமூகத்தின் சம்பிரதாயப் பொம்மையாக எனது சுயம் வனையப்படுகிறது.

எனது வாழ்வனுபவத்திலிருந்து, எனது நினைவுலகத்திலிருந்து எனது பாரம்பரியத்திலிருந்து. எனது பண்பா[illegible]த்து, நான் எதிர்கொள்ளும் புறவுல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் எண்ணற்ற அழுத்தங்களிலிருந்து எனது சுயம் கருவாகி உருவாகிறது. எனது சுயத்தின் எலும்பும் சதையுமாக இருப்பதெல்லாம் எனது நினைவுகளின் நிழலுருவங்களன்றி வேறொன்றுமில்லை. எனது மனம் சுவீகரித்துக்கொண்ட கோடானுகோடி படிமங்களின் மையத்திலிருந்து எனது சுயம் வெடித்தெழுகிறது. ஆகவே நான் என்பதே ஒரு படிமம். ஒரு மையப் படிமம். காலத்தால் செத்த கருத்துருவங்களிலிருந்து, நினைவுகளின் கல்லறையிலிருந்து உயிர்பெற்று இயங்கும் ஒரு எண்ணம்.

''மிகவும் விழிப்புடன். கூர்மையான கவனத்துடன் கணத்திற்கு கணம் உனது எண்ண அசைவுகளை அவதானித்துப் பார். நீ அவதானிப்பதும் ஆராய்வதும் உனது எண்ணமாக இருந்தால் நீ எதையும் கண்டுகொள்ளப் போவதில்லை உனது விழிப்புணர்வின் பிரகாசத்திலேயே நீ உன்னைக் கண்டுகொள்ள வேண்டும். உனது விழிப்புணர்வு கூர்மையாகி, உனது கவனம் முழுமைபெறும் பொழுது. அவதானிப்பவனாக, சிந்திப்பவனாக, பிரக்ஞையின் மையமாக இருந்துவரும் உனது சுயம் செயலிழந்து விடுவதை நீ கண்டுகொள்வாய், இவ்விழிப்பு நிலையில் மனமானது எண்ணத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அமைதியடைகிறது. எண்ண இயக்கத்திலிருந்து விடுதலையடைந்து, அமைதி கொள்ளும் மனதில் தான் அன்பும், அழகும், ஆனந்தமும். சாத்தியமாகிறது'' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

வாழ்க்கை என்பதே ஒரு மாபெரும் இயக்கம்; ஒரு மாபெரும் சக்தி. நமது மனம், நமது எண்ணம், நமது உணர்வு, நமது ஆசைகள் எல்லாமே இந்த இயக்கத்தின், இந்த சக்தியின் வெளிப்பாடுகள்தான். நமது மனதில், எண்ணத்தில், உணர்வில், ஆசையில் பிணக்கும் போராட்டமும் தாண்டவமாடும்பொழுது நமது உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது இந்த சக்தி விரயமாகிறது. வீணாகிறது. மனித மனமானது விழிப்புணர்வுகொண்டு, தனக்குள் தெளிவு கண்டு, உள்ளும் புறமும் முழுமையான, அமைதியான, ஒத்திசைவான வாழ்வைத் தழுவிக்கொள்ளும் பொழுது எல்லையற்ற சக்தியாக அங்கு ஞானோதயம் பிறக்கிறது, என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

ஜிட்டு
கிருஷ்ணமூர்த்தி

நமது பழைய மனம், பயிற்றப்பட்ட மனம் இறக்க வேண்டும் அந்த சாவிலிருந்துதான் புதிய மனம், புரட்சிகர மனம் பிறக்கமுடியும். அந்தப்புரட்சுர மனமே முழு மனித விடுதலைக்கும். சமுதாய விடுதலைக்கும் வழிவகுக்கும். கிருஷ்ணமூர்த்தி போதிக்கும் மனப் புரட்சியின் சாராம்சம் இதுதான். □□□

## நவம்பர் 27

## மாவீரர் நாள்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ முதுபெரும்
எழுத்தாளர்
அ. செ. மு.

நூலகம் நகர சபை யாழ்ப்பாணம்

**1941** ஆவணியில் பள்ளி வாழ்வு முடித்து ஈழகேசரி வாரபத்திரிகையின் ஆசிரியர் குழுவில் சேர்ந்தது முதலாக இவரது இலக்கியப்பணி ஆரம்பமாயிற்று.

அப்போது இவர் ஏறத்தாழ முப்பது சிறுகதைகள் எழுதியிருப்பார். அவற்றில் மிகப் புகழ்பெற்ற சிறுகதை ''மனிதமாடு''. இக்கதை தமிழ்நாட்டுத் தேர்வுக் கதைத் தொகுப்பு ஒன்றில் இடம் பெற்றது.

ஈழகேசரியின் இலக்கியப்பணி ஊடாக இவர் இலக்கிய நண்பர்கள் பலருடன் பேனா உறவை வளர்த்துக் கொண்டார். இத் தொடர்பு பின்னர் மறுமலர்ச்சிச் சங்கம் உருவாகப் பெரிதும் துணை புரிந்தது. வளமான இலக்கிய ரசனையும் தரமான எழுத்தார்வமும் உள்ள மறுமலர்ச்சிக்காரரின் படைப்புகள் முதலில் சங்கத்தின் கையெழுத்துப் பத்திரிகையில் அரங்கேறிப் பின்னர் ஈழகேசரியில் வெளிவரும். வரதர் சு. வே. நாவற்குழியூர் நடராஜன், அ. ந. க, ச. வே. பஞ்சாட்சரம், மகாகவி ஆகியோர் குறிப்பிடற்குரிய மறுமலர்ச்சிக்காரரர்.

இவர்கள் பின்பு மறுமலர்ச்சி என்ற இலக்கிய மாத வெளியீடு ஒன்றினையும் வெளியிடத் துணிந்தனர். இம்மாத சஞ்சிகையின் முதலாண்டு இணையாசிரியராக அ. செ. மு பணி புரிந்தார். மறுமலர்ச்சி சங்கத்தின் தலைவராக இவர் பணியாற்றிய காலத்தில் அது கிராமம் கிராமமாகப் போய் இலக்கிய விழாக்களை நடத்தியது.

ஆறு ஆண்டு மட்டில் இவ்விதம் தொடர்ந்த பணி, பின்னர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றது. சுதந்திரன், வீரகேசரி தினசரிப்பத்திரிகைகளில் அடுத்த ஆறு ஆண்டுகள் இலக்கியம் செழித்தது. 1963 இல் தாயகமான யாழ்ப்பாணத்திற்கு மீண்ட இவர் ஈழநாடு வாரமலர் பொறுப்பாசிரியர் பதவியில் அமர்ந்தார். இலக்கிய மறுமலர்ச்சிச் சேவையினை விட்ட குறையில் இருந்தது தொடரவாய்ப்புக்கிட்டியது.

சுயமாகச் சுதந்திரமாகத் தனிக்காட்டு ராஜாவாகப்பணியாற்ற வாய்ப்புக் கிட்டியதால் இக்காலத்தில் சிறுகதை, தொடர்கதை, கட்டுரை, வாராந்த சுவையம்ச[illegible] இலக்கிய ஆய்வு என்றெல்லாம் நிறை

''முதுபெரும் எழுத்தாளர் அ. செ. முருகானந்தன் அவர்களுக்கும், கவிஞர் அல்லை ஆறுமுகம் அவர்களுக்கும், ''வெளிச்சம்'' மூதலாவது இதழ் வெளியீட்டு விழாவின் போது, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட பத்தாயிரம் ரூபா பணத்தினை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் கோ. மகேந்திர ராசா அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ''துறவறம் பூண்டதன் யாத்திரைப்பாதையில் மனச்சோர்வும் பிணியும் எட்டிப் போக உதவிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரைத் தன் செடியில் பூத்த சிவப்பு ரோஜா என்று வர்ணிக்கிறார்.''

யவே எழுதினார். இவரின் புதிய இருபது சிறுகதைகளும் ஒரு முழுமையான நாவலும் இக்காலத்தில் தோன்றின.

'கல்கி' ஆசிரியரின் நல்லாசியுடன் சிலகாலம் 'எரிமலை' என்ற பெயரில், சுயமாக, மாதமிரு முறைப் பத்திரிகை ஒன்றினையும் வெளியிட்டார்.

ஈழநாடு வாரமலரில் பணியாற்றிய காலத்தில், பத்தாவது ஆண்டு நிறைவு இலக்கியப்போட்டி, சமூக ஏற்றத்தாழ்வுச் சிறுகதைப்போட்டி இரத்ததானச் சிறுகதைப்போட்டி எனப் பல்வேறு போட்டிகளை நடத்திக் கொடுத்துப் போட்டி நடுவர்களில் முதன்மையானவராயும் பணிபுரிந்திருக்கிறார். இதன் பயனாகப் புதிய எழுத்தாளர்கள் பலரின் ஆற்றல் வெளியாக உதவினார் எனலாம்.

சிறு பராயம் முதலாக இவரைப் பிடித்து வருத்தும் ஆஸ்த்மா நோயுடன் இன்று கொடிய போராட்டம் நடத்தும் இந்தப் பழம் பெரும் இலக்கிய நட்சத்திரம் தனது தாயாரின் நற்சிந்தனையே தனது இலக்கிய யாத்திரைக்குப் பக்க பலமாக அமைந்தது என்று இன்றும் மிகுந்த நன்றியுடன் நினைவு கூருகிறார்.

துறவறம் பூண்ட தன் யாத்திரைப் பாதையில் மனச்சோர்வும் பிணியும் எட்டிப் போக உதவிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரைத் தன் செடியில் பூத்த சிவப்பு ரோஜா என்று வர்ணிக்கிறார்.

'அளவையூரான்'

□□ □□

□ கவிஞர்

அல்லை ஆறுமுகம்

## வயோதிபம்,
## வறுமை,
## சுகவீனம்.

உடல் தளவுற்று நடக்க முடியாத நிலையிலும் இலக்கிய உணர்வோட்டத்துடனும், தேடலுடனும் இருக்கும் மனிதன்.

கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் எனப் பல வடிவங்களூடாகவும் இந்த மண்ணுக்கு சேவை புரிந்தவர்.

சிறுகதை, கட்டுரை, நாடகம் எனஎழுதியபோதும் இவர் கவிஞராகவே அடையாளம் காணப்பட்டவர். பல படைப்புக்களை உருவாக்கிய போதும், இவரின் சில கவிதைகள் மட்டும்தான் ''அடைப்புக் குறிகள்'. என்ற நூலாக வெளிவந்தது. பல கவிதைகள் நூலுருப் பெறா[illegible]ள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து சிறுகதைகளையும், ஆறு மேடை நாடகங்களையும் பல கவிதைகளையும் படைத்த இந்த மனிதன் தனது படைப்புக்களினூடு அங்கத (நகைச்சுவை) உணர்வுடன் அரசியல் பிரச்சினைகளை வெளிப்படுத்திய விதம் கவனிப்பிற்குரியது.

இவர் எழுதி நூலுருப் பெறாத இலக்கியங்களும், சேகரித்து வைத்த பல அரிய நூல்களும், வாழ்ந்த வீடும் சிறிலங்கா இராணுவத்தினால் எரியூட்டப்பட்டன.

உட்கார்ந்து கதைக்க முடியாதபடி உடல்நடுக்கம். நடக்க முடியாத வாத நிலை, ஆனாலும் இலக்கியம் பற்றிப் பேசும் போது உணர்வு ததும்ப கவிதைகளின் ரசனைகளைக் கூறும் உற்சாகம்! மாயா கோவஸ்கி, கோச்சிமின், பாப்லா நெருடா. பாரதி போன்ற கவிஞர்களின் கவிதா உணர்வுகளை அனுபவித்துக் கூறும் ரசனை!! தன்னுடைய கவிதைகள் இராணுவத்தால் எரிக்கப்பட்டாலும் அக்கவிதைகளை மனப்பதிவுகளாக வைத்துக் கூறும் போது நெஞ்சில் துயரம் பீறிடுகிறது. தனது ''அடைப்புக் குறிகள்'' கவிதை நூல்கள் எரிக்கப்பட்டது போக மிஞ்சியவற்றை பக்குவமாக ''பொலித்தீன்'' பையில் கட்டி வைத்து இருப்பதை, இப்போது வாழும் குடிசையில் இருந்து எடுத்துக் காட்டினார்.

இரண்டு வாங்குகள் படுக்கைக்கு ஏற்றபடி வைக்கப்பட்டிருந்தன. மேசையில் சில புத்தகங்கள், ஒரு கதிரை, குடிசையின் ஒரு பக்கமாக பாத்திரமும் அடுப்பும் இருந்தன. அவரால் இயலாத போதும் தேநீர்தர வேண்டும் என்ற முனைப்பினால் நெருப்பு மூட்டித் தேநீர் தயாரித்துத் தந்தார். அவரின் பண்பையும் ஆதரிக்கும் மனதையும் கண்டுநெஞ்சு வியந்தது. தமிழ் இனத்தின் துயர நிலையையும், தமிழர்களின் போராட்டம் தொடர்பாகவும், தமிழீழத்தின் விடுதலை பற்றியும் முழுப்பிரக்ஞை கொண்டிருக்கிறார்.

இந்த மண்ணின் குரலான கவிஞர், பசியிலும் பிணியிலும் வாழ்கின்றார். ஒரு கலைஞனின் நிலை, தனது நூல்களை, தான் எழுதிய எழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்க முடியாத சோகங்கள், மிகுந்த இடராகவும். பரிதாபத்திற்குரியதாகவுமாக இருக்கிறது.

**எஸ். கருணாகரன்**

''தமிழ் இனத்தின் துயர நிலையையும், தமிழர்களின் போராட்டம் தொடர்பாகவும், தமிழீழத்தின் விடுதலை பற்றியும் முழுப் பிரக்ஞை கொண்டிருக்கிறார்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்த முடிபு

தா. இராமலிங்கம்



அந்தக் குடும்பம் குடிவாழ்ந்த வீடு
முழுக்க முழுக்க எரிந்து போனது
இப்போது
புதிய கப்பு
புதிய பாய்ச்சு
புதிதாய் வீடு கட்டுறார்.

அன்னை பின்னிக் கொடுக்க
தங்கை எடுத்துக் கொடுக்க
தம்பி உரலில் நின்று கொண்டு.
இளைஞன் சொல்லிக் கொடுத்துக் கொடுத்து
கிடுகு வைத்துக் கட்டுகிறார்

படம் பிடித்தபின்
பேட்டியைத் தொடங்கினேன்.
அன்னையை விளித்து
'பிள்ளைகள் வேறுபேர் இல்லையோ' என்றேன்
அவளின் விழிகள் கலங்கி வழிந்து
அருகே நின்ற
வட்டு வதங்கிய வடலியில் பதிந்தன
பெருமூச்சு எறிந்து அவள் பேசாதிருந்தாள்
'ராணுவம் புகுந்து
வீட்டோடு எரித்துக்
கொன்று விட்டது' என்றான் இளைஞன்
'பிறகும் ஏன் இங்கே கட்டுகிறீர்? என்றேன்
'எமக்கு உரிமையுள்ள நிலத்துண்டில்தானே
எமக்குரிய வீட்டை நாங்கள் கட்டுவோம்'
'மீண்டும் எரித்தால் என்ன செய்வீர்கள்?'
'மீண்டும் எரித்தால் மீண்டும் கட்டுவோம்
கடைசி ஒருவர் உயிர் உள்ளவரை
குடியிருக்க வீடு வேணுமே!
மீண்டும் எரித்தால்
மீண்டும் கட்டுவோம்' என்றான் இளைஞன்,

'ஆமாம்;
மீண்டும் எரித்தால்
மீண்டும் கட்டுவோம்' என்றாள் [illegible]ச்சிறுமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிகழ்வில், அன்றைய நினைவுகள்.

□ கரும் பறவை

ஆனையிறவுப் போர்க்களத்தின் கட்டளைப் பணியகம். அங்கு அத்தாக்கு தலை ஒருங்கிணைந்து நடாத்திக் கொண்டிருக்கும் பொட்டுவின் கண்ணெதிரில் ஒரு போராளி சோர்ந்த நடையில் சென்று கொண்டிருந்தான்.

''சரியெடாப்பா, நாளைக்கு உன்னைச் சண்டைக்கு விடுறன். இண்டைக்கு உசாரா வேலையைச் செய்'' இவ்வாறு அப் போராளியைப் பார்த்துக் கூறிய பொட்டு என்னிடம் திரும்பி,

''எல்லாரும் சண்டைக்குப் போக வேணுமெண்டா என்ன செய்யிறது? மற்ற வேலைகளையும் பாக்க வேணும் தானே. பாருங்கோ! இண்டைக்குச் சண்டைக்கு விடேல்லை எண்டவுடன அலுப்படிச்சுக் கொண்டு திரியிறான்'' என்றவாறே அன்றைய பகற் போரின் முடிவை அறிய தனக்கு முன்னே உள்ள விபரங்களில் பார்வையைச் செலுத்தினார். காயமடைந்தோர் பட்டியல் தனியாகவும், வீரமரணமடைந்தவர்களின் பட்டியல் தனியாகவும் தயாரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவர் பெயரிற்குப் பக்கத்திலும் இவரிற்கு இன்ன இடத்தில் இவ்வாறான காயம் ஏற்பட்டது என சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

முதலில் வீரமரணமடைந்தவர்கள் பட்டியல் - பட்டியலிலிருந்த பெயர்களைப் பொட்டு, படிக்கும் போது எவ்வாறான காயங்களினால் இவர்களிற்கு வீரமரணம் ஏற்பட்டது, எந்த முனையில் இச் சம்பவம் இடம் பெற்றது போன்ற விபரங்களை ஒரு போராளி விளக்கிக் கொண்டிருந்தான். இடையில் இரு பெயர்களை வாசித்த அப் போராளி

''இவை இரண்டு பேரும் பீப்பாக் குண்டால தான் வீரமரணம்'' ..... என்று சொல்லி விட்டு அவர்களுக்கு ஏற்பட்ட காயம் பற்றி... இல்லை, அவர்கள் உடல்கள் கிடந்த கோலம் பற்றி விளக்க வாயெடுத்தான்.



*''இரு காலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். போராட்டத்தின் வளர்ச்சி தெரிகிறது. ஆள் எண்ணிக்கையில் - ஆயுத எண்ணிக்கையில் மட்டுமல்ல, சகலவழிகளிலுமே நாம் வளர்ச்சியடைந்து விட்டோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சொல்லாத'' இடை மறித்தார் பொட்டு, அவர்கள் கிடந்த காட்சி மனக் கண்ணில் தெரிந்திருக்கும் தானே. அதை வாயாலும் கேட்டு... வேண்டாம்! அந்தக் கணத்தில் பொட்டுவின் முகம் ஆயிரம் செய்திகளைச் சொன்னது.

ஒவ்வொரு போராளியின் வீரமரணம் பற்றியும் அவர்களின்காயம்பற்றியும்விளக்கி முடியும் அந்த இறுதி நேரத்தில்,

''இதை விட இன்னும் மூண்டு பேர எடுத்தனாங்கள். அது ஆம்பிளைகளின்ர BODY'' இந்த ஒரு வசனத்தில் அந்தப் போராளிகளின் உடல் எந்த மாதிரியான கோலத்தில் கிடந்திருக்கும் என்பதை-அந்தக் காட்சியை மனதில் படிய வைத்தான் அப் போராளி. அந்த வசனம் போராட்டத்தின் வளர்ச்சி பற்றிய நிலையை அப்படியே என் மனத்திரையில் பதித்தது. இது ஒரு ஆண் போராளியின் உடல் என இனங்காட்டும் காலகட்டம். நான் 82—83 ஆண்டுக் காலத்தின் நினைவுகளில் மூழ்கிக் கிடந்தேன்.

□ □ □

போராட்டத்தில் அழிவு வரும் - சாவு வரும் - பிரிவு வரும். எல்லாம் தெரிந்து கொண்டு தான் போராட்டத்திற்குள் வந்தோம். ஆனால், எம்மில் ஒருவனைப் பிரியும் சூழ்நிலை ஏற்பட்டதும் அது மிகவும் கொடியதாகத் தெரிந்தது எமக்கு. அக் கால கட்டத்தில் நாம் அதைத் தாங்கிக் கொள்ளும் மனோ வலிமையைப் பெற்றிருக்கவில்லை. 'சங்கர் இனிமேல் வரவே மாட்டான் - அவனது பிரிவு நிரந்தரமானது என்பதைத் தெரிந்து கொண்ட போது எமது உடலில் ஒரு அங்கம் குறைந்தது போன்ற உணர்வே ஏற்பட்டது. தலையணைகளை நனைக்கக் கூடிய அளவிற்கு எம்மிடம் கண்ணீர் உண்டா? ஏன் இப்படி நாம் நடந்து கொள்கிறோம்? இந்தப் பிரிவையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாத நாம் போராடுவதற்குத் தகுதியானவர்கள் தானா? என்றெல்லாம் எம்மிடம் வினா எழும்பிய போது ''மென்மையான சுபாவம் உள்ளவர்களே புரட்சிவாதிகள் ஆகின்றார்கள் தமது இனத்திற்கு-மற்றவர்களிற்கு ஏற்படும் கொடுமைகளைக் கண்டு அவர்களால் மனம் பொறுக்க முடிவதில்லை. அவர்களின் இந்த இயல்புதான் கொடுமைகளிற்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தி அவர்களைப் போராளிகளாக உருவாக்குகின்றது. மற்றவர்களிற்கு என்ன கொடுமை - துயரம் இழைக்கப் பட்டாலும் அதைப் பார்த்துக் கொண்டு - அதைச் சகித்துக் கொண்டு இருக்கக் கூடிய கடின மனமுடையவர்களே போராட்டத்திற்கு வெளியில் நிற்கிறார்கள். எனவே அழுவது என்பதை கோழைத்தனம் எனக் கருதலாகாது. மற்றவருக்காக ஒருவன் அழுகின்றான் என்றால் கண்ணீரிற்கிடையே தெரியும் அவனதுமனிதாபிமானத்தை-நேசத்தைதான் காண வேண்டும்'' என்று அன்று சீலன் எமக்கு விளக்கமளித்தான் அப்போதெல்லாம் எமக்குத் தெரியவில்லை - எனக்காகவும் அழ நீங்கள் தயாராக இருங்கள் என்பதைச் சொல்வதற்காகத் தான் இப்படிச் சொன்னான் என்று.

அந்த நாளும் வந்தது - உலகில் எங்குமே நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்க முடியாத வகையில் அவன் எம்மைப் பிரிந்தான். அவனது இழப்பு - அதைவிட அது நடைபெற்ற விதம்! - மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்த அந்தக் காட்சி எம்மை உலுக்கி விட்டது. ''வெளியில நிண்டு அழக் கூடாது. உள்ளுக்குப் போய் அழுங்கோ.''— தனது ஒவ்வொரு பிள்ளைகளின் போக்குப் பற்றியும் - என்ன சொன்னாலும் இவர்களால் அழுவதை நிறுத்த முடியாது - இதை விட அழுகை தான் மனப் பாரத்தைக் குறைக்க வல்லது என்ற உளவியலைத் தெரிந்து கொண்ட தலைவர் இவ்வாறு எமக்கு அறிவுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுக்கு... இதுக்கு.... நாங்கள் என்ன செய்யிறது?... அதுதான் .. அதைச் செய்யப் புறப்பட்டோம். ''பழிவாங்கக் கூடாது! இது விடுதலை இயக்கத்திற்குரிய பண்பல்ல!'' இதைத்தான் சித்தாந்தம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தவர்கள் போதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது தான் எமக்குப் பலமாக இருந்தது - நாம் பழி வாங்கினோம். கொதித்துக் கொண்டிருந்த மன உலையை திருநெல்வேலியில் இறக்கிக் கொண்டிருந்தோம். ஆயுதங்களிற்காகத் தான் அத்தாக்குதல் நடத்தப்பட்டது என எம்மில் ஒருவரும் கருதவில்லை.

எப்படி எப்படி, நினைத்தோமோ அப்படியே சண்டையும் அமைந்தது. ஒரு காட்சி - சூடு வாங்கிய ஒரு இராணுவ வீரன் ஆயுதத்துடன் கிடந்தான் - எம்மில் ஒருவன் அவனை நெருங்கினான். அக்கணத்தில் அந்த இராணுவ வீரனது துப்பாக்கியைக் கைப்பற்ற வேண்டுமென்ற உணர்வு அவனுக்கு வரவில்லை. மாறாக அவனைப் புரட்டி - அவனது இராணுவக் கத்தியை எடுத்து ''டேய் நீ தான் எங்கட சீலனைச் சுட்டனீ? நீதான் எங்கடசீலனைச்சுட்டனீ?'' ...அவனது குரல் - அந்த விம்மல் - அவனை நாம் தடுக்கவில்லை. சீலனைச் சுட்டவன் யாரோ இவன் யாரோ என்பது எமக்குத் தெரியாததல்ல. ஆனாலும் நாம் அதைத் தான் செய்தோம். சித்தாந்தக் காரர்கள் அதைப் பேசிக் கொண்டே இருக்கட்டும். அழுது கொண்டே அவன் செய்தவை அவன் சீலனை எந்தளவிற்கு நேசித்தான் என்பதை எமக்குப் புரிய வைத்தன ஆம்... உலகில் புலிகள் வித்தியாசமானவர்கள் தான். இதைத் தான் தொண்ணூற்றோராம் ஆண்டுச் செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன.

□ □ □

மீண்டும் தொண்ணூற்றோராம் ஆண்டில் நிற்கிறோம் என்ற நினைவு வந்தது. 14-07-91 அன்று மாலை 5-15 மணி. ஆனையிறவில் இருக்கும் காவலரண் ஒன்றை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். காவலரண் பக்கமிருந்து வந்த ஒரு வாகனம் என்னை விலத்திக் கொண்டு யாழ்ப்பாணப் பக்கமாகச் சென்றது. எட்டிப் பார்த்தேன். சற்று முன்னர் வரை எதிரியை நோக்கிதுப்பாக்கியை நீட்டிக்கொண்டிருந்த ஒருவன் மாவீரன் என்ற அந்தஸ்துடன் பயணித்துக் கொண்டிருந்தான். வாகனத்தில் அவனது புகழுடலை ஏற்றிவிட்டு சிலர் வந்து கொண்டிருந்தனர். அதில் ஒரு முகம் எனக்கு நன்கு பரிச்சயமானது.

''ஆஞ்சநேயர்-'' அழைத்த வாறே அருகில் சென்றேன்.

''பெடியன்ர பேர் என்ன?''

''கணேஷ்'' சாவகாசமாக அனைவரும் ஒரு புளியமரத்தின் கீழ் இருந்த காவலரணிற்கு முன்னால் உட்கார்ந்தோம். உரையாடல் தொடர்ந்தது. மேலே ''சகடை'' சுற்றிக் கொண்டிருந்தது. அதன் இரைச்சல் கச்சேரிகளில் கேட்கும் ஆர்மோனியத்தை நினைவு படுத்தியது.

ஆஞ்சநேயரிற்குப் பக்கத்திலிருந்த ஒரு போராளியிடம் சற்றுப் பத்திரிகைத் தனத்துடன்

''சற்று முன்வரை உங்களுடன் காவலரணில் இருந்த ஒருவன் - உங்கள் நண்பன் இப்போது உங்களை விட்டுப் பிரிந்து விட்டான். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் உங்களுடைய மன உணர்வு எப்படி இருக்கும்?'' என்று கேட்டேன், சோகத்துக்கிடையே மெல்லிய புன்னகையுடன்

''இதை எல்லாம் எதிர்பார்த்து இப்படி எல்லாம் நடக்கும் எண்டு தெரிஞ்சு தான் போராட்டத்துக்கு வந்தம். ஆனபடியால் இதுக்காக நாங்கள் அஞ்சப்போறதில்லை. பின்வாங்கப்போறதுமில்லை.'' என்றவாறே தனது துப்பாக்கியைத் துடைத்துக் கொண் .ருந்தான் சீலன் என்ற அப் போராளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[stamp]

''சரி ஆஞ்சநேயர்! இதப் பற்றி நீங்கள் என்ன சொல்லுறீங்கள்?'' என்றேன்.

''இந்தப் போர்க்களத்தில் இப்ப உங்கட கண்ணுக்கு முன்னால போராளிகள் பதுங்கு குழி வெட்டுறார்கள். மண் மூடை அடுக்கிறார்கள். இங்குள்ள சகல கஷ்டமான வேலைகளையும் செய்யிறார்கள். பிறகு, இவர்களே காவல் கடமைக்கும் போகிறார்கள். இப்படியாக களைப்படைந்த நிலையில் ஒரு போராளி காவல் கடமைக்குப் போகும் போது இப்படியான சம்பவங்கள் நிகழ்ந்து விடுகின்றன'' என்றார்.

''இதைத் தடுக்க என்ன வழியெண்டு நினைக்கிறீங்கள்?'' என்று கேட்டேன்.

''போர்க்களத்தில் எமக்கு ஒரு துணைப் படை வேண்டும். அது இருந்தால் போராளிகள் களைப்படையாமல் காவல் கடமையில் ஈடுபடுவார்கள். இதை விட எமக்கு இப்படியான சூழலில் இன்னும் உற்சாகத்துடன் நிற்க விஷேடமான பயிற்சிகள் வேண்டும்.'' என்றார்.

☐ ☐ ☐

இரு காலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். போராட்டத்தின் வளர்ச்சி தெரிகிறது. ஆள் எண்ணிக்கையில் - ஆயுத எண்ணிக்கையில் மட்டுமல்ல, சகல வழிகளிலுமே நாம் வளர்ச்சியடைந்து விட்டோம். அன்று ஒருவரின் மரணம் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியது? இன்று இது ஆணின் சடலம் என்று குறிப்பிடுமளவிற்குப் போரின் தன்மை மாறி விட்டது. இத்தனைக்கும் நடுவிலும் போர்முனைக்கு அனுப்பாததற்காக கோபித்துக் கொள்கிறார்கள் போராளிகள். ஒருவனது மரணம் ஏற்பட்டவுடன் 'இதைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்?' என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது தான் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சி! ☐

## கையெழுத்து இதழ் காலத்தின் தேவை.

''இன்று இளைய தலைமுறைக்கிடையே எண்ணப்புரட்சியை ஏற்படுத்தவும், அவர்களின் இலக்கியத் திறனை வளர்க்கவும், அதன்மூலம் சமுதாயம் மீதான பற்றுணர்வை உருவாக்கவும் இலக்கிய இதழ்களின் பங்கு அளப்பரியதாகும். அச்சு இதழ்களுக்கான நெருக்கடி காரணமாக இப்படியானகையெழுத்து இதழ்களின் வருகை காலத்தின் தேவையாகும். உங்கள் முயற்சி பெரிதும் பாராட்டிற்குரியது.

(21.11.91 அன்று விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அவர்கள் வதிரி தமிழ்ச் சங்கத்தின் ''இளந்தளிர்'' ''மன்றம்'' கையெழுத்து இதழ்களின் ஆசிரியர்களுடனான சந்திப்பில் கூறியது)

## ஒரு நல்ல செய்தி!

அச்சு இதழ்கள் மீதான நெருக்கடி காரணமாக தேங்கிக்கிடக்கும் படைப்பாற்றலுக்கான களமின்மையை கருத்திற் கொண்டு இப்போது வெளியிடப்படுகின்ற கையெழுத்து இதழ்கள் தொடர்ந்தும் வெளிவருவதற்கான ஊக்கத்தையும் உதவியினையும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும். வெளியீட்டாளர்கள் கழகத்தின் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை 25.00

பாடசாலைக்குரிய புத்தகங்கள்,
உபகரணங்கள்,
அன்றாடப் பாவனைக்குரிய
அனைத்துப் பொருட்கள்,
அழகு சாதனங்கள்,
பரிசுப் பொருட்கள்.
தமிழீழ எழுச்சிப் பாடல்
ஒலிப்பதிவு நாடாக்கள்,
தமிழக, தமிழீழ எழுத்தாளர்களின்
இலக்கிய நூல்கள்,
விடுதலைப் புலிகளின் வெளியீடுகள்
இன்னும்
உங்கள் அனைத்து தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்.

நகர
யாழ்ப்பாணம

# தமிழருவி

பல்பொருள் அங்காடி,
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா 25.00

நாடென்ன செய்தது உனக்கு
எனக் கேள்விகள் கேட்பதை விடுத்து
நீ என்ன செய்தாய் அதற்கு
என நினைத்தால் நன்மை உனக்கு

மா நகர சபை
யாழ்ப்பாணம்

யூனிவேர்சல்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org